404

# தமிழ் இலக்கிய மாலை

ஐந்தாம் படிவம்

சிறப்புப் பகுதி

TB
031 (10)
N52
148652

...ா பதிப்புக் கழகம், சென்னை.

# தமிழ் இலக்கிய மாலை

## ஐந்தாம் படிவம் : சிறப்புப் பகுதி

21 NOV 952
MADRAS
600 008

தொகுத்தவர் :

பண்டித வித்துவான்,
லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்,
துணைத்தமிழ்ப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

வர்தா பதிப்புக் கழகம்
திருவல்லிக்கேணி : சென்னை

திருத்திய பதிப்பு—நவம்பர் 1952

600 008.
148652
TB
031(107)
N52

பதிப்புரிமை

Kabeer Printing Works, Madras (2075)

# முன்னுரை

சொற்சுவை பொருட்சுவை செறிந்த இனிய பல செய்யுட்களும், அறிஞர் பெருமக்களின் உயர்ந்த கருத்துக்கள் அடங்கிய சிறந்த பலவகைக் கட்டுரைகளும் இம் மாலைக்கு அழகு செய்கின்றன.

சென்னை அரசியலார் அண்மையில் திருத்தி அமைத்துள்ள பாடத்திட்டத்திற்கு ஏற்ப இம்மாலை வெளிவருகின்றது. ஐந்தாம் படிவத்தில் சிறப்பாகத் தமிழ் பயிலும் மாணவர் படிப்பதற்கு அரசியலார் குறிப்பிட்ட அளவு செய்யுட் பகுதியும், உரைநடைப் பகுதியும் இதன் கண் உள்ளன.

இரு பகுதிகட்கும் வேண்டும் அளவு அருஞ்சொற் பொருளும் கேள்விகளும் பயிற்சியும் ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் சேர்த்துள்ளேன்.

இதன்கட் காணப்படும் செய்யுட்களையும், கட்டுரைகளையும் சேர்த்து வெளியிட உடன்பாடளித்த பெரியோர்கள், பதிப்பாளர்கள் ஆகியோரின் பெயர்க் குறிப்பும் இதன்பின் உள்ளது. உடன்பாடு வழங்கிய அப் பெருந்தகையாளர்கட்கு நான் மிகவும் நன்றி செலுத்தும் கடப்பாடுடையேன்.

லெ. ப. கரு. இராமநாதன்

# பொருளடக்கம்

## செய்யுள்

| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| I. | கடவுள் வாழ்த்து | |
| 1. | தாயுமானவர் பாடல் | ... 1 |
| 2. | பெருமாள் திருமொழி | ... 2 |
| 3. | தமிழ்த்தாய் வாழ்த்து | ... 2 |
| II. | அறவுரை | |
| 1. | திருமந்திரம் | ... 4 |
| 2. | திருக்குறள் | ... 5 |
| III. | காதை | |
| 1. | சிலப்பதிகாரம் | ... 9 |
| 2. | பெரிய புராணம் | ... 13 |
| IV. | சிறுநூல்கள் | |
| 1. | மீனுட்சியம்மை குறம் | ... 18 |
| 2. | திருவரங்கக் கலம்பகம் | ... 18 |
| V. | புனைந்துரை | |
| 1. | மலை | ... 20 |
| 2. | ஆறு | ... 20 |
| 3. | முகில் | ... 21 |
| VI. | பல்சுவை | |
| 1. | களி | ... 23 |
| 2. | வேங்கடசாமியின் கொடைப் பெருமை | ... 23 |
| 3. | வினவுத்தரம் | ... 24 |
| 4. | வாய் ஒன்றுயிருக்கக் கை காதுகள் இரண்டா யிருப்பதன் காரணம் | ... 24 |

## உரைநடை

| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | தலைமை உரை-I<br>—இராவ் சாகிப் திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை, பி.எ., பி.எல். | ... 26 |
| 2. | தலைமை உரை-II<br>—இராவ் சாகிப் திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை, பி.ஏ., பி.எல். | ... 34 |
| 3. | சமய வாழ்க்கை<br>—திரு. எஸ். சச்சிதாநந்தம் பிள்ளை, பி.ஏ., எல்.டி. | ... 38 |
| 4. | பண்டைத் தமிழரசரும் புலவரும்<br>—பண்டித, வித்துவான் திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் | ... 44 |
| 5. | மலைவாசம்<br>—திரு. வி. கலியாணசுந்தர முதலியார் | ... 50 |
| 6. | யாழ்<br>—திரு. பி. கோதண்டராமன், எம்.ஏ. | ... 57 |
| 7. | செட்டி நாட்டரசர் (டாக்டர் சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்கள்)<br>—திரு. இளவழகனார் | ... 63 |
| 8. | காவிரியின் பெருமைகள்<br>—திரு. எம். எஸ். வேங்கடாச்சாரியார், கோ. வில்வபதி, டி. ஆர். ஸ்ரீநிவாசாச்சாரியார் | ... 72 |

# இசைவு வழங்கியவர்கள்

## செய்யுள்

| | |
|---|---|
| முகிலே மைந்நிற முகிலே | திரு. வி. சு. சுவாமிநாதன் |
| சம்பாதித்திட இருகை | The Educational Society, Tirunelveli. (The Madura Diraviyam Thayumanavar Hindu College). |

## உரைநடை

| | |
|---|---|
| செட்டிநாட்டரசர் (டாக்டர் இராஜா சர் அண்ணாமலைச் செட்டியார்) | சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. |
| யாழ் | அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர். |

பிற செய்யுட்களுக்கும், பிற கட்டுரைகளுக்கும் உரிமை யுடைய அவைகளின் ஆசிரியர்கள் இசைவு வழங்கி யுள்ளார்கள்.

# தமிழ் இலக்கிய மாலை

## ஐந்தாம் படிவம் : சிறப்புப் பகுதி

## செய்யுள்

## I. கடவுள் வாழ்த்து

### 1. தாயுமானவர் பாடல்

#### பொருள் வணக்கம்

தாயுமான அடிகள் அருளிச்செய்த பாடல் தொகுதி, தாயுமானவர் பாடல் என்று வழங்கப்படும். அதன்கண் பொருள்வணக்கம் என்னும் பகுதியில் இப்பாடல் உள்ளது. தாயுமானவர் சோழ நாட்டில் திருமறைக் காடு என்னும் ஊரில் வாழ்ந்த கேடிலியப்ப பிள்ளையின் புதல்வர். இவர் விசய ரகுநாத சொக்கலிங்க நாயக்கரிடம் கணக்கராயிருந்து, மௌனகுரு என்னும் ஞான தேசிகரால் உபதேசிக்கப்பெற்று, இறுதியில் இராமநாதபுரத்தில் சமாதி அடைந்தனர். இவர் இல்லறத்திலிருந்து பின் துறவு பூண்டார். இவரது காலம் கி. பி. 17-ஆம் நூற்றாண்டு என்பர்.

விண்ணாதி பூதமெலாந் தன்னகத்தில்
அடக்கிவெறு வெளியாய் ஞானக்
கண்ணாரக் கண்டஅன்பர் கண்ணாடே
யானந்தக் கடலாய் வேறொன்(று)
எண்ணாத படிக்கிரங்கித் தானாகச்
செய்தருளும் இறையே உன்தன்
தண்ணாருஞ் சாந்தவருள் தனைநினைந்து
கரமலர்கள் தலைமேற் கொள்வோம்.

#### அருஞ்சொற்பொருள்

வெறு வெளியாய் - வெட்ட வெளியாய். ஆர - நிறைய. வேறு ஒன்று எண்ணாதபடிக்கு இரங்கி - (அந்த அன்பர்கள்) மற்றொன்றையும் நினையாதவாறு (அவர்களிடத்தில்) மனமிரங்கி. கரமலர்கள் - கைகளாகிய மலர்களை.

## 2. நாலாயிர திவ்யப் பிரபந்தம்

### பெருமாள் திருமொழி

திருமாலின் அடியவராகிய ஆழ்வார் பன்னிருவராலும் அருளிச் செய்யப்பெற்ற தெய்வத்தன்மை அமைந்த பாடல் தொகுதி நாலாயிர திவ்யப் பிரபந்தமாகும். பெருமாள் திருமொழி என்பது குலசேகரப் பெருமாளுடைய திருமொழி என்று பொருள்படும். இவர் சேரமன்னர்; திருவஞ்சைக்களத்தில் பிறந்தவர்; இராமனிடம் மிக்க ஈடுபாடுடையவர். இவ்வாழ்வார் காலம் கி. பி. 9-ஆம் நூற்றாண்டு என்பர்.

அங்கணெடு மதில்புடைசூ ழயோத்தி யென்னும்
அணிநகரத் துலகனைத்தும் விளக்குஞ் சோதி
வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த் தோன்றி
விண்முழுது முயக்கொண்ட வீரன் தன்னைச்
செங்கணெடுங் கருமுகிலை இராமன் தன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்
எங்கள்தனி முதல்வனையெம் பெருமான் தன்னை
என்றுகொலோ கண்குளிரக் காணு நாளே.

#### அருஞ்சொற்பொருள்

வெங்கதிரோன் குலம் - சூரிய குலம். கருமுகில் - கரிய மேகம் போன்ற நிறத்தினை உடையவன். திருச்சித்ர கூடம் - திருமால் கோயில்.

## 3. தமிழ்த்தாய் வாழ்த்து

இப்பாடல் மகாமகோபாத்தியாய, பண்டிதமணி திரு. மு. கதிரேசச் செட்டியாரால் இயற்றப்பெற்றது. இவர் இராமநாதபுர மாவட்டத்தைச் சேர்ந்த மகிபாலன்பட்டியில் தனவணிகர் மரபில் 16–9–1881–இல் பிறந்தவர். தந்தையார் முத்துக்கருப்பன் செட்டியார். தாயார் சிவகாமி ஆச்சி. இவர் வடமொழி தென்மொழிகளில் சிறந்த புலமை படைத்தவர். செய்யுளியற்றுதல், உரைநடை எழுதுதல், சொற்பொழிவு நிகழ்த்துதல் முதலிய வகைகளில் இவருக்கு உள்ள தலைசிறந்த புலமையைத் தமிழுலகம் நன்கறியும். இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகவும், பேராசிரியராகவும், ஆராய்ச்சித்துறைத் தலைவராகவும் இருந்து விழுமிய தமிழ்த்தொண்டு செய்துள்ளார். இவர்

இயற்றிய நூல்கள் : சுக்கிரநீதி, மண்ணியல் சிறுதேர் முதலிய மொழிபெயர்ப்பு நூல்களும், திருவாசகத் திருச்சதகப் பேருரை முதலியனவும் ஆம்.

பாலொடு தேனும் பழச்சுவையும் போன்றினிமை
சாலச் சிறந்த தமிழன்னை—நீல
மணிமிடற்றோன் பெற்ற மடவரல்பொற் பாத
அணிமலரே நல்ல அரண்.

### அருஞ்சொற்பொருள்

சால - மிக. நீல மணிமிடற்றோன் - சிவன் ; மிடறு - கழுத்து. மடவரல் - பெண் ; தமிழ்த்தாய்.

### கேள்விகள்

1. தாயுமானவர் இறைவனை எவ்வாறு புகழ்ந்து வாழ்த்துகின்றார் ?
2. தனிமுதல்வனாகிய இராமன், பெருமாள் திருமொழியில் எவ்வாறு போற்றப்பட்டுள்ளான் ?
3. தமிழன்னை எத்தன்மையள் ?

### பயிற்சி

1. தாயுமானவர் வரலாற்றைப் பத்து வரிகளில் வரைக.
2. 'நீலமணி மிடற்றோன்'—விளக்கிப் பொருள் தருக.
3. பிரித்து எழுதுக :—தன்னகம், கண்ணரை, வேறொன்று, தண்ணரும், பழச்சுவை, பொற்பாதம், திருச்சித்ரகூடம்.

# II. அறவுரை

## 1. திருமந்திரம்

இது சைவத் திருமுறைகள் பன்னிரண்டில் பத்தாம் திருமுறையாக வுள்ளது. செந்தமிழ் மொழியிலுள்ள ஞான நூல்களில் இந்நூல் மிகவும் பழமை வாய்ந்தது. இந்நூல் பொதுப்பாயிரம், தற்சிறப்புப் பாயிரம் என்னும் இருவகைப் பாயிரப் பகுதியும், ஆகமங்களின் உட்கருத்துக்களை விளக்கும் ஒன்பது தந்திரப் பகுதிகளும் வாய்ந்து, அவைகளை மூவாயிரம் பாடல்களால் பல தலைப்புக்களில் விளக்கும் அருமைப்பாடுடையதாம். இதனை அருளிச் செய்தவர் திருமூல நாயனர். இவர் நந்தி தேவரின் மாணவரில் ஒருவர். இவர் திருவாவடுதுறையில் அரசமரத்தின் அடியில் மூவாயிரம் ஆண்டு தவம் இருந்து ஆண்டு ஒன்றுக்கு ஒரு பாட்டாக இந் நூற் பாடல்களைப் பாடினர் என்பர்.

அரசாட்சிமுறை

ஆவையும் பாவையும் மற்றற வோரையும்
தேவர்கள் போற்றுந் திருவேடத் தாரையுங்
காவலன் காப்பவன் காவா தொழிவனேல்
மேவும் மறுமைக்கு மீளா நரகமே. (1)

அன்புடைமை

என்பே விறகா இறைச்சி யறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி அகங்குழை வார்க்கன்றி
என்பொன் மணியினை எய்தவொண் ணதே. (2)

கல்லாமை

கல்லாத மூடரைக் காணவும் ஆகாது
கல்லாத மூடர்சொல் கேட்கக் கடனன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராம்
கல்லாத மூடர் கருத்தறி யாரே. (3)

அவா வறுத்தல்

ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனே டாயினும் ஆசை அறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வருந் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்த மாமே. (4)

### சோதனை

காலினில் ஊறுங் கரும்பினிற் கட்டியும்
பாலினுள் நெய்யும் பழத்துள் இரதமும்
பூவினுள் நாற்றமும் போலுளன் எம்மிறை
காவலன் எங்குங் கலந்துநின் றானே. (5)

### அருஞ்சொற்பொருள்

1. ஆ - பசு. பாவை - பெண். திருவேடத்தார் - சிவவேடம் உடையவர். காவலன் - அரசன்.

2. என்பு - எலும்பு. அகம் - மனம். மணி - மணிபோல்பவனாகிய சிவபெருமான். எய்த ஒண்ணாது - அடைய முடியாது.

4. பட - உண்டாக.

5. கால் - காற்று. ஊறு - பரிசம். கட்டி - வெல்லம். இரதம் - சுவை.

### கேள்விகள்

1. அரசனுக்கு எப்பொழுது மீளா நரகம் உண்டாகும்?
2. அன்புடைமையின் சிறப்பைத் திருமந்திரச் செய்யுள் எவ்வாறு கூறுகின்றது?
3. கல்லாதாரின் தன்மை யாது?
4. அவாவறுத்தல் வேண்டும்—ஏன்?
5. இறைவன் எங்கும், எவ்வாறு கலந்து நின்றான்?

### பயிற்சி

1. திருமந்திரச் செய்யுட்கள் நல்ல அறிவுரைகள் பயப்பனவாய் உள்ளன என்பதை விளக்கிச் சில வரிகள் எழுதுக.
2. இறைவனின் தன்மையைப் பற்றி நீவிர் அறிவனவற்றை எழுதுக.
3. திருமூலரைப் பற்றிச் சிறு குறிப்பு வரைக.

## 2. திருக்குறள்

இதனை இயற்றியவர் திருவள்ளுவர். இவர் இன்ன குலத்தைச் சேர்ந்தவர் என்பதை உறுதியாகக் கூறக்கூடவில்லை. திருக்குறள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. இஃது அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பிரிவுகளை உடையது.

குறள் வெண்பா என்பது பாட்டில் ஒருவகை; அவ்வகைப் பாடல்களால் ஆகிய நூலும் 'குறள்' என்றே பெயர் பெற்றது. கருவி ஆகு பெயர்.

### ஊக்கம் உடைமை

உடைய ரெனப்படுவ(து) ஊக்கம்அஃ தில்லார்
உடைய(து) உடையரோ மற்று. (1)

உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும். (2)

ஆக்கம் இழந்தேமென் றல்லாவார் ஊக்கம்
ஒருவந்தம் கைத்துடை யார். (3)

ஆக்கம் அதர்வினுய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை. (4)

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய(து) உயர்வு. (5)

உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து. (6)

சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதையம்பிற்
பட்டுப்பா டூன்றும் களிறு. (7)

உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னும் செருக்கு. (8)

பரியது கூர்ங்கோட்ட(து) ஆயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின். (9)

உரமொருவற்(கு) உள்ள வெறுக்கைஅஃ தில்லார்
மரம்மக்க ளாதலே வேறு. (10)

### பெருமை

ஒளிஒருவற்(கு) உள்ள வெறுக்கை இளிஒருவற்(கு)
அஃதிறந்து வாழ்தும் எனல். (1)

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். (2)

மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லர் கீழல் லவர். (3)

ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு. (4)

பெருமை உடையவர் ஆற்றுவர் ஆற்றின்
அருமை உடைய செயல். (5)

சிறியார் உணர்ச்சியுள் இல்லை பெரியாரைப்
பேணிக்கொள் வேம்என்னும் நோக்கு. (6)

இறப்பே புரிந்த தொழிற்றும் சிறப்புந்தான்
சீரல் லவர்கட் படின். (7)

பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து. (8)

பெருமை பெருமிதம் இன்மை சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல். (9)

அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும். (10)

### அருஞ்சொற்பொருள்

**ஊக்கம் உடைமை :**

1. அஃது - ஊக்கம்.
2. உள்ளமுடைமை - ஊக்கமுடைமை. உள்ளம் - ஆகுபெயர்.
3. அல்லாவார் - அலமரார். ஒருவந்தம் - நிலைபெற்ற. கைத்து - கைப்பொருளை.
4. உழை - பக்கம். அதர் - வழி. வினய் - வினவிக்கொண்டு. அசைவிலா - இடுக்கண் முதலியவற்றால் தளராத.
5. வெள்ளம் - நீர். மலர் நீட்டம் - நீர்ப்பூக்களின் தாளினது நீளங்கள். அனையது - அளவினது.
6. உள்ளுவது - கருதுவது. நீர்த்து - நீர்மையுடையது.
7. ஒல்கார் - தளரார். பாடு - பெருமை. ஊன்றும் - நிலை நிறுத்தும்.
8. வள்ளியம் - வண்மை யுடையேம்.
9. பரியது - பெரியது. வெரூஉம் - அஞ்சும்.
10. உள்ள வெறுக்கை - ஊக்க மிகுதி. உரம் - அறிவு.

பெருமை :

1. இளி - மாசு. வாழ்தும் - வாழ்வோம்.

2. சிறப்பு - சிறப்பியல்புகள். ஒவ்வா - பொருந்தா.

3. கீழல்லர் - சிறியராகார்.

4. ஒழுகின் - மேற்கொண்டு நடந்தால்.

5. அருமை உடைய செயல் - பிறரால் செய்தற்கரிய செயல். ஆற்றுவர் - செய்வர்.

6. பேணி - வழிபட்டு. நோக்கு - கருத்து.

7. சீரல்லவர் - சிறியார். சிறப்பு - குடிமை, கல்வி, செல்வம் ஆயவற்றின் மிகுதி.

8. பணியும் - செருக்கின்றி அமைந்து ஒழுகுவர்.

9. பெருமிதம் - தருக்கு, செருக்கு.

10. அற்றம் - அவமானம்; சிறுமை - சிறுமையுடையவர் ஆகுபெயர்.

### கேள்விகள்

1. ஒருவனுக்கு நிலை நின்ற உடைமையாவது யாது?
2. மக்களுடைய உயர்வுக்குக் காரணமாயுள்ளது எது?
3. உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளவேண்டும். ஏன்?
4. யானை எப்போது அஞ்சும்?
5. ஒருவற்கு உரிய திண்ணிய அறிவு யாது?
6. 'சிறப்பொவ்வா' என்று வள்ளுவர் எதனைக் கூறுகின்றார்?
7. பெருமை யாரிடத்து அமையும் குணமாகும்?
8. பெருமையுடையவர் யாது செய்வர்?
9. பெருமை எதனை மறைக்கும்?
10. சிறுமை எதனை வெளிப்படுத்தும்?

### பயிற்சி

1. 'பெருமை' என்ற அதிகாரத்துக் கருத்துக்களைச் சுருக்கி வரைக.

2. திருக்குறள் ஒரு பொது நூல் என்பதை விளக்கி ஒரு கட்டுரை வரைக.

3. 'ஊக்கமுடைமை' பற்றி வள்ளுவர் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

# III. காதை

## 1. சிலப்பதிகாரம்

### வஞ்சிக் காண்டம்

### காட்சிக் காதை

'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' எனப் போற்றப் பெறுவதும், சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்னும் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றும் ஆகிய இந்நூல், இளங்கோவடிகளால் இயற்றப் பெற்றது. கோவலன் கண்ணகி இவர்களின் வரலாறு இதன்கண் விரித்துரைக்கப்பட்டுள்ளது ; தமிழ்நாட்டு மூவேந்தர்களின் தலை நகரங்களாகிய புகார், மதுரை, வஞ்சி என்னும் மூன்றின் சிறப்புக்களும் இதில் காணப்படுகின்றன. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர், ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்னும் உண்மைகளைக் கண்ணகியின் சிலம்பு காரணமாக இவர் பாடுதலின், இந்நூல் சிலப்பதிகாரம் என்னும் பெயர் பெற்றது. இதன்கண் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழும் கலந்து வருதலின், இஃது இயல் இசை நாடகப் பொருட்டொடர் நிலைச்செய்யுள் ஆகும். இந்நூலில் இடையிடையே உரைநடை விரவி வருதலின், இது உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் எனவும் பெயர்பெறும்.

இளங்கோவடிகள் சேரன் செங்குட்டுவனின் தம்பியாவர். இளமையிலே அரசு துறந்தமையின் இவர் அடிகள் என்னும் சிறப்புப்பெயர் பெற்றார். இவரது காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு என்பர்.

இந்நூலுக்கு அரும்பதவுரை யொன்றும், அடியார்க்கு நல்லார் உரை யொன்றும் உள்ளன. அரும்பதவுரையை எழுதியவர் பெயர் தெரியவில்லை.

இந்நூல் புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என்னும் மூன்று காண்டங்களையுடையது. நம் பாடப் பகுதியாகிய காட்சிக் காதை வஞ்சிக் காண்டத்தில் உள்ளது. மதுரையில் கோவலனை இழந்தபின் மலைநாடு அடைந்த கண்ணகி, திருச்செங்குன்றில், வேங்கை மரத்தடியில் தேவவடிவத்துடன் வந்த கோவலனோடு துறக்கம் புகுந்ததை நேரிற்கண்ட வேட்டுவ மகளிரும் வேடரும் தாம் கண்ட நிகழ்ச்சியை மலைவளங் காணுதற்குத் தன் தேவியோடும், இளங்கோவுடனும் வந்து பேராற்றங்கரையில் இருந்த சேரன் செங்குட்டுவனிடம் சொல்ல, அப்போது உடனிருந்த சீத்தலைச் சாத்தனார் வாயிலாகக் கண்ணகி வரலாற்றை உணர்ந்த செங்குட்டுவன், கண்ணகிக்குக் கோவில் எடுக்க நினைத்து, அவள் உருவம் அமைத்தற்குரிய கற்காணத் துணிந்த பகுதி இக்காதையிற் கூறப்படுகின்றது.

கண்ணகி கோவலனுடன் துறக்கம் புகுந்ததைக் கண்ட
வேட்டுவர் அந்நிகழ்ச்சியைச் செங்குட்டுவனிடம் சொல்லுதல்

ஏழ்பிறப் படியேம் வாழ்கநின் கொற்றம்
கான வேங்கைக் கீழோர் காரிகை
வானவர் போற்ற மன்னொடுங் கூடி
வானவர் போற்ற வானகம் பெற்றனள்
எந்நாட் டாள்கொல் யார்மகள் கொல்லோ
நின்னாட் டியாங்க ளினைப்பினும் அறியேம்
பன்னூ றுயிரத் தாண்டுவா ழியரென

அப்போது உடனிருந்த சீத்தலைச் சாத்தனுர், மதுரை
நிகழ்ச்சியைச் செங்குட்டுவனுக்குச் சொல்லுதல்

மண்களி நெடுவேல் மன்னவற் கண்டு
கண்களி மயக்கத்துக் காதலோ டிருந்த
தண்டமி ழாசான் சாத்தனிஃ துரைக்கும் :
ஒண்தொடி மாதர்க் குற்றதை யெல்லாம்
திண்திறல் வேந்தே செப்பக் கேளாய் :
தீவினைச் சிலம்பு காரண மாக
ஆய்தொடி யரிவை கணவற் குற்றதும்
வலம்படு தானை மன்னன் முன்னர்ச்
சிலம்பொடு சென்ற சேயிழை வழக்கும்
செஞ்சிலம் பெறிந்து தேவி முன்னர்
வஞ்சினம் சாற்றிய மாபெரும் பத்தினி
அஞ்சி லோதி அறிகெனப் பெயர்ந்து
மதுரை மூதூர் மாநகர் சுட்டதும்
அரிமா னேந்திய அமளிமிசை யிருந்த
திருவீழ் மார்பிற் றென்னர் கோமான்
தயங்கிணர்க் கோதை தன்துயர் பொறுஅன்
மயங்கினன் கொல்லென மலரடி வருடித்
தலைத்தா ணெடுமொழி தன்செவி கேளாள்
கலக்கங் கொள்ளாள் கடுந்துயர் பொறுஅள்
மன்னவன் செல்வுழிச் செல்க யான்எனத்
தன்னுயிர் கொண்டவ னுயிர்தே டினள்போல்
பெருங்கோப் பெண்டும் ஒருங்குடன் மாய்ந்தனள்

கொற்ற வேந்தன் கொடுங்கோல் தன்மை
இற்றெனக் காட்டி இறைக்குரைப் பனள்போல்
தன்னாட் டாங்கண் தனிமையிற் செல்லாள்
நின்னாட் டகவயின் அடைந்தனள் நங்கையென்(று)
ஒழிவின் றுரைத்தீண் டூழி யூழி
வழிவழிச் சிறக்கநின் வலம்படு கொற்றமென,

செங்குட்டுவன் வருந்தி உரைத்தல்

தென்னர் கோமான் தீத்திறங் கேட்ட
மன்னர் கோமான் வருந்தினன் உரைப்போன் :
எம்மோ ரன்ன வேந்தற் குற்ற
செம்மையின் இகந்தசொல் செவிப்புலம் படாமுன்
உயிர்பதிப் பெயர்த்தமை யுறுக ஈங்கென
வல்வினை வளைத்த கோலை மன்னவன்
செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோ லாக்கியது
மழைவளங் கரப்பின் வான்பே ரச்சம்
பிழையுயி ரெய்திற் பெரும்பே ரச்சங்
குடிபுர வுண்டுங் கொடுங்கோ லஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்ப மல்லது தொழுதக வில்லெனத்
துன்னிய துன்பம் துணிந்துவந் துரைத்த
நன்னூற் புலவர்க்கு நன்கன முரைத்தாங்(கு)

செங்குட்டுவன் உடனிருந்த தன் மனைவியிடம் கோப்பெருந்தேவி
கண்ணகி ஆகிய இருவருள் சிறந்தோர் யாரெனக் கேட்டல்

உயிருடன் சென்ற ஒருமகள் தன்னினும்
செயிருடன் வந்தவிச் சேயிழை தன்னினும்
நன்னுதல் வியக்கு நலத்தோ ரியாரென
மன்னவ னுரைப்ப மாபெருந் தேவி,

சேர மாதேவியின் விடை

காதலன் துன்பங் காணாது கழிந்த
மாதரோ பெருந்திரு வுறுக வானகத்(து)
அத்திற நிற்கநம் அகனா டடைந்தவிப்
பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டுமென (க்கூறினள்.)

### அருஞ்சொற்பொருள்

வரி 1. கொற்றம் - வெற்றி. 2. காரிகை - பெண். 3. மன் - கணவன். 4. வானகம் - துறக்கம். 8. களி - மகிழ்ச்சி. மன்னவன் - செங்குட்டுவன். 10. சாத்தன் - சீத்தலைச் சாத்தனுர் என்னும் புலவர். 11. தொடி - வளையல். மாதர் - கண்ணகி. 13. தீவினைச் சிலம்பு - கோவலன் கண்ணகி இவர்களின் தீவினை பயன்படுவதற்குக் காரணமான சிலம்பு. 14. அரிவை - கண்ணகி. கணவன் - கோவலன். 15. வலம் - வெற்றி. 16. சேயிழை - கண்ணகி. 17. எறிந்து - உடைத்து. தேவி - பாண்டியன் மனைவியாகிய பெருங்கோப்பெண்டு. 18. பத்தினி - கண்ணகி. 19. அஞ்சிலோதி - அழகிய சிலவாக முடிக்கப்படும் கூந்தலையுடைய பெருங்கோப் பெண்டு ; விளி. அறிக என - அறிகென விகாரம். 20. சுட்டதும் என்பதன் பின், 'சொல்லி' என ஒரு சொல் வருவிக்க. 21. அரிமான் ஏந்திய அமளி - சிங்காதனம். 23. தயங்கிணர்க் கோதை - விளங்கிய பூங் கொத்துக்களை அணிந்த கூந்தலையுடைய கண்ணகி. 24. வருடி - தடவி. 25. தலைத்தாள் நெடுமொழி - கண்ணகி சொல்லிய வீர மொழி. 31. இற்று - இத்தன்மையது. இறைக்கு - அரசனுகிய உனக்கு ; இடவழுவமைதி. 33. நங்கை - கண்ணகி. 37. மன்னர் கோமான் - செங்குட்டுவன். 38. எம்மோரன்ன - எம்மைப் போன்ற. 39. செம்மையின் இகந்த - நடுவுநிலை தவறிய. 40. உயிர்பதிப் பெயர்த்தமை - உயிரை உடம்பினின்று நீக்கினமை. ஈங்கு உறுக என - இப்பொழுது விரைந்து சென்று உற வேண்டும் என்று. 41. வல்வினை - தீவினை. 45. குடிபுரவுண்டும் - குடிமக்கள் தன்னல் நன்கு காக்கப்பட்டும். 48. துன்னிய துன்பம் - கண்ணகிக்கு நேர்ந்த துன்பம். 49. நன்னூற் புலவன் - சீத்தலைச் சாத்தனுர். 50. ஒரு மகள் - பெருங் கோப்பெண்டு. 51. செயிர் - கோபம். சேயிழை - கண்ணகி. 52. நன்னுதல் - வேண்மாள் (செங்குட்டுவன் மனைவி) விளி. 53. மாபெருந்தேவி - வேண்மாள். 54. காதலன் - பாண்டியன். மாதர் - பெருங்கோப்பெண்டு. வானகத்துப் பெருந் திருவுறுக எனமாற்றுக. 57. பத்தினிக்கடவுள் - கண்ணகி. பரசல் வேண்டும் - கொண்டாட வேண்டும்.

### கேள்விகள்

1. வேட்டுவர் செங்குட்டுவனிடம் யாது கூறினர் ?

2. சீத்தலைச் சாத்தனுர் செங்குட்டுவனை நோக்கிக் கூறிய செய்தி யாது ?

3. செங்குட்டுவன் அரச குடியிற் பிறத்தல் துன்பமே என்று ஏன் கூறினுன் ?

4. செங்குட்டுவன் இளங்கோவேண்மாளை விளித்து யாது கேட்டாள் ?

5. இளங்கோவேண்மாள் தந்த பதில் யாது ?

பயிற்சி

1. இச் செய்யுட் பகுதியை நாடக முறையில் அமைத்து எழுதுக.
2. சேர மாதேவியே கூறுவது போல இதனை அமைத்து வரைக.
3. இப் பாடச் செய்தியைச் சாத்தனர் கூறுவது போல எழுதிக் காட்டுக.

## 2. பெரிய புராணம்

### இளையான்குடி மாற நாயனர்

இந்நூலில், தனி அடியார் அறுபத்துமூவரும் தொகை அடியார் ஒன்பதின்மரும் ஆகிய பெருமை வாய்ந்த அடியார் எழுபத்திருவர் வரலாறுகள் கூறப்படுகின்றன. பெரியர் - செயற்கரிய செயல்களைச் செய்பவர். புராணம் - பழைய வரலாறு. இதற்கு ஆசிரியர் இட்ட பெயர் திருத் தொண்டர் புராணம் என்பது. இது திருத்தொண்டத் தொகை, திருத் தொண்டர் திருவந்தாதி முதலியவைகளின் உதவிகொண்டு இயற்றப் பெற்றது.

இதனை இயற்றியவர் சேக்கிழார் அடிகள். சேக்கிழார் என்பது இவரது குடிப் பெயர் ; இயற்பெயர் அருண்மொழித் தேவர் என்பது. இவர், தொண்டை மண்டலத்தில், குன்றத்தூரில் வேளாளர் மரபில் பிறந்தவர். இவர் இரண்டாங் குலோத்துங்கனிடம் அமைச்சராயிருந்து உத்தம சோழப் பல்லவராயன் என்ற சிறப்புப் பெயரும் பெற்ருர். அவ்வரசனது வேண்டுகோளால் இந்நூல் இயற்றப்பட்டது. இவர் இந்நூலை இயற்றத் தொடங்குங்கால் இறைவன் இவருக்கு ‘ உலகெலாம் ’ என்று அடியெடுத்துக் கொடுத்தார். இந்நூல் பாடி யரங்கேற்றிய பின்னர் அரசன் இவருக்குத் தொண்டர்சீர் பரவுவார் என்னும் பெயர் கொடுத்துச் சிறப்பித்தான். இவரது காலம் கி. பி. 12-ஆம் நூற்றாண்டின் முதற்பகுதி.

இந்நூலில் இளையான்குடி மாற நாயனர் புராணத்தில் நம் பாடப் பகுதி உள்ளது. இளையான்குடி என்பது ஊர்ப் பெயர். மாறன் என்பது அடியார் பெயர். இவர் வேளாளர் மரபில் பிறந்தவர்.

**இளையான்குடி மாற நாயனர் அடியவர்களைப் பேணும் முறை**

ஆரம் என்பு புனைந்த ஐயர்தம் அன்பர் என்பதோர் தன்மையால்
நேர வந்தவர் யாவ ராயினும் நித்த மாகிய பத்திமுன்
கூர வந்தெதிர் கொண்டு கைகள் குவித்து நின்று செவிப்புலத்(து)
ஈர மென்மது ரப்ப தம்பரி வெய்த முன்னுரை செய்தபின், (1)

கொண்டு வந்து மனைப்பு குந்து குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலின் ஆத னத்திடை வைத்த ருச்சனை செய்தபின்
உண்டி நாலு விதத்தில் ஆறு சுவைத்தி றத்தன ஒப்பிலா
அண்டர் நாயகர் தொண்டர் இச்சையின் அமுது செய்ய அளித்துளார். (2)

### நாயனாரின் வறுமையும் தொண்டும்

இன்ன வாறு வளஞ்சு ருங்கவும் எம்பி ரான்இளை யான்குடி
மன்னன் மாறன் மனஞ்சு ருங்குதல் இன்றி உள்ளன மாறியுந்
தன்னை மாறி இறுக்க வுள்ள கடன்கள் தக்கன கொண்டுபின்
முன்னை மாறில் திருப்ப ணிக்கண் முதிர்ந்த கொள்கையர் ஆயினார். (3)

### அடியார் வடிவத்துடன் தம் மனைக்கு வந்த இறைவனை நாயனார் வரவேற்றல்

மாரிக் காலத் திரவினில் வைகியோர்
தாரிப் பின்றிப் பசிதலைக் கொள்வது
பாரித் தில்லம் அடைத்தபின் பண்புற
வேரித் தாரன் விருந்தெதிர் கொண்டனன். (4)

### வந்த அடியாரை எவ்வாறு உபசரிப்பது என நாயனார் தம் மனைவியாருடன் ஆராய்தல்

ஈரம் மேனியை நீக்கி இடங்கொடுத்(து)
ஆர வின்னமு தூட்டுதற் காசையால்
தார மாதரை நோக்கித் தபோதனர்
தீர வேபசித் தார்செய்வ தென்னென்று. (5)
நமக்கு முன்பிங் குணவிலை ஆயினும்
இமக்கு லக்கொடி பாகர்க் கினியவர்
தமக்கு நாமின் அடிசில் தகவுற
அமைக்கு மாறெங்ங னேயணங் கேயென. (6)

### மனைவியார் இரங்கி, உணவாக்குதற்கு வழி கூறுதல்

மாது கூறுவள் மற்றொன் றுங் காண்கிலேன்
ஏதி லாரும் இனித்தரு வாரில்லை
போதும் வைகிற்றுப் போமிடம் வேறிலை
தீது செய்வினை யேற்கென் செயலென்று. (7)
செல்லல் நீங்கப் பகல்வித் தியசெந்நெல்
மல்லல் நீர்முளை வாரிக் கொடுவந்தால்
வல்ல வாறமு தாக்கலும் ஆகுமற்(று)
அல்ல தொன்றறி யேனென் றயர்வுற, (8)

### நாயனுர் வயலுக்குச் சென்று நெல் முளையை வாரிக்கொண்டு வருதல்

உள்ளம் அன்புகொண் டூக்கவோர் பேரிடாக்
கொள்ள முன்கவித் துக்குறி யின்வழிப்
புள்ளு றங்கும் வயல்புகப் போயினுர்
வள்ள லார்இளை யான்குடி மாறனுர். (9)

காலி ஞல்தட விச்சென்று கைகளால்
சாலி வெண்முளை நீர்வழிச் சார்ந்தன
கோலி வாரி இடாநிறை யக்கொண்டு
மெலெ டுத்துச் சுமந்தொல்லை மீண்டனர். (10)

### நாயனுர், உணவாக்குதற்கு வேண்டும் விறகும் கறியும் உதவுதல்

வந்தபின் மனைவி யாரும் வாய்தலில் நின்று வாங்கிச்
சிந்தையில் விரும்பி நீரில் சேற்றினை அலம்பி ஊற்றி
வெந்தழல் அடுப்பின் மூட்ட விறகில்லை என்ன மேலோர்
அந்தமில் மனையில் நீடும் அலக்கினை அறுத்து வீழ்த்தார். (11)

முறித்தவை அடுப்பில் மாட்டி முளைவித்துப் பதமுன் கொள்ள
வறுத்தபின் னரிசி யாக்கி வாக்கிய உலையிற் பெய்து
வெறுப்பிலின் அடிசில் ஆக்கி மேம்படு கற்பின் மிக்கார்
கறிக்கினி என்செய் வோமென் றிறைஞ்சினுர் கணவ ஞரை. (12)

வழிவரும் இளைப்பி ஞேடும் வருத்திய பசியி ஞலே
அழிவுறும் ஐயன் என்னும் அன்பினில் பொலிந்து சென்று
குழிநிரம் பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப் பாசப்
பழிமுதல் பறிப்பார் போலப் பறித்தவை கறிக்கு நல்க. (13)

### நாயனுர், அடியவரை உணவருந்த அழைத்தபோது அவர் ஒளிவடிவாய்த் தோன்றுதல்

அழுந்திய இடருள் நீங்கி அடியனேன் உய்ய என்பால்
எழுந்தருள் பெரியோய் ஈண்ட அமுதுசெய் தருள்க என்று
தொழும்பனுர் உரைத்த போதில் சோதியாய் எழுந்து தோன்றச்
செழுந்திரு மனைவி யாருந் தொண்டருந் திகைத்து நின்ருர். (14)

### இறைவன் நாயனாருக்கு அருள் செய்தல்

அன்பனே அன்பர் பூசை அளித்தநீ அணங்கி னோடும்
என்பெரும் உலகம் எய்தி இருநிதிக் கிழவன் தானே
முன்பெரு நிதியம் ஏந்தி மொழிவழி ஏவல் கேட்ப
இன்பமார்ந் திருப்பீ ராமென் றருள்செய்தான் எவர்க்கு
[மிக்கான். (15)

### அருஞ்சொற்பொருள்

1. ஆரம் - மாலை. என்பு - எலும்பு. நித்தமாகிய பத்தி - நிலையான அன்பு. கூர - மிக. ஈரம் - குளிர்ச்சி. மதுரப்பதம் - இன்சொல். பரிவு எய்த - அன்பு கொள்ளுமாறு.

2. குலாவு - விளங்குகின்ற. மண்டு - மிக்க. உண்டி நாலுவிதம் - உண்டல் முதலியன. ஆறுசுவை - கைப்பு, புளிப்பு, இனிப்பு, துவர்ப்பு, கார்ப்பு, உவர்ப்பு என்பன. அண்டர் - தேவர்.

3. வளம் - செல்வம். மாறி - விற்று. இறுத்தல் - கொடுத்தல். முன்னை - முன்பு செய்துவந்த. மாறில் - ஒப்பற்ற.

4. வைகி - விழித்திருந்து. தாரிப்பு - உதவி. பாரித்து - மிகப்பெற்று. வேரி - தேன்.

5. ஆர - நிறைய. தாரம் - மனைவி. தபோதனர் - முனிவர் (சிவ பெருமான்). தீர - மிக.

6. இலை - இல்லை, இடைக்குறை. இமம் குலம் கொடி - இமயமலை பெற்ற சிறந்த கொடிபோன்ற உமையம்மை. அணங்கு - பெண்.

7. ஏதிலார் - அயலார். போதும் வைகிற்று - பொழுதும் கழிந்தது.

8. செல்லல் - துன்பம். வித்திய - விதைத்த. மல்லல்நீர்முளை - செறிந்த நீரிற்கிடக்கும் முளை நெல்லை. அமுது - உணவு. அயர்வு - சோர்வு.

9. பேரிடா - பெரிய இறைகூடை. கொள்ள - நெல்லை வாரிக்கொள்ளு வதற்காக. முன்கவித்து - தலைமேற் கவித்து. குறியின் வழி - முன்பு நடந்து பழகிய அடையாளத்தின் வழியே, என்றது இருள் மிகுதியை உணர்த்திற்று.

10. தடவி - வழியைத் தடவி. நீர்வழிச் சார்ந்தன சாலி வெண்முளை கைகளால் கோலி எனக் கூட்டுக. சாலி - நெல். கோலி - திரட்டி. ஒல்லை - விரைவு.

11. வாய்தல் - வாசல். மேலோர் - இளையான்குடி மாறர். அந்தம் இல் மனை - அழியாப் புகழ் பெற்ற மனை. அலக்கு - வரிச்சு.

12. வித்து - விதை. பதம் - பக்குவம். வாக்கிய - நீர்பெய்து வைத்த. என் செய்கோம் - யாது செய்வோம்.

13. அழிவுறும் - வருந்தும். குறும்பயிர் - சிறிய பயிர். பாசப்பழி முதல் - பழியையுடைய ஆணவத்தின் வேர்.

14. ஈண்ட - விரைவில். தொழும்பனுர் - அடியவராகிய இளையான் குடி மாறர்.

15. இருநிதிக் கிழவன் - குபேரன். இன்பம் ஆர்ந்து - பேரின்பம் நுகர்ந்து.

### கேள்விகள்

1. இளையான்குடி மாற நாயனுர் அடியவர்களை எவ்வாறு பேணினுர்?

2. வந்த அடியவரை உண்பிக்க அவரது மனைவியார் கூறிய வழி யாது?

3. அடியவரை உண்பிக்க நாயனுரும் அவர்தம் மனைவியாரும் யாது செய்தனர்?

4. அடியவரை உணவருந்த அழைத்தபோது நாயனுர் கண்டது யாது?

### பயிற்சி

1. 'வறுமையிலும் தொண்டு' என்ற தலைப்பில் நாயனுரின் விருந்து புரக்கும் பண்பை விளக்கி எழுதுக.

2. இச் செய்யுட் பகுதியை இறைவனே கூறுவதுபோலக் கூறுக.

3. பிரித்து எழுதுக :—வந்தெதிர், வைத்தருச்சனை, சுவைத்திறத் தன, ஒப்பிலா, மனஞ்சுருங்குதல், திருப்பணி, மாரிக்காலம், தாரிப்பின்றி, ஊட்டுதற்காசை, தருவாரில்லை, வேறிலை, புள்ளுறங்கும், தடவிச்சென்று, புன்செய்.

# IV. சிறு நூல்கள்

## 1. மீனாட்சியம்மை குறம்

இது மீனாட்சியம்மைமீது இயற்றப் பெற்ற குறம் எனப் பொருள் படும். மீனாட்சியம்மை என்பது மதுரையில் உள்ள அம்மையின் திருப் பெயர். தலைவனிடத்துக் காதல் கொண்ட தலைவியைக் கண்டு குறத்தி குறி கூறுவதாக அமையும் பிரபந்தம் குறம் என்று வழங்கப்படும்.

குறத்தி, தன் மலைவளங் கூறுதல்

திங்கள்முடி சூடுமலை தென்றல்விளை யாடுமலை
தங்குபுயல் சூழுமலை தமிழ்முனிவன் வாழுமலை
அங்கயற்கண் ணம்மைதிரு அருள்சுரந்து பொழிவதெனப்
பொங்கருவி தூங்குமலை பொதியமலை என்மலையே. (1)

குறத்தி, குறி சொல்லுதல்

முந்நாழி முச்சிறங்கை நெல்லளந்து கொடுவா
முறத்திலொரு படிநெல்லை முன்னேவை அம்மே
இந்நாழி நெல்லையுமுக் கூறுசெய்தோர் கூற்றை
இரட்டைபட எண்ணினபோ தொற்றைபட்ட தம்மே
உன்னுமுன் வேள்விமலைப் பிள்ளையார்வந் துதித்தார்.
உனக்கினியெண் ணினகருமம் இமைப்பினிற்கைகூடும்
என்ஆணை எங்கள்குலக் கன்னிமார் அறிய
எக்குறிதப் பினுந்தப்பா திக்குறிகாண் அம்மே. (2)

## 2. திருவரங்கக் கலம்பகம்

கலம்பகம் என்பது தொண்ணூற்றுறுவகைப் பிரபந்தங்களுள் ஒன்று. இது நூறு பாடல்களை உடையது. இதன் ஆசிரியர் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் என்பவர்; 17-ஆம் நூற்றுண்டினர்.

அம்மானை

தேனமருஞ் சோலைத் திருவரங்கர் எப்பொருளும்
ஆனவர்தாம் ஆண்பெண் அலியலர்காண் அம்மானை !
ஆனவர்தாம் ஆண்பெண் அலியலரே ஆமாகில்
சானகியைக் கொள்வாரோ தாரமாய் அம்மானை !
தாரமாய்க் கொண்டதுமோர் சாபத்தால் அம்மானை !

### அருஞ்சொற்பொருள்

தேன் - வண்டு. சானகி - சீதை. தாரம் - மனைவி. சாபம் - சாபம்; வில். சனகன் மகள் சனகி, சானகி என வழங்குதல் தத்திதாந்த நாமம் எனப்படும்.

### கேள்விகள்

1. பொதிய மலையின் சிறப்பைக் குறத்தி எவ்வாறு கூறினாள்?

2. 'எக்குறி தப்பினும் தப்பாதிக்குறி.'—'எக்குறி', 'இக்குறி'— எவை?

3. 'அம்மானை' என்பதன் இலக்கணம் யாது?

4. 'அம்மானை' என்ற தலைப்பில் வந்துள்ள செய்யுளின் கருத்து யாது?

### பயிற்சி

1. கலம்பகத்தின் இலக்கணத்தை வரைக.

2. நீவிர் படித்த சிறுநூல் ஒன்றில் அமைந்த நயமிகுந்த பாடலின் கருத்தை எழுதுக.

3. வாக்கியங்களிற் பயன்படுத்துக:—தென்றல், தமிழ் முனிவன், கயற்கண், திருவருள், பொதியமலை, சிறங்கை, நாழி, ஒற்றை பட்டது, இமைப்பினில், ஆணை.

# V. புனைந்துரை

## 1. மலை

### திருப்பரங்குன்றம்

இப்பகுதி கடைச்சங்க நூலாகிய பத்துப்பாட்டுள் திருமுருகாற்றுப் படையில் உள்ளது. இதனை இயற்றியவர் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார். திருப்பரங்குன்றம் முருகப் பெருமானுக்கு உரிய ஆறு படை வீடுகளில் ஒன்று.

திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடமலி மறுகிற் கூடல் குடவயின்
இருஞ்சேற் றகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த
முள்தாள் தாமரைத் துஞ்சி வைகறைக்
கட்கமழ் நெய்தல் ஊதி எற்படக்
கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர்
அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்குங் குன்று.

#### அருஞ்சொற்பொருள்

தீது - குற்றம். நியமம் - கடைத்தெரு. மறுகு - பிற தெருக்கள். கூடல் குடவயின் - மதுரையின்மேற்குத்திசையிலுள்ள ; குடக்கு - மேற்கு. இரு - கரிய. தாள் - தண்டு. வைகறை - விடியற்காலம். நெய்தல் - நெய்தற்பூ. எல்பட - சூரியன் தோன்றிய காலத்தே. காமர் - விருப்பம்.

## 2. ஆறு

### காவிரி

இப்பகுதியும் பத்துப்பாட்டுள் ஒன்றாகிய பட்டினப்பாலையில் உள்ளது. இது கடியலூர் உருத்திரங்கண்ணனாரால் இயற்றப்பெற்றது.

வசையில்புகழ் வயங்குவெண்மீன்
திசைதிரிந்து தெற்கேகினும்
தற்பாடிய தளியுணவின்
புள்தேம்பப் புயல்மாறி

வான்பொய்ப்பினும் தான்பொய்யா
மலைத்தலைய கடல்காவிரி
புனல்பரந்து பொன்கொழிக்கும்.

அருஞ்சொற்பொருள்

வயங்குதல் - விளங்குதல். வெண்மீன் - வெள்ளியாகிய மீன்; சுக்கிரன். திசை திரிந்து - தான் நிற்றற்குரிய வடதிசையில் நில்லாமல். சுக்கிரன் வடதிசையில் நின்றால் மழை பெய்யுமென்பது கணிதநூல் துணிபு. தன் பாடிய - மேகமாகிய தன்னைப்பாடிய. தளி - மழைத்துளி. புள் - வானம் பாடிப்பறவை. தேம்ப - வாட்ட முறும்படி. புயல் - மழை. மலை - குடகு மலை; மேற்குத்தொடர்ச்சி மலை. தலைய - தொடங்குதலையுடைய. கடல் காவிரி - கடலிடத்தே செல்லுகின்ற காவிரி.

## 3. முகில்

இப்பாடலை இயற்றியவர் பரிதிமாற் கலைஞன் எனப்படும் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார். இவர் கி. பி. 1871 முதல் 1903 வரை வாழ்ந்தவர். பல நாடகத் தமிழ்நூல்களும், ஆராய்ச்சி நூல்களும் பாடல் களும் இயற்றித் தமிழுக்குச் சிறந்த தொண்டாற்றியுள்ளார்.

முகிலே! மைந்நிற முகிலே! கடல்மகள்
பயந்த மகவே! நயந்திவ் வுலகினைக்
குளிர்செய் ததனுயிர்க் குழுவினை என்றுங்
களிசெயுஞ் செய்ய கருவியே! அறத்தினுக்(கு)
ஆக்கமே! பொருளிற் கரும்பெறல் துணையே!
போக்கரு வற்கடப் பொல்லா நோய்க்குநன்
மருந்தே! நீயெழுந் திருந்துவான் பொழிவது
தண்ணீர் என்கோ? தயைமீக் கூர்ந்திழி
கண்ணீர் என்கோ? கழைச்சா றென்கோ?
தீம்பால் என்கோ? தெள்ளமு தென்கோ?
ஏம்பலுற் றென்னுளம் இனைத்தென் றுணர்ந்தின்று.
அம்ம!நீ ஒப்புர வாற்றுமா றறிந்தேன்.
எம்மையும் அஃதே என்கடன்
எனக்குறிக் கொண்டேன் எனக்குறு காட்டே!

### அருஞ்சொற்பொருள்

2. பயந்த - பெற்ற. நயந்து - விரும்பி. 3. குழு - கூட்டம். 5. அரும்பெறல் - பெறுதற்கரிய. 6. வற்கடம் - பஞ்சம். 8. என்கோ - என்று சொல்லுவேனே. 9. கழை - கரும்பு. 11. ஏம்பல் - மகிழ்ச்சி. உணர்ந்தின்று - அறிந்ததில்லை. 12. அம்ம, வியப்பிடைச் சொல். 13. எம்மை - எப்பிறப்பினும். 14. எனக்கு உறுகாட்டு - நின் செயல் எனக்கு ஓர் எடுத்துக் காட்டேயாகும்.

### கேள்விகள்

1. திருமுருகாற்றுப்படையில் திருப்பரங்குன்ற மலையின் சிறப்பு எவ்வாறு கூறப்பட்டுள்ளது ?

2. வான் பொய்ப்பினும் தான் பொய்யாதது எது ? அதன் சிறப்பு யாது ?

3. பரிதிமாற் கலைஞர் முகிலை விளித்து யாது கூறுகின்றார் ?

### பயிற்சி

1. இயற்கைப் பாட்டுக்கள் படிப்பதற்குப் பேரின்பம் பயப்பன என்பதை ஏதேனும் ஒரு செய்யுள்கொண்டு விளக்குக.

2. பொருள் கூறுக :—நியமம், நெய்தல், தளி, தேம்ப, உறுகாட்டு, மறுகு, கூடல், அரும்பெறல், ஆக்கம், குழு, வற்கடம், ஒப்புரவு.

# VI. பல்சுவை

## 1. களி

இப்பாடல் ஒட்டக்கூத்தரால் இயற்றப்பட்டது. இவர் விக்கிரம சோழன், இரண்டாங்குலோத்துங்கன், இராசராசன் இம்மூவருடைய ஆட்சிக் காலத்திலும் இருந்தவர். இராமாயணத்தில் உத்தரகாண்டம், குலோத்துங்க சோழன் கோவை முதலியனவும் இவராற் பாடப் பெற்றவை. இவரைக் குறித்துப் பல வரலாறுகள் கூறப்படுகின்றன. இவரது காலம் கி. பி. 12-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி.

களி என்பது கலம்பகவுறுப்புக்களில் ஒன்று. இது கள் குடித்து மயங்கியவன் கூற்றாகப் பாடப் பெறும்.

புள்ளிருக்கும் தார்மார்பன் பூம்புகார் வாழ்களியேம்
சுள்ளிருக்குங் கள்ளையுண்டுஞ் சோர்விலேம்—உள்ளபடி
சொல்லவா வாலி துரோபதையை மூக்கரிந்த
தல்லவா மாபார தம்.

அருஞ்சொற்பொருள்

புள் - வண்டு. பூம்புகார் - காவிரிப்பூம்பட்டினம். சுள் இருக்கும் - சுள் என்று இருக்கின்ற. பின்னிரண்டு அடியும் நகைச்சுவை தருவனவாகும்.

## 2. வேங்கடசாமியின் கொடைப்பெருமை

இப்பாடல் இராமச்சந்திர கவிராயரால் இயற்றப்பெற்றது. இவர் தொண்டை நாட்டில் இராஜு குலத்தில் பிறந்தவர்; சென்னையில் தங்கி, நாடகப் புலமையில் சிறந்து சகுந்தலை விலாசம், பாரதி விலாசம் முதலிய நாடகநூல்களைச் செய்தனர்; அக்காலத்துச் சென்னையில் இருந்த எல்லீசு துரையால் பாராட்டப் பெற்றார். இவர் காலம் கி. பி. 19-ஆம் நூற்றாண்டு.

மூங்கிலிலே ஒளித்திருந்தான் முக்கண்சாமி
முதியகடற் போய்ப்படுத்தான் முகுந்தசாமி
தாங்கமலப் பொகுட்டுறைந்தான் தலைநாற்சாமி
தடவரையில் உழன்றுநின்றான் தகப்பன்சாமி
வாங்கியுண்ண வழிகாத்தான் வயிற்றுச்சாமி
வாணருக்கிங் குதவுவரார் மற்றோர்சாமி
ஓங்கியசீர் மயிலையிற்பொன் னப்பசாமி
உதவியவேங் கடசாமி உசிதவேளே.

அருஞ்சொற்பொருள்

மூங்கிலிலே ஒளிந்திருந்தான் முக்கண்சாமி என்பது சிவபெருமான் திருநெல்வேலியில் மூங்கில் புதருள் தோன்றிய வரலாற்றைக் குறிப்பது. முகுந்தசாமி - திருமால். தலைநாற்சாமி - பிரமன். தகப்பன்சாமி - முருகன். வயிற்றுச்சாமி - விநாயகர். வாணர் - கவிவாணர். உதவிய - பெற்ற.

## 3. விஞவுத்தரம்

இதனை இயற்றியவர் முத்துராமலிங்க சேதுபதியாவர். இவர் இராமநாதபுரம் சம்ஸ்தானத்தை ஆட்சி செய்த வேந்தர்; வள்ளலாகவும் அருங்கலை வல்லுநராகவும் விளங்கியவர். வள்ளி மணமாலை, நீதிபோதம், பாலபோதம், முருகரனுபூதி முதலான நூல்கள் இவரால் இயற்றப்பட்டுள்ளன.

இவர் 28-2-1873-இல் மண்ணுலக வாழ்வை நீத்தனர்.

விண்டுமனை யாரழியா மெய்ப்பொருளென் வச்சிரத்தான்
பண்டுசிறை கொய்ததெது பார்ப்பதிசேய்—கொண்ட
முதலாம் படைவீடென் முத்தமிழோய் கேண்மோ
அதுவாம் திருப்பரங்குன் றம்.

அருஞ்சொற்பொருள்

விஞவுத்தரமாவது ஒரு பொருளைக் காட்டும் ஒரு மொழியைப் பிரித்து ஒருவனுடைய பலவகை விஞவுக்கும் விடையாகுமாறு அமைக்கும் சொல்லணிவகை. விண்டு மனை - திருமாலின் மனைவி. வச்சிரத்தான் - இந்திரன். சிறை - சிறகு. பார்ப்பதிசேய் - முருகன். விண்டு - மனையார்? என்பதற்கு விடை திரு என்பது. (திரு - திருமகள்). அழியா மெய்ப்பொருள் என்? என்பதற்கு விடை பரம் என்பது. (பரம்—மேலான பொருள்) வச்சிரத்தான் பண்டு சிறைகொய்தது எது? என்பதற்கு விடை குன்றம் என்பது. (குன்றம் - மலை). இம்மூன்று விடையும் சேர்ந்தாலாகும் திருப்பரங்குன்றம் என்பது, பார்ப்பதிசேய் கொண்ட முதலாம் படைவீடு என்? என்பதற்கு விடையாகும். திருப்பரங்குன்றம், முருகப் பெருமானின் ஆறு படைவீடுகளில் முதலாவதாகும்.

## 4. வாய் ஒன்ருயிருக்கக் கை காதுகள் இரண்டாயிருப்பதன் காரணம்

இப்பாடல் வெ. ப. சுப்பிரமணிய முதலியாரால் இயற்றப் பெற்றது. இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் வெள்ளகால் என்னும் ஊரில் தொண்டைமண்டல வேளாளர் மரபில் பிறந்தவர்; பழநியப்ப முதலியாரின் புதல்வர். தமிழ்ப்புலமையும் ஆங்கிலப் புலமையும் ஒருங்கே

வாய்க்கப்பெற்றவர். யமகம், திரிபு முதலான செய்யுட்களை எளிதாக இயற்றும் திறனுடையவர். இவர் இயற்றிய நூல்கள் அகலிகைவெண்பா, கோம்பிவிருத்தம் முதலியன.

இவர் எண்பது ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்து அண்மையில் காலஞ் சென்றார்.

சம்பாதித் திடஇருகை தந்ததெய்வம்
ஒருவாயே தந்த நோக்கம்,
அன்பாகப் பிறர்க்களித்துத் தாமுந்துய்த்
திடலறமென் றறிவித் தற்காம் :
நம்பால்மூ டித்திறக்கும் ஒருவாயும்
இருகாதும் நாதன் தந்த(து)
இன்பாக யாவையுங்கேட் டியம்பத்தக்
கனமட்டும் இயம்பு தற்கே.

### அருஞ்சொற்பொருள்

துய்த்தல் - அநுபவித்தல். வாய், மூடித்திறக்கும் என்றதனால் காது மூடாதிருப்பது என்பது நினைக்கத் தக்கது. நாதன் - இறைவன்.

### கேள்விகள்

1. ' களி ' என்ற செய்யுளில் உள்ள நகைச்சுவை பயக்கும் செய்தி யாது ?

2. வேங்கடசாமியின் கொடைப் பெருமை எவ்வாறு கூறப்பட்டுள்ளது ?

3. ' அதுவாம் திருப்பரங்குன்றம் '.—எது ?

4. ' வினா உத்தரம் ' என்பது யாது ?

5. வாய் ஒன்றாயிருக்கக் கை, காதுகள் இரண்டா யிருப்பதற்குக் கூறப்படும் காரணம் யாது ?

### பயிற்சி

1. ஒட்டக்கூத்தர் வரலாற்றைக் குறித்து ஐந்து வரிகள் எழுதுக.

2. ' களி ' என்பதன் இலக்கணம் கூறி, அதனை நும் பாடப் பகுதி கொண்டு விளக்குக.

3. பிரித்து எழுதுக : புள்ளிருக்கும், பூம்புகார், மூக்கரிந்த, போய்ப்படுத்தான், பொகுட்டுறைந்தான், மெய்ப்பொருள், முத்தமிழ்.

# உரைநடை

---

## 1. தலைமை உரை*—I

### திருவள்ளுவர் திருநாள்

[இராவ் சாகிப் திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை, பி. ஏ., பி. எல்.]

**திரு அவதாரம்**

தமிழ் நாடும் தமிழ் மொழியும் முயன்ற அருந்தவப் பயன் காரணமாக, ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர், நமது நாட்டில் திரு அவதாரம் செய்தருளிய வள்ளுவர் என்னும் புண்ணிய மூர்த்தியை நினைவு கூறும் பொருட்டு நாம் இன்று கூடியிருக்கின்றோம். இவரது அவதார நிகழ்ச்சியைப் போன்று அத்துணைச் சிறப்புடைய தாகப் பிறிதொரு நிகழ்ச்சி தமிழ் மொழிச் சரித்திரத்தில் உள்ளதென்று கருதுவார் பெரும்பாலும் இல்லை. தமிழ் அணங்கு தலையெடுத்து அவள் மக்களாகிய நமக்கு இன் முகங் காட்டி நிற்பது இத் திருஅவதாரத்தின் பயன் கொண்டேயாகும். தமிழ்நாடு புண்ணிய பூமியாகக் கொள்ளப்படும் பெருமை வாய்ந்தது, இவ் அவதாரத்தின் பெருமைபற்றியேயாகும். தமிழ் மக்களாகிய நாம் கௌரவ முடையதோர் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் என்று எண்ணிடப் பெற்று வருவதற்கும் இவ் அவதாரமே காரண மாகும். இங்ஙனமாகத் திரு அவதாரம் செய்தருளிய பெரி யாரை அடிக்கடி ஞாபகத்தில் வைத்துப் போற்றிப் பாராட்ட வேண்டுவது தமிழ் மக்களாகிய நமக்கு உரிமையும் கடமை யும் ஆகின்றது. தமிழ் மொழியோடு பிறந்த நமக்கன்றிப் பிற மொழிகளைப் பயிலும் அந்நியர்க்கு இப்பேருரிமை இல்லாது போயிற்று. இவ் உரிமை ஒன்றினாலேயே நாம் இறுமாந்து தலைநிமிர்ந்து நடப்பதற்குத் தகுதியுடையராயி னோம். நம் தமிழ் மக்கள்மீதும் நம் தமிழ்மொழி மீதும் பிறர் அழுக்காறு கொள்ளும்படி அத்துணைப் பெருமை அளித்தது இப்பேருரிமை என்றே கருதுகின்றேன். இங்ஙனம்

* இது திருநெல்வேலி-திருவள்ளுவர் கழக ஆண்டுவிழாவிற் பேசியது.

சிறப்பும் பெருமையும் நமக்கு அருள் செய்த புண்ணிய மூர்த்திக்கு நாம் என்றும் நன்றி பாராட்டும் கடப்பாடு உடையராக இருக்கின்றோம்.

“ எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.”

என்பதன்றோ தமிழ் வேதத்து விதி!

## நமது நிலை : அன்றும் இன்றும்

ஆனால் நமது உரிமையைப் பாராட்டி மகிழ்தற்கும் நமது நன்றியறிதலை வெளிக் காட்டிக்கொள்ளுதற்கும் மாத்திரமன்று நாம் இன்று கூடியிருப்பது. நாம் பழமையில் இருந்த சிறந்த நிலையினின்றும் வழுவிவிட்டோம். நமது பண்டைப் பெருமை நம்மினின்றும் விடை பெற்றுக் கொண்டு போய்விட்டது. நாம் அதோகதியில் வீழ்ந்து கிடக்கின்றோம் ; இப்போது முழுவதும் அடிமைகளாகி விட்டோம். அறிவிலும் ஆண்மையிலும் அன்பிலும் நாம் அடிமைகளாய் உழலுகின்றோம் ; அன்பிற்கும் அடைக்குந் தாழ் உண்டு என்பதை இப்போது அறியலானோம். “ கூற்று உடன்று 'மேல்வரினும் கூடி எதிர் நிற்கும் ஆற்றல்” உடையராயிருந்தோம் என்பது பண்டைப் பழங்கதையாய்ப் போயிற்று. ஒரு காலத்தே நம் தமிழ் மக்கள் எங்ஙனும் சென்றுலவி வாணிகம் செய்து தமிழ்நாட்டுப் பொருள்களை உலகிற்கெல்லாம் உதவி வந்தனர். நுகர்ச்சிப் பொருள்களே அன்றி, அறிவுப் பொருளும் உலகம் அனைத்திற்கும் கொடுத்துதவும் அத்துணை அளவாக நம்மிடம் இருந்தது. அவ்வறிவுப் பொருளை மேன்மேலும் விருத்தி செய்யாது வறிதே வாழ்ந்து எல்லாவற்றையும் இழந்தோம்.

“ அறிவுடையார் எல்லாம் உடையார் ; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்.”

என்ற உண்மையை மறந்துவிட்டோம். பிறநாடுகளில் அறிவு நாடோறும் பெருகிவளர நம் நாட்டில் அறிவு-வறுமை குடிகொண்டுவிட்டது. மேலை நாடுகளினின்றும் அறிவுப் பொருள் பெறவேண்டி நாம் இரந்து நிற்கின்றோம்.

தமிழ் நாட்டில் அஞ்ஞான இருள் பரந்து நிலேத்திருக்கின்றது. இவ் அஞ்ஞான இருளில் உழன்று தத்தளிக்கும் நமக்கு உய்தி உண்டென்று உணர்த்தி, நம்மை நன்னெறி உய்க்கும் ஒரு தெய்வ ஒளியை நாம் அடிக்கடி நோக்கி நெறிப்படுதல் வேண்டும் அன்றே? இவ்வியல்புடைய தெய்வ ஒளி ஒன்றை நோக்கி நெறிப்படுவதற்கே நாம் இன்று ஒருங்குகூடி இருக்கின்றேம். தமிழ் நாடனேத்தும் இத் தெய்வ ஒளியை இன்று தரிசித்து உய்தி கூடும்படி இறைவன் அருள் புரிவாராக!

## திருவள்ளுவர் காலம்

இத் தெய்வப் பேரொளியானது தோன்றிய காலம் இற்றைக்குச் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன் என்று கூறுவர். இதனேத் தமிழ் இலக்கிய–சரித்திர ஆராய்ச்சியாளரில் ஒரு சிலர் ஒப்புக்கொள்ளாமல் இருத்தல் கூடும். ஆனல், சிலர் நூறு ஆண்டுகள் முன்-பின்னுகக் கூறிக்கொள்வதில் எனது நோக்கம் பழுதுபடவில்லே. எனது கருத்தெல்லாம் பெருமக்களது அருந்தோற்றத்தால் சிறப்புற்று விளங்கும் ஒளியின்றித் தமிழ்ச் சரித்திர மண்டிலம் வறிதே இருந்த காலத்து 'வள்ளுவர்' என்று நாம் கொண்டாடும் இத்தெய்வ ஒளி தோன்றியது என்பதே. அங்கங்கே சிறுசிறு விண்மீன்கள் ஒன்று சேர்ந்து கூட்டமாக விளங்கியிருந்தன. சங்கப் புலவர்கள் என்று நாம் கருதும் நக்கீரர், கபிலர், மாங்குடி மருதனுர் முதலானேர் ஒன்றுகூடிச் சிற்றெளி நல்கித் திகழ்ந்து வந்தனர். சிலப்பதிகாரம் இயற்றிய சேரர் பெருமானுகிய பெரு விண்மீன் இன்னும் விண்ணில் ஒளிரவில்லே. தண்ணிய அருளோடு மிளிரும் தேவார ஆசிரியர்களும் ஆழ்வாராதியர்களும் இன்னும் இன்னெளி நல்கவில்லே. சிந்தாமணியை உதவியருளிய திருத்தக்க தேவர் என்னும் செவ்விய நல்லொளி இன்முகம் செய்து திகழவில்லே. திருத்தொண்டர் புராணம் என்னும் சைவ மெய்ந்நூல் அருளிய **சேக்கிழார்** எனப்படும் விடிவெள்ளி விண்ணில் இன்னும் அரும்பவில்லே. விண்ணேயும் மண்ணேயும் தன்

இடமாகக் கொண்டு, தனது பேரொளிப் பெருவெள்ளத்தால் இரு பேருலகையும் ஒளி மயம் ஆக்கிய **கம்பர்** என்னும் கவிகுல ஞாயிறு இன்னும் உதயம் செய்யவில்லை. பேரொளி மண்டிலங்கள் ஒன்றுமின்றிச் சிறு வெள்ளிகள் சிற்றொளி செய்து விளங்கிய தமிழ்ச் சரித்திர மண்டிலத்தே, நாம் இன்று போற்றித் தொழுகின்ற தெய்வ ஒளியாகிய **திங்கள்** உதயமாயிற்று.

“ திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
அங்கண் உலகளித்த லான்,” (சிலப்பதிகாரம்)

என இயற்கைத் திங்களை வணங்கும் மரபுடைய நாம், அறிவு நலந் திகழ்ந்தொளிரும் வள்ளுவர் என்னும் செயற்கைத் திங்களை வணங்கி வாழ்த்துவோமாக !

## வள்ளுவரைப் பற்றிய கட்டுக்கதைகள்

இப்பூவுலகத்தில் உள்ளவர்க்கு நிலவும் மகிழ்ச்சியும் ஒருங்கு தந்து விளங்கும் இயற்கைத் திங்கள் பூமியினின்றும் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ளது. அஃது எவ்வாறு? எப்பொழுது தோன்றியது? அதன் சரித்திரம் யாது? இவை போன்ற கேள்விகளுக்கெல்லாம் நமக்கு விடை கிடைப்பதரிது. திங்களின் தண்ணிய ஒளி மண்டிலத்தின் அழகிலே இன்புறுவதோடு நமது மனம் அமைதியுறுகின்றது. அதன் சரித்திரம் பற்றிய கேள்விகள் அனைத்தும் நம் அகங்காரத்தினாலும் ஆசைப் பரப்பினாலும் எழுகின்றன. சில சில விடைகளை அனுமானிக்கின்றோம். சிறு குழந்தைகள் கூனக் கிழவி அதில் வசித்து வருவதாகப் பாவிக்கின்றார்கள். வயது முதிர்ந்துவிடின், குழந்தை மதியும் நம்மைவிட்டு அறவே ஒழிந்துவிடுதல் உண்டோ? கவிதா கற்பனை என்பது இக்குழந்தை மதியோடு ஒருபுடை ஒற்றுமை உடையதென்பது பெரியதோர் உண்மையே அன்றோ? ஆகவே நாமும் பாற்கடலில் அம்புலி தோன்றியதாகப் பாட்டிசைக்கின்றோம்; அதன்கண் முயல் இருப்பதாகப் புனைந்து உரைக்கின்றோம் ; அதனை ராகு கேதுக்கள் விழுங்கி உமிழ்வதாகக் கதை விளம்புகின்றோம். இங்ஙனமாகப்

புனைந்துரைத்துக் கொள்வதன்றி உண்மை உணர்ந்து கொள்ளுதல் அரிய செயலாகின்றது. இதுபோலவே, இன்று நாம் தொழுது வாழ்த்தும் 'வள்ளுவர்' என்னும் தெய்வ-ஒளி வீசும் திங்களின் சரித்திரமும் நம்மால் அறிதற்கு அரிதா யிருக்கின்றது. எத்தனையோ கட்டுக் கதைகள் புனையப் பட்டுள்ளன ! 'வள்ளுவர்' என்ற பெயரால் அவர், 'புலைச்சி மகன்' என்ற கதை பிறந்தது. புலைக்குலத்தானுக்கு இத் துணைப் பேரறிவும் பெருங்கல்வியும் இருத்தல் பொருந்தாது என்றெண்ணிப் புலைச்சிக்கும் பிராமணன் ஒருவனுக்கும் இவர் பிறந்ததாகக் கதை எழுந்தது. சிலர், 'வள்ளுவர்' என்ற சொல்லுக்கு 'வண்மையுடையார்' என்ற பொருள் கூறி, இவ்விடர்க்கடலைக் கடக்கத் தலைப்பட்டனர். சீத்தலைச் சாத்தனுர்க்குத் திருவள்ளுவரது திருக்குறளால் தலைக்குத்துத் தீர்ந்த கதை பன்முறை கேள்விப்பட்டிருக்கின்றோம். இக் கதை முழுவதும் 'தலைக்குத்து' என்னும் தொடருக்கு இரண்டு பொருள் இருப்பதனுலும், 'சீத்தலை' என்பது ஓரூர் என அறியாமற் போனமையாலும் ஏற்பட்டதாகும்.

> "சீந்திநீர்க் கண்டம் தெறிசுக்குத் தேனளாய்
> மோந்தபின் யார்க்கும் தலைக்குத்தில் ;—காந்தி
> மலைக்குத்து மால்யானை வள்ளுவர்முப் பாலால்
> தலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு."

இச்செய்யுளில் தலையிடி மருந்து கூறப்பட்டிருக்கின்றது. இம்மருந்தினை மோந்த மாத்திரையில் தலையிடி தீர்ந்துவிடும். 'குற்றம் நிரம்பிய நூல்களைத் தினந்தோறும் செவிமடுத்து என்றும் தீராத தலையிடியுடையவராய் இருந்த சாத்தற்கு வள்ளுவரது முப்பாலால் அந்நோய் தீர்வெய்திற்று,' என்பதே இதன் கருத்து. இச்செய்யுளகத்துத் 'தலைக் குத்து' என்ற சொல் பயின்று வந்திருத்தலால், குற்றமுள்ள நூல்களைக் கேட்குந்தோறும் சாத்தர் எழுத்தாணியைக் கொண்டு தம் தலையிற் குத்தித் தமது விதியை நொந்து கொள்வார் என்றும், 'சீத்தலைச் சாத்தனுர்' என்ற பெயர் வழக்குண்மையால் எழுத்தாணியாற் குத்துண்ட அவர் தலையிற் சீழ் எப்போதும் வடிந்துகொண்டிருந்தது என்றும், இச்சீழ் வடிதலும் எழுத்தாணிக் குத்தும் வள்ளுவரது

முப்பால் மருந்தினால் அறவே இல்லாது போயின என்றும், கட்டுக் கதைகள் கிளைக்கத் தலைப்பட்டன. இது போன்ற தொரு தப்பு உணர்ச்சியின் காரணமாக, வள்ளுவர்க்குக் கற்பிற்சிறந்த இல்லறத்தலைவி ஒருத்தியை அடையும் பாக்கிய மும் கிடைத்திருக்கின்றது.

“ அடிசிற் கினியாளே அன்புடை யாளேப்
படிசொற் பழிநாணு வாளே—அடிவருடிப்
பின்தூங்கி முன்னுணரும் பேதையை யான்பிரிந்தால்
என்தூங்கும் என்கண் எனக்கு.”

என்ற செய்யுள், வள்ளுவர் தம் பத்தினியாரைக் குறித்துப் பாடியதாகக் கருதப்பட்டது. இதினின்றும் கற்பு-மாட்சி தெரிவிக்கவல்ல அழகிய பல கதைகள் புறப்பட்டுவிட்டன! ஆனால், இச்செய்யுள் வள்ளுவர் வாக்கு அன்று என்பதற்கு இச்செய்யுளகத்தே பொய்யாததோர் சான்று நிலைபெற் றிருக்கின்றது. ‘ தூங்குதல் ’ என்ற சொல்லுக்கு ‘ உறங்கு தல் ’ என்ற பொருள் வள்ளுவர் காலத்தில் இல்லை. சங்க நூல்களில் ஓரிடத்தேனும் இப்பொருளில் இச்சொல்லைக் காணுதல் கூடாது. வள்ளுவர் தாமும் இச்சொல்லைப் பல முறை வழங்கியுள்ளார்; பொருள் இஃதன்று. தூங்காமல் தூங்கிச் சுகம்பெற்றுச் சோம்பி இருந்த பிற்காலத்தே புகுந்த வழக்காகும் இது. பிற்காலத்துப் பிறந்த செய்யுளை வள்ளுவர்மீது ஏற்றி, அவர்க்குத் திருமணம் நிகழ்த்தப்பட் டிருக்கின்றது.

### இக்கதைகளில் காணப்படும் உண்மை

மேற்குறித்தன போன்ற கட்டுக் கதைகளால் ஓர் உண்மையை நாம் உணர்கிறோம். வள்ளுவரது திரு மேனிக்குத் தமிழ் மக்கள் பண்டு தொட்டு இன்றுவரை இடையறாத அன்பு பூண்டு வந்திருக்கிறார்கள் என்பதுவே அது. அநேக நூற்றாண்டுகளாகத் தமிழ் மக்கள்தம் உள்ளத்தை வள்ளுவர் கொள்ளை கொண்டு உலவிவரு கின்றார். நம்மோடு ஒப்ப நம் மூதாதையர்கட்கும் அவரது

திருநாமம் சிந்தைக்கும் செவிக்கும் இனிதாயுள்ளது. 'அவரது சரிதம்' எனப் பெயரிட்டு எழுந்தன எல்லாம் புண்ணியம் பயப்பனவாக நம்மவரால் கருதப்பட்டன. கரையிலாது பொங்கி எழுந்த அன்பின் பெருக்கத்தால் முற்கூறியன போன்ற கதைகள் முளைத்துச் செழித்து வளர்ந்தன என்று நாம் உணர்ந்த அளவில் நமது மனம் பக்தியாற் கனிவெய்துகின்றதே அன்றி, அவற்றின் பொய்மை—மெய்மைகளைத் தெரிதற்கு ஒருப்படுவதில்லை. அன்றியும், அழகுள்ள கதைகளில் யார்தாம் ஈடுபடமாட்டார்கள்! யார்தாம் மயங்கிவிடமாட்டார்கள்! குணத்தானும் செயலானும் பெரியவர்களாய் உள்ளவர்களைப் பற்றிய அழகிய கதைகள் நம்மை வசீகரித்துவிட்டன என்று நாம் ஒப்புக்கொள்ளுதலிற் குற்றம் சிறிதேனும் உண்டோ? இல்லை. எனினும் ஒரு விஷயத்தை நாம் மறந்துவிடல் ஆகாது. சந்திரனது ஒளிமண்டிலத்தைக் கடந்து அதன் இயற்கையைக் கண்டறிதற்குக் கண் கூசி வலியற்று நிற்பதுபோல, திருவள்ளுவரது புகழ் மண்டிலத்தைக் கடந்து அவரது உண்மைச் சரித்திரத்தை உணர்தற்கு நம் அறிவு வலியற்று நிற்கின்றது. இதனை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுதல் பெரிதும் ஆவசியகம்.

### அருஞ்சொற்பொருள்

அவதாரம் - பிறப்பு. சரிதம் - சரித்திரம். அணங்கு - தெய்வம். இன் - இனிய. இறுமாப்பு - கர்வம். அழுக்காறு - பொறாமை. கடப்பாடு- கடமை. உய்வு - தப்பும் வழி. தமிழ் வேதம் - திருக்குறள். வழுவுதல் - தவறுதல். உழலுதல் - கஷ்டப்படுதல். கூற்று - இயமன். எங்கணும் - எங்கும். நுகர்ச்சி - அநுபவித்தல். வறிதே - வீணாக. என் - எவற்றை. அஞ்ஞானம் - அறிவின்மை. நெறிப்படுதல் - வழிப்படுதல். இற்றைக்கு- இன்றைக்கு. பழுது - குற்றம். நல்கி - கொடுத்து. திகழ்ந்து - விளங்கி. ஒளிர்தல் - விளங்குதல். அரும்புதல் - தோன்றுதல். ஞாயிறு - சூரியன். போற்றுதும் - வணங்குவோம். கொங்கலர்தார் - தேன் துளிக்கும்மாலை. சென்னி - சோழன். வெண்குடை - கொற்றக் குடை. அங்கண் - அழகிய இடம் அகன்ற. மரபு - வழக்கம். தண் - குளிர்ச்சி. அகங்காரம் - ஆணவம். அனுமானித்தல் - கருத்தாலறிதல். மதி - அறிவு. அற - முழுவதும். அம்புலி - சந்திரன். தலைக்குத்து - தலைவலி, தலையில் குத்திக்கொள்ளுதல்.

சீந்திநீர் சர்க்கரை, சுக்கு, தேன் - தலைக்குத்துப் போக்கும் மருந்து. மால் - பெரிய. பயின்று - அடிக்கடி. வருடி - தடவி. படிசொல் - சொற்படி. ஆவசியகம் - அவசியம்.

### கேள்விகள்

1. வள்ளுவரின் பிறப்பைப் பற்றி ஆசிரியர் கூறும் செய்தி யாது?
2. பண்டைப் பழங்கதையாய்ப் போனது எது?
3. ஆசிரியர் புலவர் பெருமக்களைப் பாராட்டும் வகை யாது?
4. வள்ளுவரைப் பற்றி வழங்கும் கட்டுக் கதைகள் யாவை?
5. 'அடிசிற் கினியாளை' என்று தொடங்கும் பாடலுக்கு ஆசிரியரின் மறுப்புரை யாது?
6. வள்ளுவரைப் பற்றி வழங்கும் கட்டுக்கதைகளால் நாம் அறியும் உண்மை யாது?

### பயிற்சி

1. திருவள்ளுவர் காலம் என்ற தலைப்பில் உள்ள செய்தியைத் தொகுத்து வரைக.
2. ஏனைப் புலவர்களுடன் திருவள்ளுவரை ஒப்பிட்டு ஆசிரியர் கூறியுள்ள செய்திகளை உங்கள் சொந்த நடையில் எழுதிக் காட்டுக.

# 2. தலைமை உரை—II

[இராவ் சாகிப் திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை, பி.ஏ., பி.எல்.]

## ஆசிரியனும் நூலும்

வள்ளுவரது சரித்திரத்தில் ஓர் உண்மை மாத்திரம் நம் அறிவைவிட்டு எவ்வகையானும் தப்பிச் செல்ல முடியாதபடி அகப்பட்டுக் கொண்டது. அறிவில் அகப்பட்டது என்று கூடச் சொல்லுதல் தவறு. நமது பார்வையிலேயே மிக எளிதில் அது சிக்கிக்கொண்டது. அவ்வுண்மை யாதெனின், திருவள்ளுவர் திருக்குறள் செய்தருளினர் என்பதே ஆகும். இதனை அறியாதார் இல்லை. ஆனால், இதன் பொருண்மையும் பயனும் உணர்ந்தோர் மிகச்சிலரே யாவர். ஒரு நூல் சிறப்பு வாய்ந்ததெனின், அதன் ஆசிரியனது இதயத்தி னின்றும்—அறிவினின்றும்—அது பிறந்திருத்தல் வேண்டும். ஆசிரியன் தன்னையே தனது நூலில் அமைத்து விடுகின்றான். ஆசிரியனது உயிர் நாடி அவனது நூலிலேயே துடிதுடித்துக்கொண்டு இருப்பதாகும். ஆசிரியனுக்குரிய சிறந்த ஆத்ம குணமெல்லாம் நூலினகத்தும் காணப்படுதல் நிச்சயம். நூலிற் கூறுகின்ற வாழ்க்கை நிலையில் ஆசிரியன் தானே வாழ்கின்றான். தனது நுண்மாண் நுழைபுலங் கொண்டு செய்திகளின் உண்மையை நுனித்து உணருகின்றான். தனது பேராற்றலால் அவ்விஷயங் களின் பொருளைக் கூர்ந்து உணர்ந்து தனது அரிய புலமைத் திறத்தால் அவற்றைப் பிறரும் கூர்ந்து உணரச் செய்கிறான். சுருங்கக் கூறின், ஆசிரியனது உயிர் வாழ்வின் சாராம்சமே அவன் இயற்றிய பெருநூல் எனத் தகும். இக்காரணம் பற்றியே மில்டன் என்னும் ஆங்கில மகாகவி, " அறிவிற் சிறந்த பெரியோன் ஒருவன், அநித்திய மாகிய தனது பூத உடம்பு நீங்கியபின் என்றும் அழியாத புகழ் உடம்போடு நிலைத்த வாழ்வு எய்தற்பொருட்டு, தனது இனிய ஆருயிரை வாசனை ஊட்டித் தைலத்தோணி யில் வளர்த்திட்டு வைப்பது போன்றதாகும் அப்பெரியோன் இயற்றிய பெருநூல் " என்னும் கருத்துப்பட வரைந் துள்ளார். இதன் உண்மை, அருஞ்சிறப்பு வாய்ந்த பெரு நூல்களோடு மாத்திரமே பொருந்துவதாகும். ஓர் உயரிய

நூல் எல்லாவகையானும் உயர்ந்தோன் ஒருவனது உள்ளத்தினின்றே தோன்றுதல் கூடும். நூலை நன்கு உணர்ந்தவன் மூலமாகத்தான் ஆசிரியனை நாம் அறிதல் இயலும். தினந்தோறும் நம்முடன் பழகி வருபவரது குண குணங்களும், நோக்கமுறையும், பெருமையும், சிறுமையும், அவர்கள் பேசும் குரலும் நாளுக்கு நாள் நமக்கு விளக்க மாதல் போலவே, சிறந்த ஒரு நூலாசிரியனது நூலை நாம் கற்கக் கற்க, அவ் ஆசிரியனது குணப்பெருமை, அவன் உலகினை நோக்கும் முறை, அவனுடைய குறை-குற்றங்கள், அவன் சொல்லாடும் முறை—இவை எல்லாம் நமக்குப் புலப் படுகின்றன. இவ் வண்ணமாக வள்ளுவரைத் தமிழ் மக்கள் நன்கு அறிந்துகொள்ளுதல் ஏலும். வள்ளுவரது வாழ்க் கைச் சரித்திரம் அவர் இயற்றியுள்ள ஒப்பற்ற திருக்குறள் நூலில் விரிவாய் அமைந்திருக்கின்றது. திங்கள் வேறு, அதன் ஒளிமண்டிலம் வேறு என்று நாம் கருதுவதில்லை. இங்ஙனமே, வள்ளுவர் வேறு, அவரது தெய்வத் திருக்குறள் வேறு என்பது இல்லை. **திருக்குறள் என்பதுதான் திருவள்ளுவர்**. ஆகவே, விரிவான சரித்திரம் ஒன்று வேண்டும் என்னும் தேவையே இல்லா தொழிகின்றது. வள்ளுவரது வாழ்க்கையில் பிற மக்களோடு ஒப்ப அவர் செய்திருக்கக் கூடும் சிறு செயல்களால் நமது மனம் அலைப்புண்டு உழலாதபடி, அவரது வாழ்வின் தனிப்பெரு நோக்கமாகக் கொண்டியற்றிய நூலின்கண் மாத்திரம் நம் அறிவைச் செலுத்திப் பயன் பெறுமாறு ஆணை இடுவித்த ஊழ்-விதிக்கு ஒரு முறையில் நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

### திருக்குறள்-ஊருணி

இவ்வாறாகத் தம்மை வேறென்று கொள்ளாது, தமது ஆருயிர் நிலைத்து வாழ்வதற்கென்றே அரிதின் அமைத்து வைத்த உடல் போன்று உள்ளதாகும், வள்ளுவர் என்னும் தண்மதி அருளிய அருமைத் திருக்குறள். அழகிய இப்பெரு நூலின் இயல்பினை ஒருவாறு சுட்டிக் கூறுவதோடு இப்போது அமைகின்றேன். அங்கண் விசும்பில் ஒளிரும் திங்களின்

நிலவினை இன்னார்தாம் நுகர்தற்குரியார் என்பதில்லை. எளியார்க்கும் வலியார்க்கும், செல்வர்க்கும் வறிஞர்க்கும் சந்திரன் ஒன்றுபோல ஒளி நல்குகின்றது. பகை-நண்பு என்பதும், இனத்தார்-அந்நியர் என்பதும் நிலவுக்கில்லை. இது போன்றே இன்று நாம் போற்றுதற்கமைந்த வள்ளுவர் என்னும் தெய்வ ஒளியானது யாவர்க்கும் வேறுபாடின்றி ஒன்றுபோல நெறி காட்டி உதவும் தகைமையது. வள்ளுவர் தாமே, ஓர் அழகிய செய்யுளில் தம் கருத்தை வெளியிட்டிருக்கின்றார்.

> "ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
> பேரறி வாளன் திரு."

என்பது அச் செய்யுள். 'நீர் நிறைந்த ஊருணி தன்னை அடைந்தார்க்கெல்லாம் வேற்றுமையின்றி நீரை உதவி இன்பம் அளிக்கின்றது. இவ்வண்ணமே பேரறிவாளனது பெருஞ் செல்வமும் நெடிது நின்று எல்லார்க்கும் வேண்டுவன தப்பாது உதவி இன்பம் அளிக்கின்றது' என்பது செய்யுளின் கருத்து. உலகத்தின் 'பேரறிவாளன்' என்று அழைப்பதற்கு வள்ளுவரைக் காட்டிலும் சிறந்த உரிமையுடையார் அரியர். இவர் தந்தருளிய திருக்குறள் நூலைக் காட்டினும் பெரியதொரு செல்வம் உளதெனல் அரிதாம். செல்வத்துட் செல்வமாகிய இத்திருக்குறள், நீர் நிறைந்த ஊருணியை ஒத்து நலம் பயக்கின்றது. அறிவுத்தாகத்தால் வருந்துவோர் அனைவரும் திருக்குறள் நூலால் அறிவு உதவப்பெற்று இன்பம் எய்துதல் கூடும். இல்லற நெறியில் நிற்குமவர்கள், துறவிகள், அரசர்கள், குடிகள், பகைவர்கள், நண்பர்கள்-இவ் அனைவர்க்கும் அறிவுப் பொருளை இப்பெரு நூல் உதவுகின்றது. சுருங்க உரைக்குமிடத்துப் பல்வேறு வகைப்பட்ட வாழ்க்கை நிலையில் உள்ளவர்க்கும் சிறந்த அறிவுரைக் களஞ்சியமாக விளங்குவது நம் தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் அருளிய தெய்விகப் பெருநூல்.

### திங்கள்-திருவள்ளுவர் வேறுபாடு

வள்ளுவரை, வானில் நிலவுவிட்டு ஒளிரும் தண்மதியத்திற்கு ஒப்பாகக் கூறிவந்தேன்; எல்லார்க்கும் ஒப்ப உதவி,

உய்நெறி காட்டலில் இது பொருந்தும். ஆனால், நம் முதற்பாவலர்க்கே தனித்து உரிய வேறொரு பெருமையும் இருக்கின்றது. நிலவுப் பயன் கொள்ளுதல் வெளி முற்றத்தும் மேல் மாடத்துந்தான் இயலும். பலகணி இல்லாத வீட்டினுள்ளே நிலவொளி பரவுவதில்லை. வள்ளுவரது தெய்வ ஒளியோ பரவிச் செல்லக்கூடாத இடமே இல்லை. விண்மதியம் போலக் காலத்தால் மிக்க தூரத்தில் ஒளிவிட்டுத் திகழ்ந்த போதிலும், யாவரும் எவ்விடத்தும் கொண்டு செல்லத்தகும் கைவிளக்குப் போல அடுத்து நின்றுதவும் தன்மை, நாம் இன்று தொழுது வணங்கும் தெய்வ ஒளிக்கு உளதாகின்றது. இத்தெய்வ ஒளியால் தமிழ் மக்களாகிய நாம் இருள் நீங்கி உய்தி பெறுவோமாக !

நின்று சுடரெறித்து நெஞ்சத் திருளகற்றி
இன்றுபோல் என்றும் இலங்கிடுக—துன்றுபுகழ்த்
தெய்வப் புலமைத் திருவள் ளுவர்என்னும்
மெய்வைத்த வேத விளக்கு.

### அருஞ்சொற்பொருள்

பொருண்மை - பொருளது உண்மை. நுனித்து - ஆராய்ந்து. அநித்தியமாகிய - நிலையற்ற. ஏலும் - முடியும். ஊருணி - ஊர்க்கிணறு. தகைமை - தன்மை. களஞ்சியம் - சேமிப்பு இடம். இலங்கிடுக - விளங்கிடுக. துன்று - பொருந்திய.

### கேள்விகள்

1. ‘பெருநூல்’ என்று ஆசிரியர் எதனைக் கூறுகின்றார் ?

2. நூலாசிரியனுடைய பல பண்புகளை நாம் எவ்வாறு அறிய முடியும் ?

3. திருக்குறளை ஓர் ஊருணிக்கு ஒப்பாக ஆசிரியர் எவ்வாறு கூறுகின்றார் ?

4. திங்களுக்கும் வள்ளுவருக்குமுள்ள வேறுபாடு யாது ?

### பயிற்சி

1. வள்ளுவரைப்பற்றி நீங்கள் அறிந்தவற்றைச் சுருக்கி வரைக.

2. மில்டன் என்னும் ஆங்கில மகாகவியின் கூற்றுக்கு வள்ளுவரை ஆசிரியர் பொருத்தமாக்குவதை விளக்குக.

3. வள்ளுவர் காலம் - அவரைப் பற்றிய கதைகள்-அவரது நூலின் பெருமை - முடிவுரை என்னும் குறிப்புக்களைக் கொண்டு இவ்விருபாடப் பொருளையும் சுருக்கி ஒரு கட்டுரையாக எழுதுக.

## 3. சமய வாழ்க்கை

[திரு. எஸ். சச்சிதாநந்தம் பிள்ளை, பி.ஏ., எல்.டி.]

இக்காலத்தில் மக்களிற் பெரும்பாலார் நடத்திவரும் வாழ்க்கையைப் பார்க்கும்போது, அதில் சமயம் என்பதற்கு இடம் அரிதாயிருப்பது புலப்படும். 'சமயத்தைக் கவனிப் பதற்கு இது சமயமன்று' என்று பலர் திட்டமாய்ச் சொல்லி விடுகிறுர்கள். கழிக்கத் தகுந்த பழைய அநாகரிகங்களில் சமயவாழ்க்கையும் ஒன்றென்பது அவர்கள் கொள்கை. 'நாகரிகமாய் உண்ணவும், உடுக்கவும், உறங்கவும், ஆடவும், ஓடவும், பாடவும், புலனுரைப் பிரபஞ்ச கேளிக்கைகளைக் கண்டு களிக்கவும், இவற்றிற்கெல்லாம் இன்றியமையாத செல்வத்தை மேன்மேலும் வளர்க்கவும் பொழுது அதிகமாய் வேண்டியிருத்தலால், கண்ணுக்கெட்டாத வொரு கடவுளைப் பற்றிக் கவலைப்பட நேரமேது!' என்பர் பலர். இம்மனப் பான்மை பரவிவிட்டதற்குச் சான்றுகள் பலவுள. தேவாலயங்களுக்குச் செல்வோர் தொகை அருகிப்போயிற் றென்னும் கூக்குரல் மேல்நாடுகளிலும், நமது நாட்டிலும் கேட்கப்படுகின்றமை ஒரு சான்று. மக்கள் வாழ்வில் அதர்மம் அதிகமாகி வருகின்றது மற்ருெரு சான்று.

இவ்வாறு சமயத்தைக் கைக்கொள்ளல் சழக்கு என்று தள்ளி, 'நாகரிக' வாழ்க்கையைப் பெருக்கி வந்த மேல் நாடு இப்போது எந்நிலையிலுள்ளது? அதன் கோரத்தை விரிவாய் வருணிக்க இங்கிடமில்லை. நவீன நாகரிகமென்னும் ஆசுர சிருஷ்டி, ஐரோப்பியப் பெரும்போரின் யுத்தகளத்தில் பொடி பட்டுச் சிதறிக் கிடக்கின்றது. அந் நாகரிகத்தைக் கொண் டெழுந்த அரசாங்கங்கள் பல, காகித அட்டைகளாற் கட்டப் பட்ட கட்டடம்போல் கலைந்துபோயின. லக்ஷக்கணக்காக மக்கள் ஒருவரையொருவர் சுட்டுக் கொன்றுகொண்டனர். லக்ஷக்கணக்கான பேர்கள் உறுப்பிழந்து வருந்திக்கொண் டிருக்கின்றனர். சண்டை முடிந்தும் நிலைத்த சமாதானம் ஏற்படவில்லை. 'வேலை கிடைக்கவில்லை'; 'உணவு கிடைக்க வில்லை'; 'நியாயங் கிடைக்கவில்லை' என்னும் அலர்மொழி கள் இன்னும் ஒய்ந்தில. பழத்தைக்கொண்டு மரத்தை

மதிக்கவேண்டுமென்பது பழமொழி. அங்ஙனமாயின், மேற்சொன்ன துன்பக் கொத்தைத் தந்த 'நாகரிக மரம்' நல்லதோ தீயதோ என்று நாம் சொல்லவும் வேண்டுமோ?

ஆழ்ந்து பார்க்கின், சமயச் சார்பில்லாமையே இந்த நாகரிகத்தின் சிறப்பியல்பு என்று தோன்றும். எனவே சமயச் சார்பு எத்தகையது என்று நன்காராய்தல் இக்காலத்தவர்க்கு ஒரு முக்கிய கடமையாம். ஆதலின் சமயமென்ருலென்ன என்று விசாரிப்போம்: இச்சொல், 'வேளை' என்னும் பொருளிலும், உலகு உயிர் கடவுளைப்பற்றிய கொள்கை என்னும் பொருளிலும் பெரும்பாலும் வழங்கும்; மற்றும் சில பொருளுமுண்டு. அதன் வேர்ச் சொல்லை ஆராயின், 'நன்ருகச் செய்யப்பட்டது' என்னும் பொருள் கிடைக்கின்றதென்ப. ஆங்கிலத்தில் இப்பொருளில் (Religion) என்னுமொழி வழங்குகின்றது. அது இரண்டு லத்தீன் பாஷைச் சொற்களாலானது; இவற்றின் பொருள் 'மீண்டும் பிணிப்பது' என்பதாம். நமது மொழியில், 'மார்க்கம்', 'நெறி' என்பனவும் இதற்கு மறு சொற்களாய் வழங்குகின்றன. இவ்வுண்மைகளைப் பார்க்குமிடத்து, உயிர்கள் இறைவனைச் சென்றடைதற்கு, அவனேடு மீண்டும் பிணிப்புறுதற்கு, நன்ருகச் செய்யப்பட்டதொரு வழி என்னும் பொருளைச் 'சமயம்' என்னும் சொல்லிற் காணலாம். பெருநெறி ஒன்றுளதாயின், அதில் ஆங்காங்கு, தங்குமிடங்களும், வேறுபல கிளைவழிகளின் சந்திப்பும் இருத்தல் இயல்பே. அன்றியும் அவ்வழி ஓரிடத்திற்போய் முடிவு பெறுவதாயுமிருக்கும். "ஒன்றது பேரூர்; வழியாறதற்குள" என்ருர் திருமூலர். மோக்ஷமென்னும் ஊருக்கு அறுவகைச் சமயங்களென்னும் ஆறுவழிகளுள என்பது அவர் கருத்து. வழிமுடியுமிடம் முத்தி எனவே, அவ்வழியிற் செல்லுதற்குரியோர் ஆன்மாக்கள் என்பதும் பெறப்படும். இந்நெறியிற் செல்வதே இங்குச் சமய வாழ்க்கை என்று குறிக்கப்படுகிறது.

இனி உருவகத்தை விடுத்து, சமயவாழ்க்கையின் அடிப்படையான இலக்கணங்கள் இவையெனக் காண முயல்வோம்: மற்ற விஷயங்களிற்போலவே, இதிலும் கருத்து வேறுபாடு

கள் உண்டு. அவை மக்களின் அறிவு ஆராய்ச்சி அநுபவம் தூய்மை இவற்றின் பக்குவ முதிர்ச்சிக்கேற்றவாறிருக்கும். இவற்றிற் சிறந்து விளங்கும் பெரியாரைத் துணைக்கொண்டு அவர்கள் உணர்த்துவனவற்றைமட்டும் இங்குக் குறிக் கொள்ளல் நலம். இன்னார் கூறுவதையெல்லாம் ஆழ்ந் தகன்று ஆராயின், எல்லா உயிர்களும் எல்லாப் பொருள் களும் ஒரு பெருங்கட்டிற்குட்பட்டு இயங்குகின்றன வென்னும் உண்மையுணர்ச்சி இவர்தம் வாழ்க்கை மேம் பாட்டிற்கு ஓர் அடிப்படையாயிருத்தல் முதன்மையாய்ப் புலப்படும். இவ்வாறு எல்லாவற்றையும் தனக்குள் வைத்து இயக்கி இன்புறுத்தும் அருட்பெருந் தடங்கடலாகிய ஒரு பரம சக்தி உண்டென்பதை, அநுபவ ஞானிகள் அமுதமொழி களால் வெளியிட்டுள்ளார்கள்.

உலகப் பொருளைக் காண்டல் கருதல் என்னும் அளவை களால் துருவித் துருவிச் சோதிக்கும் தற்கால ஆராய்ச்சி யாளரும், பிரபஞ்ச அமைப்பின் ஒழுங்கைப் பல்லாயிர உதாரண வாயிலாய் விளக்குகின்றார்கள். பிறிதொரு சம்பந்தஞ் சிறிதுமில்லாப் பொருள் மண்ணிலுமில்லை, விண்ணிலுமில்லை, அறிஞர் எண்ணிலுமில்லை என்று திண்ணமாய் நாட்டுகின்றார்கள். இங்ஙனம் எல்லாவற்றை யும் பிணித்து ஓரமைப்புக்குட்படுத்தி, நடத்திவரும் பேரறிவும் பேராற்றலும் மிக்க பரம்பொருள் ஒன்றுண்டென்பது மட்டும் அவர்கள் துணையால் நம் அறிவுக்கும் எட்டுகின்றது. அப் பொருளின் தன்மையை உள்ளவாறு முழுதுணர்தல் வெளி முக நோக்கிற் கெட்டுவதன்று. ஆதலாற்றான், ‘ சையன் ஸில் ’ அப்பொருளினியல்பு விவரிக்கப்படுவதில்லை. தத்துவ ஆராய்ச்சியும் சமய வாழ்க்கையுமே அவ்வுண்மை உணர்தற் குரிய சாதனங்கள். இவற்றைச் செவ்வனே கையாளுவோர் பன்னாட்டிலு மிருந்தனர். அவர்கள் அப் பரம்பொரு ளியல்பை, உணர்ந்து ஓதக்கூடிய அளவும் ஓதி, உலகிற்கு உபகரிக்கின்றனர்.

எனவே, பலநிற மணிகளூடே ஒரு நூல் நுழைந்து நின்று அவைகள் யாவற்றையும் ஒழுங்குபடுத்துவது போல, எல்லாவற்றிற்கும் ஆதாரமாய் நின்று நிரல்படுத்தும் பரம்

பொருள் ஒன்றினிருப்பை யுணர்தல் சமய வாழ்க்கையின் முதலிலக்கணம் என்பது பெற்ரும். இதையொட்டிய மற்ருேருண்மையும் பிரித்தோதல் நலமே : எங்கும் நிறைந்துள்ள பரம்பொருள் மூலமாய், எல்லேயில் பேதமுள்ள உயிர்ப்பொருள்கட்கும் சடப்பொருள்கட்கும் ஓர் ஒற்றுமை உண்டாகின்றது. எந்த ஓர் உயிரும் தன் மட்டில் தனித்து நிற்றற்கியலாது, பிறவற்ருேடு நேராகவோ, படிமுறையாலோ தொடர்பு பெற்றிருக்கின்றது. ஆன்மநேய ஒருமைப் பாட்டினுண்மை இந்நியாயத்தாற் பெறப்படுகின்றது. எவ்வுயிரிடத்தும் அன்பாயிருக்க வேண்டுமென்று அறிவுறுத்த வந்தவொரு பெரியார் இறைவன் எவ்வுயிரிலும் நீங்காது நிறைந்திருப்பதையே காரணமாகக் காட்டினர். இதனை,

" எவ்வுயிரும் நீங்கா துறையும் இறைவன்என்
றெவ்வுயிர்க்கும் அன்பா யிரு "

என்னும் செய்யுளிற் காணலாம்.

சமயியாவான் அடுத்தபடியாக உணர்வது ஒன்றுண்டு : எல்லாவற்றையும் ஓரமைப்பிற்குட்படுத்திப் பரம்பொருள் இயக்கி வருதலின் குறிப்பை உணர்ந்து, அக்குறிப்பின் வழி நடக்கமுயலுவன். யாவும் திருவருள் வெள்ளத்தின் அறிந்தும் அறியாமலும் சென்றுகொண்டிருப்பதைக் காண்போன், புத்தி பூர்வமாகவே அத்திருவுளக் குறிப்பின்படி நடக்க விரும்புவான். இதனை மாணிக்கவாசகப் பெருமான், " அவன்றன் குறிப்பே குறிக்கொண்டு போமா றமைமின் " என்று அறிவுறுத்தியருளினர்.

அக்குறிப்பு யாதாயிருக்கலாம் ? தெய்வமிலதென்பார் அவன் குறிப்பு யாதென வினவ வேண்டியதின்று. அவர் குறிப்பெல்லாம் தங்குறிப்பே ; ஐம்புலன்கள் காட்டும் அவலட்சியமே. ஆனுல் தெய்வம் உளதென்பார் வினவாதிருக்க இயலாது. அவ்வினுவிற்கு விடை அவரவர் மனச்சான்றின் மூலமாய்ப் பிறக்கும்.

" நானேது மறியாமே என்னுள் வந்து
நல்லனவும் தீயனவும் காட்டா நின்ருய் "

என்று நாவுக்கரசர் நமக்கு உபதேசித்துள்ளார். ஆனுல் அங்ஙனம் இறைவன் காட்டும் குறிப்பை, நாம் நமது பக்குவக்

குறைவு காரணமாக, அசட்டை செய்யவும், விபரீதமாய்க் கொள்ளவும் உணராதே விட்டிடவும் கூடும். இவ்வாறே அக் குறிப்பின் விளக்கம் நமது பக்குவத்தைப் பொறுத்து நிற்றலால், பரம்பொருளோடு ஒற்றித்துநின்று உண்மை உணர்ந்தார் வாய்மொழி நமக்குச் சாலச் சிறந்ததாகும். ஞானச் செல்வராகிய தாயுமானுர் ஒரு சமயத்து, இரண்டு வரங்களை இறைவன் பாற் கேட்டருளினுர். அவை :

"வந்தித்து நின்னை மறவாக் கடனுகச்
சிந்தித்து நிற்கஅருள் செய்யாய் பராபரமே"
"எவ்வுயிரும் என்னுயிர்போ லெண்ணி இரங்கவுநின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே"

என்பன.

இயேசுநாதரை ஒருவன் கண்டு, சுவாமி, இரட்சிப்புப் பெறும் பொருட்டு யான் செய்யவேண்டியது யாது ?" என்று கேட்டான். அதற்கு அவர், "உன் முழு அன்பையும், உன் முழு ஆன்ம சக்தியையும்கொண்டு உன் கடவுளை நேசி. உன்னை அடுத்துள்ளவரையும் உன்னைப்போலவே நேசி" என்று பதில் தந்தார். இவ்விரு பெருஞானிகளும் கூறியதில், பொருளும் முறையும் ஒத்திருத்தல் பெரிதும் கவனிக்கத் தக்கது. இவ்வுபதேச மொழிகள் கூறும் பொருள்கள் சாதன மட்டுமல்ல, சாத்தியமுமானவை. 'சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்து' என்றும் 'அந்தமில் இன்பத்து அழிவில் வீடு' என்றும் போற்றப்படும் மோட்சநிலை இறைவன் திருவடியில் இரண்டறக் கலத்தலே என்ப. அவ்வாறு கலந்தோர்க்கு மேல் விவரித்த ஒற்றுமைக் காட்சியும், திருவருட் குறிப்பின்வழி ஒழுகும் இயற்கையும் வாய்க்கும். இங்ஙனம் இறைவனேடும் உயிர்களோடும் ஒற்றித்து நிற்கும் ஒழுக்கம் சமய வாழ்க்கையின் உயிர் நிலையாகும். எங்கு இவ்வொழுக்கமுண்டோ, அங்கு உண்மைச் சமய வாழ்க்கையுண்டு ; எங்கு இது இல்லையோ அங்குச் சமயமில்லை. மற்றவை இருப்பினும் ஒன்றே. ஒழியினும் ஒன்றே.

சமய வாழ்க்கையின் இயல்பைப் பொதுப்படக் கூறினேம். இனி உண்மையாய்ச் சமயநெறி செல்வோரது குணஞ் செயல்களின் தன்மைகளைச் சிறிது விளக்குவோம் :

செம்பொருட் காட்சி கிடைக்கப் பெற்றூர்க்கு எல்லாரும் இறைவனடிமை யென்றும், எல்லாம் அவன் உடைமை யென்றும், அவன் எங்ஙணும் வியாபி என்றும், அவனன்றி ஓரணுவும் அசையாதென்றும் தெளிவாய்த் தெரிகின்றது. இவ்வுண்மை தெரியவே, 'யான்', 'எனது' என்னும் எண்ணம் அற்றுப்போகிறது. ''யான்' 'தான்' எனுஞ் சொல் இரண்டுங் கெட்டாலன்றி யாவருக்கும் தோன்றுது சத்தியம்'' என்றூர் அருணகிரிநாதரும். இங்ஙனம் 'நான்' அழிந்தமையால், குழந்தைகள் போலாகின்றனர். குழந்தை நிலையடைந்தாலன்றி உண்மை தெரியாதென்று இயேசுவும் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரும் உபதேசித்திருக்கின்றூர்கள். அகம்பாவ நாசத்தால் விளையும் எளிமையில் இறைவன் பெருமை பதிகின்றது; உயிரின் பந்தம் கழன்று போகின்றது; கண்டநிலை போய் அகண்டநிலை வாய்க்கின்றது ; சீவன் சிவனுகின்றுன்.

### அருஞ்சொற்பொருள்

அருகி - குறைந்து. சழக்கு - பூசல். அலர் - பழி. நிரல் - வரிசை. உறையும் - வசிக்கும். அமைமின் - அமையுங்கள். ஒற்றித்து - ஒன்று பட்டு. வந்தித்து - வழிபட்டு. இரட்சிப்பு - மன்னிப்பு. சிந்தை - அறிவு. நிலைமைத்து - நிலையுடையது. அந்தம் - முடிவு. வியாபி - பரவியுள்ளவன். அற்று - அழிந்து. கண்டநிலை - பகுக்கப்பட்ட தன்மை. அகண்டநிலை - முழுத்தன்மை.

### கேள்விகள்

1. 'சமயத்தைக் கவனிப்பதற்கு இது சமயமன்று' என்போரின் கொள்கை யாது?
2. நாகரிக வாழ்க்கையைப் பெருக்கி வந்தமேல் நாட்டின் நிலை யாது?
3. 'ஒன்றது பேரூர் ; வழியாறதற்குரிய'—இடஞ் சுட்டி விளக்குக.
4. சமய வாழ்க்கையின் முதலிலக்கணம் யாது?
5. மாணிக்கவாசகரின் கூற்று யாது? அக்கூற்றின் பொருத்தத்தை விளக்குக.
6. உண்மையாய்ச் சமயநெறி செல்வோரது குணஞ் செயல்களின் தன்மைகளை விளக்குக.

### பயிற்சி

1. 'சமயம்' என்பதனை ஆசிரியருடைய கூற்றின் மூலம் விளக்குக.
2. சமயச்சார்பில்லாமையால் விளையும் தீமைகளையும், சமயவாழ்க்கையால் ஏற்படும் நன்மைகளையும் தொகுத்து வரைக.
3. வாக்கியங்களிற் பயன்படுத்தி வரைக :—

கேளிக்கை, இன்றியமையாத, கொள்கை, சார்பு, ஆங்காங்கு, அமுதமொழி, முதிர்ச்சி, ஆராய்ச்சி, ஒருமைப்பாடு, பொறுத்து, இரட்சிப்பு.

# 4. பண்டைத் தமிழரசரும் புலவரும்

[பண்டித வித்துவான் திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்]

இத் தண்டமிழ் நாட்டைப் பன்னெடுங் காலம் ஆண்ட பழந்தமிழ்க்குடி மக்களாகிய சேர பாண்டிய சோழர்களே, பண்டைத் தமிழரசராவர். அவ்வரசர் காலத்திலிருந்த நல்லிசைப் புலவர்களே ஈண்டுப் புலவரெனப்பட்டவராவர். ஈண்டுக் குறிக்கப் பெற்ற காலம் சங்க காலமாகும். அவ் வரசர்களின் கலைவன்மை, செங்கோன்மாண்பு, வீரத் திறன், வள்ளன்மை முதலிய சிறப்பியல்புகளையும், புலவர் பெருமக்களின் உயர்ந்த பண்புகளையும், புலவ ரிடத்து அரசர் வைத்திருந்த நன்மதிப்பினையும், நட்பையும் சில எடுத்துக்காட்டுகளின் மூலம் விளக்குதலே இக் கட்டுரையின் நோக்கமாகும். இவற்றை உணர்தற்குப் புறநானூறு, பதிற்றுப்பத்து முதலிய சங்க நூல்கள் துணை யாவனவாம்.

இவற்றுள், அவ்வரசர்தங் கலைவன்மையைப் பற்றிக் கூறுங்கால் அதனைப் பிறர் புகழ்வதாகக் கூறும் எடுத்துக் காட்டைவிட, அவர்தம் பாடல்களே தக்க சான்றாகும் ஆதலின், சேரருள் பாலைபாடிய பெருங்கடுங்கோ, சேரமான் கணைக்கால் இரும்பொறை முதலியோரும், பாண்டியருள், ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், பாண்டியன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் முதலியோரும், சோழருள், சோழன் நலங்கிள்ளி, சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் முதலியோரும் பாடியவை சங்க நூல்களிற் காணப்படுதல் கொண்டு உணரலாம். பூதப் பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு பாடிய பாடல் புற நானூற்றிற் காணப்படுதலால் அவ்வரசர் மகளிரும் நன்கு கற்றுப் பாடலியற்றும் பெற்றி வாய்ந்திருந்தனர் என்பது புலனும். அவர்தஞ் செங்கோன் மாண்பை, “ நீதிமன்றங் களில் அறநெறி தவறிய ஒருவனை வைத்துக் கொடுங்கோல் செய்தேனாகுக ” என ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியனும், “ என் நிழலில் வாழும் குடிகள் தாம் சென்றடையும் நிழலைக் காணாது, ‘ எம் இறைவன் கொடியன் ’ எனக் கண்ணீர்

விட்டுப் பழி தூற்றுங் கொடுங்கோலே னுகுக" எனப் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும் வஞ்சினங் கூறுதலானும், "குடிமக்களை இறை வேண்டி இரக்கும் ஆண்மையில்லாத சிறியோன் அரசுரிமையைப் பெற்ருல் அது அவனுக்குத் தாங்கமுடியாத கனமுடையதாகும்" எனச் சோழன் நலங்கிள்ளி கூறுதலானும், "நின்னிழல் வாழ்வோர் சூரியனது வெம்மை யல்லது வேறு வெம்மையை அறியார்" எனச் சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறையைக் குறுங் கோழியூர் கிழார் பாடுதலானும், பிறவற்ருனும் உணரலாம்.

அவர்தம் **வீரத்திறனை,** "யமன் கோபித்துவரினும் அதனையும் மாற்றும் வலியுடையை" என ஒரு சேரனிடம் ஒரு புலவரும், "கருக்கொண்ட மகளிர் விரும்பி உண்டாலல்லது பகைவரால் உண்ணப்படாத மண்ணை யுடையை", என மற்ருெரு சேரனிடம் மற்ருெரு புலவரும் கூறுதலாலும், "தேர்மொட்டுப் பொலிவுபெற நின்றவன் யாவனே? அவன் கண்ணி வாழ்க! ஐம்படைத்தாலி கழித்ததுமிலன்; பாலுண்டலை ஒழித்து உணவும் இன்றுதான் உண்டான்; தன்மேல் வெகுண்டுவந்த வீரரை மதித்ததும் அவமதித்ததும் இலன்; அவரைத்தான் கொன்றதற்கு மகிழ்ந்ததும் இவ்வாறு செய்தோம் என்று தன்னை மேம்பட நினைத்ததுமிலன்" என ஒரு பாண்டியனை ஒரு புலவர் பாராட்டுதலாலும், "சோழனேடு மாறுபட்டோர் வாழக் கண்டதுமில்லை; அவன் அடியடைந்தோர் வருந்தக் காணுதல் அதனினும் இல்லை", என ஒரு சோழனை ஒரு புலவர் புகழ்தலாலும், அவர்தம் வெற்றியுணர்த்தும் பிற வரலாறுகளாலும் நன்கு தெரியலாம். அவர்தம் **வள்ளன்மையை,** "இந்திரர் அமிழ்தம் இயையினும் தனித்துண்ணுர்; யாரிடத்தும் வெறுப்பிலர்; புகழ் கிடைக்கின் தம் உயிரையுங் கொடுப்பார்; பழி வருமாயின் அதனுல் உலகமுழுதும் பெறினும் கொள்ளார்; தமக்கென முயலாத வலிய முயற்சியையுடைய பிறர்க்கென முயலும் அத்தகையார் உண்மையால் இவ்வுலகம் உளது", எனக் கடலுண் மாய்ந்த இளம்பெருவழுதி கூறுதலானும், 'ஈயென இரப்பாராயின் என் அரசாட்சியைக் கொடுத்தல்

எளியது; என் இனிய உயிரையுங் கொடுப்பேன்'' எனச் சோழன் நலங்கிள்ளி கூறுதலானும், 'நின்னைப் பாடிய செந்நா, பிறர் புகழைச் சொல்லாவண்ணம் நினக்கென ஒன்றையும் பாதுகாவாமற் கொடுக்கும் எங்கோவே,' என ஒரு சேரனிடம் ஒரு புலவர் கூறுதலானும் அறியலாம். சேரர்தங் கொடைப் பெருமையைப் பதிற்றுப்பத்தில், ஒரு சேரன் ஒரு புலவர்க்கு நாற்பது நூறுயிரம் பொன் கொடுத்துத் தான் ஆள்வதிற் பாகம் கொடுத்தான் என்பதும், மற்றொரு சேரன் மற்றொரு புலவர்க்கு நூறுயிரங் காணங் கொடுத்து ஒரு மலையிலேறி நின்று தன் கண்ணிற் கண்ட நாடெல்லாம் கொடுத்தான் என்பதும், பிறவும் காணப்படுதல் கொண்டும் நன்கறியலாம்.

இவ்வாறே ஒவ்வொரு பண்பையும் விரித்துக் கூறிற் பெருகு மாதலின், இன்றியமையாத சில கூறிய இவ்வளவில் நிறுத்திப் புலவர் பெருமக்களின் உயர்ந்த பண்புகளைக் கூறுவேன்.

> "பீடின் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச்
> செய்யா கூறிக் கிளத்தல்
> எய்யா தாகின்றெஞ் சிறுசெந் நாவே" (புறம் 148)

என ஒரு புலவரும்.

> "வையக வரைப்பிற் றமிழகங் கேட்பப்
> பொய்யாச் செந்நா நெளிய வேத்திப்
> பாடுப வென்ப பரிசிலர்" (புறம் 168)

என ஒரு புலவரும் பாடுதலால் இல்லாதவற்றைச் சொல்லாத பொய்யா நாவினர் என்பதும்,

> "இன்றும், பரணன் பாடினன் மற்கொல்" (புறம் 99)

எனப் பரணரை ஔவையாரும்,

> "பொய்யா நாவிற் கபிலன் பாடிய
> மையணி நெடுவரை" (புறம் 174)

எனக் கபிலரை நப்பசலையாரும் புகழ்ந்திருத்தலால் பொறாமையின்றிச் சிறந்தாரை உயர்த்துக் கூறும் நல்லியல்பினர் என்பதும் நன்கு அறியப்படும். பெருஞ்சித்திரனர் அதியமானெடுமானஞ்சியுழைச் சென்றபோது அவன் தம்மை நேரிற் காணாது 'இது கொண்டு செல்க' என்று பிறர் மூலம் பரிசில் கொடுப்பக் கொள்ளாது,

" காணு தீத்த இப்பொருட் கியானேர்
வாணிகப் பரிசில னல்லேன் பேணித்
தினையனைத் தாயினும் இனியவர்
துணையள வறிந்து நல்கினர் விடினே " (புறம் 208)

எனக் கூறுதலானும், வெளிமான் தம்பி சிறிது பரிசில் கொடுப்ப அவர் கொள்ளாது சென்றமையாலும், சேரமான் குடக்கோச் சேரலிரும்பொறை பரிசில் கொடுப்பதற்குக் காலந் தாழ்க்க அவனை எதிர்பாராது பெருங்குன்றூர் கிழார் சென்ற மையாலும், பிறவற்றுலும் தம்மை மதியாரிடத்தும், சிறிது கொடுத்தாரிடத்தும், கொடுப்பதற்குக் காலந் தாழ்த்தாரிடத் தும் பரிசில் பெருத பெருந்தன்மையுடையவர் என்பது அறியப்படும். இளங்கண்டீரக்கோவும் இளவிச்சிக்கோவும் ஒருங்கிருந்தவழிச் சென்ற பெருந்தலைச் சாத்தனர் கண்டீரக் கோவைத் தழுவி விச்சிக் கோவைத் தழுவாராக, அவன், 'என்னை ஏன் தழுவவில்லை?' எனக் கேட்டபோது, புலவர், 'உன் முன்னேர் பாடுநர்க்கு அடைத்த கதவுடையராதலின் உன்னைத் தழுவவில்லை; கண்டீரக்கோ, மகளிரும் ஆடவரும் கொடையிற் சிறந்து விளங்கும் நற்குடிப் பிறந்தவனுதலின் அவனைத் தழுவினேன்' எனக்கூறியதனுல் புலவரை மதியாத வரைத்தாமும் மதியார் என்பதனை நன்கறியலாம். "வேந்தே! வெண்கொற்றக் குடை வெயில் மறைத்தற்குக் கொள்ளப் பட்டதன்று; குடிகட்கு நிழல் செய்தற் பொருட்டுக் கொள்ளப்பட்டது" எனவும், 'புலவர் மாட்டுப் பொது நோக் கொழிக' எனவும் பிறவுங் கூறுதலால் புலவர் அரசர்க்கு உறுதியை அஞ்சாமற் கூறும் நெஞ்சினர் என் பது துணியப்படும். சோழன் நலங்கிள்ளி உறையூர் முற்றி யிருந்தானையும் அடைத்திருந்த நெடுங்கிள்ளியையும் சந்து செய்தற்குக் கோவூர் கிழாரும், மக்கண்மேற் சென்ற கோப் பெருஞ் சோழனைச் சந்துசெய்யு நோக்கத்தாற் புல்லாற்றூர் எயிற்றியனுரும், வையாவிக்கோப்பெரும்பேகனுல் துறக்கப் பட்ட கண்ணகியை அவனேடு சேர்த்தற்குப் புலவர் பலரும் பாடியிருத்தலால் மாறுபட்டாரைச் சேர்க்கும் ஆற்றலும் நற் குணமும் வாய்ந்தவரென்பது புலப்படும்.

இனிப் புலவரிடத்து அரசர் வைத்திருந்த மதிப்பு

எத்தகையதென்பதை உற்று நோக்கின், அது மிகவும் வியப்பைத் தருவதாகும். புலவர்மாட்டுச் சேரர் நன்மதிப்பு வைத்திருந்தனர் என்பதற்குச் சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும் பொறையின் வரலாறு ஒன்றே தக்க சான்ருகும்; அஃதியாதெனின் - முற்காலத்து, அரசர், முரசில் தெய்வமிருப்பதாகக் கருதி அதை நீராட்டி அலங்கரித்துச் சிறந்த கட்டிலில் வைத்துப் பூசை செய்வதும், அக்கட்டிலில் யாரேனும் ஏறிஞல் அவர்களைக் கொல்வதும் வழக்கம்; சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறைபாலும் அவ்வியல்பிருந்தது; ஒரு நாள் வழக்கப்படி முரசு நீராட்ட எடுத்துச் செல்லப்பெற்றிருந்தது; அவ்வமயம் நெடுந்தூரமிருந்து அங்கு வந்த மோசிகீரஞர் எனும் புலவர் களைப்பு மிகுதியால் முரசு வைக்கும் கட்டில் என்பதறியாது அதில் ஏறித் துயின்றனர்; அஃதறிந்த அரசன் புலவராதலின் அவரைக் கொல்லாததோடமையாது அவர் நன்கு துயிலும்வண்ணம் கவரிகொண்டு வீசினன்; பின்னர் அதுகண்ட புலவர் அவனைப் பெரிதும் பாராட்டினர் என்பதாம். அன்றியும், ' தன் வெற்றிச் சிறப்பைப் புகழ்ந்து பாடுதற்கு இன்று கபிலரில்லையே,' என்று சேரன் மாந்தரஞ் சேரலிரும்பொறை வருந்தியதாகப் பொருந்தில் இளங்கீரஞர் கூறுவதும் அதனை வலியுறுத்துவதாம்.

'' ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி, மாங்குடி மருதன் தலைவஞக, உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற், புலவர் பாடாது வரைகவென் நிலவரை '' (புறம் 72) எனப் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் பாடுவதஞல் பாண்டியர் புலவர்மாட்டும் அவர் பாடலிடத்தும் எவ்வளவு மதிப்பு வைத்திருந்தனர் என்பது புலஞகும்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், மலையமான் மக்களை யானைக்கிடுவுழிக், கோவூர்கிழார், கொல்லலாகாதென அவனைப் பாட, அவன் கொல்லாது விட்டமையாலும், சோழன் நலங்கிள்ளி தம்பி மாவளத்தாஞம், தாமப்பல் கண்ணன் என்னும் புலவரும் வட்டாடும்போது புலவர் கைகரப்பச் சோழன் வட்டுக்கொண்டெறிந்தான்; அவனைப் புலவர் வெகுண்டு, ' நீ சோழன் மகனல்லை '

என வைதனர் ; அது கேட்ட சோழன் புலவரைச் சினவாது நாணியிருந்தனன் என்னும் வரலாற்றனும் சோழர்க்குப் புலவர்பாலிருந்த பெருமதிப்பு விளங்குவதாம்.

இனிக் கோப்பெருஞ் சோழனுக்காகப் பிசிராந்தையாரும் பொத்தியாரும் உயிர் துறந்த வரலாறென்றே புலவர்க்கும் அரசர்க்கும் இருந்த ஒப்புயர்வற்ற **நண்பின்** மாண்பை விளக்குவதாம். இவ்வரலாறு பலருமறிந்ததாகலின் விரிக்கப் படவில்லை.

இங்ஙனம் பெருஞ் செல்வராய பண்டைத் தமிழரசரெல் லாரும் செல்வத்தால் வரும் இன்பமொன்றையே கருதிச் செருக்கில் மூழ்காது, கல்வியின் அருமை உணர்ந்து நன்கு கற்றுக் கல்வியிடத்தும், கற்றூர்மாட்டும் பெரிதும் மதிப்பு வைத்திருந்தது போல, இக்காலத்துச் செல்வர்களும் கல்வி யிடத்தும் கற்றூரிடத்தும் மதிப்பு வைத்துப் போற்றுவா ராயின், அதுவே இக்கட்டுரையின் பயனுகும்.

### அருஞ்சொற்பொருள்

இசை - புகழ். புறநானூறு - அறம், பொருள், வீடு என்னும் மூன்றையும் பற்றிய நானூறு பாக்களைக் கொண்ட நூல். பதிற்றுப் பத்து- சேர அரசர் பதின்மர்மீது (ஒவ்வொருவர் மீதும் பத்துப் பாடல்கள் வீதம்) பாடப்பட்ட (10 × 10) நூறு செய்யுட்களை உடைய நூல். பீடு - பெருமை. கிளத்தல் - சொல்லுதல். நல்கினர் - கொடுத்தனராகி.

### கேள்விகள்

1. புலவரெனப் பட்டவர் யாவர் ?
2. பண்டை அரசரின் செங்கோல் மாண்பு எவ்வெவற்றல் புலனுகும் ?
3. பண்டை அரசரின் வீரத்திறன் சங்க நூல்களால் எவ்வாறு தெளி வாகின்றது ?
4. சேரர்தம் கொடைப் பெருமை எவ்வாறு விளங்குகின்றது ?
5. விச்சிக்கோ சாத்தனரை யாது கேட்டான் ?
6. புலவர் அரசர்க்குரிய உறுதியை அஞ்சாமற் கூறுபவர் என்பதனை விளக்குக.
7. பாண்டியன் நெடுஞ்செழியன் கூறிய வஞ்சினம் யாது? அவன் வஞ்சினம் கூறக் காரணம் யாது ?
8. ‘அதுவே இக்கட்டுரையின் பயனுகும்’.—இடஞ்சுட்டி விளக்குக.

### பயிற்சி

1. புலவர்களை அக்கால அரசர்கள் பெரிதும் போற்றினர் என்பதை விளக்கி ஒரு கட்டுரை வரைக.
2. ‘புலவர் குணநலன்கள்’ என்ற தலைப்பில் நம் பாடத்தின் துணை யைக் கொண்டு ஒரு கட்டுரை எழுதுக.

# 5. மலை வாசம்

[திரு. வி. கலியாணசுந்தர முதலியார்]

மலைவாசத்தைப் பற்றிய நினைவு இன்று நமக்கு எற்றுக்கு உண்டாயிற்று? காலம் வேனிற்காலம். கடற்கரையில் உலா. அங்கே பலர் கூடுவதும் பலதிறப் பேச்சுப் பேசுவதும் வழக்கம். ஒருபோது, 'மலை வாசம்' என்று ஓர் ஒலி நமது செவியிலுற்றது. 'மலைக்குப் போகிறேன்' என்று ஒருவர் சொற்றதும், 'மலையினின்று வருகிறேன்' என்று மற்றொருவர் புகன்றதும் கடற்காற்றின் வேகத்தால் நமது செவியில் விழுந்தன. பொதுவாக மலையென்பது எம்மலை என்னும் ஐயம் நமக்கு நிகழவில்லை; நீலகிரியை 'மலை', 'மலை' என்று நகர வாசிகள் சொல்லிக்கொள்வது நமக்குத் தெரியும்.

ஐரோப்பியருள் பலர் வேனிற்காலத்தில் தமக்கு உறைவிடமாக நீலகிரியைக் கொண்டுள்ளார். அவரைத் தொடர்ந்து நம்மவர்களிற் சிலரும் ஆண்டுச் செல்கிறார். இவர் இந்நாளில், நீலகிரியை 'மலை', 'மலை' என்று வழங்கலாயினர். முன்னை நாளில் 'மலை' என்பது திருப்பதிமலை என்று கொள்ளப்பட்டது. இன்னும் பழைய உலகில் வாழ்பவரது கொள்கை மாறுபடவில்லை.

ஐரோப்பியர் நீலகிரி மலை நோக்கிச் செல்வதைக் கண்டு, அவர் பின்னே 'மலை-மலை' என்று ஓடும் நம்மவருள், 'மலை வாசமும் மேல் நாட்டவரிடமிருந்து பயின்ற கல்வித்துறைகளுள் ஒன்று' என்று கூறுவோருமிருப்பர். காலத்தின் கோலத்தை என்னென்று கூறுவது? மேல்நாட்டு நூல்களைப் பயின்றவர் கற்றவரென்றும், இந்நாட்டு நூல்களைப் பயின்றவர் கற்றறியா மூடர் என்றும் சொல்லப்படும் காலமன்றோ இக்காலம்? வயிற்றின் பொருட்டுக் கல்வி பயிலும் காலமன்றோ இக்காலம்? பிறந்த நாட்டிடைப் பற்றை உண்டு பண்ணாத கல்வியைப் பயில்வோர் என்னதான் சொல்லமாட்டார்? இயற்கைக் கல்விப் பயிற்சி அருகிவரும் இந்நாளில் நம் முன்னோர் மலையில் வாழ்ந்து இன்புற்றதை நினைவுபடுத்தவே இன்று மலைவாசத்தைப் பற்றி எழுதப் புகுந்தோம்.

148652

பண்டைத் தமிழ் மக்கள் நிலத்தை நான்கு வகையாகப் பிரித்தார்கள். அவை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன. இப்பிரிவைப்பற்றி எழுந்த வழக்கே நானுவித உலகம் என்பது. இவ்வழக்குத் தமிழ் நாட்டிலே தோன்றிய போது, மேல்நாட்டில் மனிதர் எவ்வுணர்ச்சியோடு உலவினர் என்னும் வினுவைச் சரித்திரக்காரர்களை நோக்கிப் பொறித்தல் வேண்டும்.

தமிழ் மக்கள் வகுத்த நால்வகை நிலத்துள் முதன்மை யது குறிஞ்சி. ஆசிரியன்மாருட் சிலர் சிற்சில காரணம் பற்றியும், தாம் விரும்பியவாறும் நிலங்களை முறை பிறழவும் ஓதியிருக்கிருர். எவர் எவ்வாறு ஓதினும், குறிஞ்சி முதன்மையது என்பதை அறிஞர் மறுக்கமாட்டார். குறிஞ்சி என்பது மலையும் மலைசார்ந்த இடமுமாம். நாம் குறிஞ்சிக் குப் பதிலாக மலை எனக் கூறிச் செல்வோம். குறிஞ்சி நிலத்துக்குரிய முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் முதலியனவற்றைத் தொல்காப்பியம் முதலிய பண்டைத்தமிழ் நூல்கள் விரித்துக் கூறுகின்றன.

மனித வாழ்வு முதல்முதல் தொடங்கப்பட்ட இடம் மலையே யாகும். இஃது அறிஞர் பலராலும் ஒப்பமுடிந்த உண்மை. மலையிலுள்ள மூங்கிலைக் கொண்டே, மக்கள் முதல் முதல் முகத்தல் நீட்டல் முதலிய அளவைப் பொருள்கள் செய்தார் கள்; வேய்ங் குழல் கண்டார்கள்; கம்பு செய்தார்கள்; வில் செய்தார்கள்; வீடுகள் கட்டினுர்கள்; வேறுபல மலைபடு பொருள்களாலும் வாழ்க்கையை ஒழுங்குபடுத்திக்கொண் டார்கள். நம்முன்னேர் ஆங்கிருந்தே வான சாஸ்திரம் பயின்ருர்; வைத்தியங் கற்ருர்; கடவுளுண்மை கண்டார்; அரசு வகுத்தார்; இசை பயின்ருர். அவைகளைப் பற்றி ஈண்டு ஆராய்ச்சி செய்யவேண்டுமென்பது நமது நோக்க மன்று.

கடவுளின் இயற்கை வடிவாய் இருப்பது மலை. அதில் விளையும் பொருள்களும் இயற்கை மயமாய் இருப்பன. அங்கே பிறக்கும் அருவியும் ஆறும் இயற்கையின் ஊற்ருும். மலை யில் வாழும் மக்களும் இயற்கை வடிவாய் இலங்குவோர். மலையும், அதன் உள்பொருளும், அதன்கண் உறை உயிரும்

TB
031(10) N52

பிறவும் கடவுள் வடிவான இயற்கை வண்ணமாயிருப்பன. இயற்கை மணம் நீங்கப் பெறாத மலையில் வாழ்வதை எவரே வெறுப்பர் ?

பண்டைத் தமிழ் மக்கள் மலையின் சிறப்பை உணர்ந்து அதன்கண் வாழ்ந்துவந்தார்கள். அவர்கள் மலையில் வதிந்து தாங்கள் கண்ட காட்சிகளையும், பெற்ற இன்பங்களையும் நூல்களாக எழுதினார்கள். மலையைச் சிறப்பித்துக் கூறாத நன்னூல் தமிழில் இல்லை என்றே சொல்லலாம். மலையின் இயற்கை இன்பத்தைத் தமிழ்ப் புலவர்கள் எவ்வெவ் வழியாகவோ பாக்களில் இறக்கி நமக்கு உதவியிருக்கிறார்கள். அவர்கள் வாழ்க.

மலை பூமியினின்றும் ஓங்கலாக மக்கள் வாழ்வுக்கெனக் கடவுளால் அமைக்கப்பட்ட சிறந்த இயற்கை மாளிகை. அம் மாளிகையில் மக்கள் வாழ்வுக்குரிய பொருளெல்லாம் இயற்கையாகவே தோன்றியிருக்கின்றன. விதவிதமான பூக்கள் மலர்கின்றன ; பலதிற மூலிகைகள் வளர்கின்றன ; பறவைகள் பறக்கின்றன ; விலங்குகள் வாழ்கின்றன ; பழங்கள் கொத்துக் கொத்தாகத் தொங்குகின்றன ; தினை முதலிய தானியங்கள் பயிராகின்றன ; அருவிகள் ஓடுகின்றன ; மனத்தைக் கவர மயிலின் ஆட்டமும் மானின் ஓட்டமும் சாலும். இத்துணைப் பொருள்களைத் தாங்கும் மலையில் வாழ்பவருக்கு வறுமை உண்டோ ? இக்கருத்துப் பற்றியே கச்சியப்ப முனிவர் தணிகைப் புராணத்துள் ஒரு செய்யுள் நாட்டுப் படலத்துள் பாடியிருக்கிறார். அச்செய்யுள் வருமாறு :

‘தேனும் செந்தினை இடிகளும் தீஞ்சுவைக் கனியும்
ஊனும் துய்ப்பன ; உடுப்பன மரவுரி தழைகள் ;
வானுந் தோய்சுனை ஆடுவ ; மணிவரை இருப்ப,
ஏனஞ் சூழ்ந்தகுன் றவர்க்கொரு நல்குர வின்றே.’

[துய்ப்பன - உண்பன. வரை - மலை. ஏனம் - பன்றி. குன்றவர்க்கு - குன்றில் வாழும் மக்கட்கு. நல்குரவு - தரித்திரம்.]

உணவுக்கும், உடைக்கும், நீராடுவதற்கும், இருத்தற்கும்

பயன்படுவன இயற்கைப் பொருள்களாகவே இருப்பது கவனிக்கத் தக்கது.

சகோதரர்களே! செய்யுளை உற்று நோக்குங்கள்: இயற்கை வாழ்வின் பெருமையை உன்னுங்கள்; மலைவாசிகளுக்கு வறுமை இல்லை என்று ஆசிரியர் கூறி இருப்பதைக் கருதுங்கள். இப்பொழுது நாகரிகம் பழுத்த இந்நாளில் வயிற்றுக்குக் குறைவறச் சோறு கிடைக்கிறதா? மக்கள் வறுமை நரகத்தில் வீழ்ந்து வருந்துகிறார்கள். மலைகளிலிருந்து இயற்கைப் பொருள்களை உண்டு, வறுமை அறியாது, நம்முன்னோர் வாழ்ந்தனர். இந்நாளில் வயிற்றுக்காகக் கல்வி; வயிற்றுக்காகத் தொழில்; வயிற்றுக்காக எல்லாம்—ஆனால் பட்டினி, வறுமை! செயற்கை இயந்திரங்கள், ரெயில்கள், தந்திகள், விசிறிகள், விளக்குகள், கூத்துகள், நாடகங்கள், சினிமாக்கள், நாவல்கள், வேறுபல ஆட்டங்கள், பாட்டங்கள் வறுமையை வளர்த்துவருகின்றன. மலைகளில் வாழ்ந்த மக்கள் வைத்தியசாலைகளை நாடினாரில்லை; தேடினாரில்லை. வயிற்றுக்காக நாட்டுப்புறங்களிலுள்ளவர் கூட்டங் கூட்டமாக நகரங்களில் கூடுகிறார். ஒரு வீட்டில் முப்பது நாற்பதுபேர் வாழ்கிறார். ஒருவர் விடுஞ் சுவாசத்தை மற்றவர் பருகுகிறார். அழுக்குக் கழுவல் கழித்தல் எல்லாம் வீட்டிலேயே. அவ்வழுக்குகளெல்லாம் திரண்டு பூமிக்குள் ஓடுமாறு சாக்கடைகள் வாய்க்கால்களாகக் கட்டப்பட்டிருக்கின்றன. சாக்கடை நீர் தேங்கும் கிணறுகளில் அந்தோ! கடவுளால் படைக்கப்பட்ட மனிதர் மூழ்குகிறார்! கொடுமை! கொடுமை! ஒருவனுக்கு மாடிவீடு; மற்றொருவனுக்குச் சாக்கடைக் குழியா? ஐயோ! நாகரிகமே! பழைய காலத்தை அநாகரிக காலமென்று கூறும் இக்கால ஞானிகளே! சிந்தியுங்கள்!

நாட்டுப்புறங்களை விடுத்து மக்கள் நகரங்களில் போந்து, இயந்திரங்களோடும் தொழிற்சாலைகளில் கூட்டங் கூட்டமாகச் செறிவதால் விளையும் தீமைகள் பல. கிராமங்களில் பயிர்த்தொழில்கள் அழிகின்றன. நகரங்களில் சுகாதாரம் கெடுகிறது. ஆயிரம் பேர் வாழுமிடத்தில் பதினாயிரம் பேர் வாழ்ந்தால் சுகாதாரநிலை கெடுதல் இயல்பே. நகரங்களில் பெரிதும் ஏறக்குறைய எல்லாவித உத்தியோகசாலைகளும்

இருக்கின்றன. இவைகளால் நகரத்தில் கூட்டம் பெருகு கிறது. கூட்டத்தால் நோய்கள் பெருகுகின்றன. மலைகளை யும் காடுகளையும் நாடுகளையும் மக்கள் விடுத்து நகரத்தில் போந்து இடர்ப்படுகிறார்கள்.

மலை இடங்களில் வாழ்வது நல்லது. அது விரும்பத் தக்கது. மலையிலிருக்கிறவர்களுக்கு நோய் அணுகாது. அசுத்தக் காற்றும் அசுத்த நீரும் நோய்களை உண்டாக்கு வன; வளர்ப்பன; மனிதரைக் கொல்வன. மலையில் அசுத் தக்காற்றும் அசுத்தநீரும் தோன்றுவதற்கு இடமில்லை. மலைக் காற்றுக்கு ஒப்பாகவாதல் உயர்வாகவாதல் பிற காற்றுகளைச் சொல்லுதல் முடியாது. கடற்காற்றை இரண்டாவதாகச் சொல்லலாம். மலையில் வாழ்வோர், அதிகாலையில் சூரியன் உதயமாகும்போது, சூரியனது இளங்கதிர்களின் வாயிலாக நுகரும் தூய காற்றின் (உயிர்ப்பு) முன்னே எந்த நோய் நிற்கும்? அவ்விளங்கதிர் படிய உலவும் மனிதரை எந்த நோய் அணுகும்? சூரியனது இளங்கதிரொளியும், தூய காற்றும் ஊற்று நீரும் அல்லவா மனிதரை வளர்ப்பவை? இம்மூன்றை யும் மலைவாசத்தில் எளிதிற் பணங்காசின்றிப் பெறலாம். மருத்துவர்களுக்குப் பணத்தை அள்ளி அள்ளி இறைக்கும் பொருட் செல்வர்களே! மலையில் வாழ விரும்புங்கள்; மலை யைச் சுற்றித் திரியுங்கள்; மலை உங்களைக் காக்கும்; உங்களை வளர்க்கும்.

பூமியினின்றும் மலை எழுந்து நிற்றலால், பலவித வளங்கள் மலையில் இயல்பாக அமைந்து கிடக்கின்றன. ஞாயிற்றொளி நன்றாகப் படிகிறது. மலைக்காற்றில் தும்பு தூசிகளில்லை. ஊற்று நீரில் கிருமிகள் இரா. இக்காரணங் களால் மலை நிலங்களில் பொருள்கள் விரைவில் அழுக மாட்டா. மற்ற நிலங்களில் ஒரு நாளில் அழுகும் பொருள்கள், மலை நிலங்களில் நீண்டநாள் அழுகாம லிருக்கும். மலைகளிலுள்ள மூலிகைகளையும் உலோகங் களையும், பிறவற்றையும் ஆறுகள் அடித்துக்கொண்டு ஓடுகின்றமையால் அல்லவோ, அவை பெருமைப்படுகின்றன நாட்டுக்கு இன்றியமையாத ஆறுகளின் பிறப்பிடம் பெரிதும் மலை என்பதை அறியாதார் இல்லை. இவ்வளவு வளமுடைய?

மலேயில் வாழ வேண்டுமென்று ஒருவர் கூறுதல் வேண்டுமோ ?

பண்டைத் தமிழ் மக்கள் நாளுக்கு நாள் குறிஞ்சி விடுத்து முல்லே மருதம் நெய்தல் ஆகிய நிலங்கள் போந்து வாழ்ந்தாலும், அவர்கள் மலேயினிடத்திலும் மலேப் பொருள் களிடத்திலும் தொடர்பு வைத்துக்கொண்டிருந்தார்கள். குறிஞ்சியின் உதவியின்றி ஏனைய நிலவாழ்வு நடைபெறுதல் அரிது. மலேபடு பொருட்கு மிக்க ஆவலோடு மற்ற நிலத்தவர் காத்திருப்பர். மேகந் தவழும் மலேகளில்லாவிடின், காடேது ? நாடேது ? நகரமேது ? நாடு காடு நகரம் ஆகிய இவ்விடங்களில் வாழ்வதால் விளேயும் இன்பத்தையும், வேறு பலவித இன்பத்தையும் மலே வாசத்தால் பெறலாம்.

நம் முனிவர் பலர் மலேகளேத் தமக்கு உறைவிடமாகக் கொண்டிருந்தனர். இன்னும்—இந்நாளிலும்—சில பெரி யோர் மலேயில் வாழ்கிருர். பண்டைக்காலத்தில் மலேகளும் காடுகளும் முனிவர் வசத்திலிருந்தன. ‘இம்மலே இம் முனிவர் மலே ; இக்காடு இம்முனிவர் காடு’ என்று வழங்கப் பட்டு வந்தது. இப்பொழுதோ ?

மலேத்தொடர்பு மக்கட்கு இருத்தல் வேண்டும் என்ற எண்ணங்கொண்டு, நம் பண்டை மூதறிஞர் மலேகளிலும் மலே சார்ந்த இடங்களிலும் கோயில் கட்டினர். இறைவனே வழிபடும்பொருட்டு, மக்கள் செல்லின், அச்செலவால், மக்கள் மலேயில் சில நாளாவது உறையும் பேறுபெற்றுப் பிணியின்றி வாழ்வார்கள் என்ற கருணேயால், அறிஞர் மலேகளிலும் அவை சார்ந்த இடங்களிலும் கோயில் கட்டினர். திருப்பதி, திருக்கழுக்குன்றம் முதலிய க்ஷேத்திரங்கள் நினேவிற்கு வருகின்றன.

நமது நாட்டிலுள்ள மலேகள் எண்ணிறந்தன. மலே களிலே உயர்ந்த மலே நம்முடைய நாட்டிலே இருக்கிறது. நமது நாட்டில் குறுக்காகவும் நெடுக்காகவும் கோணலாகவும் வட்டமாகவும் சதுரமாகவும் மலேகள் வரிசை வரிசையாக நிற்கின்றன. மலேவளஞ் செறிந்த நமது தேசத்தைக் காமதேனு என்று கூறலாம். அத்தகைத் தேசத்தைப் பஞ்சம் பிடித்தாட்டுகிறது !

நகரத்தில் வாழும் மாந்தர்களே! நோயாளிகளே! பிள்ளைப் பேறில்லாது வருந்தும் பேதையர்களே! நீண்ட காலம் வாழவிரும்பும் நேயர்களே! உங்கள் விருப்பம் நிறை வேறப் பணத்தைச் சொரிதல் வேண்டா! உங்கள் வீடு களில் மருந்துகளைச் சேர்த்தல் வேண்டா. வைத்தியர்கள் —டாக்டர்கள்—உங்கள் வாயிலை மிதிக்கலாகாது. மலையை நோக்குங்கள்; மலையைச் சுற்றுங்கள்; மலையிலேறுங்கள்; மலையில் வாழுங்கள். மலையில் இளஞாயிற்றொளி உங்கள் மேல் வீசும்; தும்பு தூசிகளில்லாக் காற்று உங்களைக் காக்கும்; அருவிநீர் உங்களை வளர்க்கும். மலைகளைப்பற்றிய வருணனை நூல்களை அடிக்கடி ஓதுங்கள்; நம்முடைய வாழ்வு தொடங்கப்பட்ட இடம் மலை என்பதை மறவாதே யுங்கள். மலை வாசத்தால் எல்லா நன்மைகளும் விளையும்.

### அருஞ்சொற்பொருள்

எற்றுக்கு - எதற்கு. சொற்றதும் - சொன்னதும். அருகி - குறைந்து. குறிஞ்சி - மலையும் மலைசார்ந்த இடமும். முல்லை - காடும் காடு சார்ந்த இடமும். மருதம் - வயலும் வயல்சார்ந்த இடமும். நெய்தல் - கடலும் கடல்சார்ந்த இடமும். வதிந்து - வாழ்ந்து. நன்னூல் - நல்ல + நூல். உன்னுங்கள் - எண்ணுங்கள். ஓதுங்கள் - படியுங்கள்.

### கேள்விகள்

1. 'காலத்தின் கோலத்தை என்னென்று கூறுவது'—என்று ஆசிரியர் ஏன் கூறுகின்றார்?

2. மலைவாசத்தைப்பற்றி எழுதப் புகுந்தமைக்கு ஆசிரியர் கூறும் காரணம் யாது?

3. 'நானாவித உலகம்' என்பது எது?

4. 'மலையே மனித வாழ்வின் பிறப்பிடம்' என்பது எவ்வாறு பொருந்தும்?

5. 'அவர்கள் வாழ்க'.—எவர்கள்? ஏன்?

6. மக்கள் வாழ்வுக்கென அமைக்கப்பட்டனவே மலைகள் என்பதை விளக்குக.

7. வறுமையை வளர்த்துவருவன எவை?

8. மலைவாசம் சிறந்தது ஏன்?

### பயிற்சி

1. 'மலைவாசம்' என்ற இப்பாடப் பொருளைச் சுருக்கி 20 வரிகளுள் வரைக.

2. மலைவாசம் நல்வாழ்விற்கேற்றது என்பதை விளக்கி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக.

3. மலை, தன் சிறப்பைத் தானே கூறுவதுபோல எழுதுக.

# 6. யாழ்

[திரு. பி. கோதண்டராமன், எம். ஏ.]

இயற்கையோடு ஒத்துவாழ்ந்த பழந்தமிழர்கள், இயற்கையில் காணும் பொருள்களின் அசைவினுலும், அவை ஒன்ருேடொன்று மோதிக்கொள்வதனுல் உண்டாகும் அதிர்ச்சியினுலும் ஏற்படும் பலவித ஒலிகளைத் தங்களது நுண்ணிய செவியால் உணர்ந்து அனுபவித்தனர். வேட்டுவர் தங்கள் தொழிலைச் செய்யுங்கால், இறுகக் கட்டிய வில் நாணினின்று எழும் இன்னெலிகளைக் கேட்டு இன்புற்று, இவ்வில்லும் ஓர் இசைக் கருவியாகப் பயன்படக் கூடுமென்பதை நாளடைவில் உணரலாயினர். அங்ஙனமிருக்க, பசுத்திரளைக் கானகத்தில் மேய்க்கச் சென்ற இடையன் தான் செய்துகொண்ட குழலில் பாலைப்பண் வாசித்து அலுத்திருக்கையில், இன்னிசை தரும் வேடன் வில்லின்மீது கவனஞ் செலுத்தலாஞன். அவன் உடனே குமிழ் மரத்தின் உள் துளையுடைய கொம்பு ஒன்றை வெட்டி வளைத்து, அதன் இரு நுனியிலும் துளையிட்டு, அத்துளையின் வழியாக **மரல்** என்னும் மரத்தின் நாரை உரித்துத் திரித்துக் கொண்ட கயிற்றை நாணுகக் கட்டித் தானும் ஒரு வில் செய்துகொண்டு, அதன் நாணை விரலால் தெரித்துக் குறிஞ்சிப் பண்ணை வாசிக்கலாஞன். அதிலிருந்து வில்யாழ் பிறந்தது. வில்யாழைப்பற்றிய இவ்வரலாறு பெரும்பாணுற்றுப்படை 175,184 அடிகளில் காணப்படுகின்றது.

தமிழகத்தில் மிகப் பழைய காலத்தில் தோன்றிய இவ் வில்யாழே வளர்ச்சியுற்று, பல அனுபவங்கள் ஆராய்ச்சிகளுக்குப் பின்னர், பழந்தமிழ் இலக்கியங்கள் கூறும் நுண்ணிய உறுப்புகள் அமைந்த பலவித யாழ்களாக உருப் பெறலாயிற்று எனத் திண்ணமாகக் கூறலாம்.

பண்டைத் தமிழர்கள் உபயோகித்து வந்த இக்கருவிகளைப் பற்றிய செய்திகள் யாவும் பத்துப்பாட்டு, அடியார்க்குநல்லார் உரையுடன் கூடிய சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, கல்லாடம் ஆகிய நூல்களிலிருந்து நமக்குக் கிடைத்துள்ளன. இவற்றிலிருந்து தமிழ் மக்கள் பேரியாழ், சீறியாழ்—இதைச்

செங்கோட்டியாழ் என்றுங் கூறுவர்—**சகோடயாழ், மகர யாழ்** என்னும் நால்வகை யாழ்களே உபயோகித்தனரென்று தெரிகிறது. வில்யாழுக்குப்பின் தோன்றிய **பேரியாழ்** மூன்று ஸ்தாயிகளிலும் ஏழு சுரங்களே ஒலிக்கக்கூடிய 21 நரம்புகள் அல்லது தந்திகள் கொண்டது. இந்த யாழ் கையில் தூக்கிச் செல்லக்கூடிய விதத்தில் அமைந்திருந்தது. நரம்புகளி லிருந்து எழும் ஒலியைப் பெருக்குவதற்காக இக்கருவியி லேயே அமைந்த குழி **பத்தர்** என்றும், இப்பத்தரோடு இயைந்து மேலாக வளேந்து நரம்புகளேத் தாங்கி நிற்கும் **தண்டு கோடு** என்றும், நரம்புகளே முறுக்குவதற்கும் தளர்த்து வதற்கும் அத்தண்டிலேயே பொருந்தியுள்ள நரம்புக் கட்டுகள் **திவவுகள்** என்றும் பெயர் பெற்றிருந்தன என்பது பொருநராற் றுப்படை (4-18), சிறுபாணுற்றுப்படை (221-229), பெரும் பாணுற்றுப்படை (10-16) முதலிய பாட்டுக்களிலிருந்து தெரி கிறது. பேரியாழுக்குப் பின்வந்த **சீறியாழ்** அல்லது **செங் கோட்டியாழுக்கு** ஏழு தந்திகளே உண்டு ; ஒன்பது என்று கூறுவாரும் உளர். வில்யாழும் பேரியாழும் சீறியாழுமே சங்கத் தமிழ் நூல்களில் கூறப்படுவன. சிலப்பதிகார மணி மேகலே காலத்திலே வேறு இரண்டு யாழ்கள் தோன்றலாயின. சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையில் கூறப்படுவதும், 7-ஆம் நூற்ருண்டில் திருநீலகண்ட யாழ்ப்பாணர் கையி லிருந்ததும் **சகோடயாழ்** என்னும் யாழே. இந்த யாழ் 14 நரம்புகள் கொண்டது. **மகரயாழ்** என்பது 17 அல்லது 19 நரம்புகள் கொண்டது. இது மகரமீனின் உருவமுடைய தாகலின் அப்பெயர் கொண்டது. கண்ணுக்கினிய அழகிய தோற்றத்தினேயுடைய இந்த யாழ் யவனத் தச்சர்களால் செய்யப்பட்டதென்று உதயண காவியத்திலிருந்து தெரிகிறது.

தமிழ் மக்களின் பண்டைச் சிறப்பாக இருந்த இந்த யாழ்கள் அதிக வேலேப்பாடமைந்தன வென்றும், பாணர்கள் விலேயுயர்ந்த இரத்தினங்களே இக்கருவிகளுள் போட்டிருந் தனரென்றும், அவர்கள் இவற்றைப் பட்டுத் துணியால் போர்த்திப் பெட்டிகளுக்குள் வைத்திருந்தனரென்றும், பத் துப் பாட்டிலிருந்து தெரிய வருகின்றது. இவை மைதீட்டிய கரிய கண்களேயுடைய மணப்பெண்போல அழகு வாய்ந்

திருந்தன வென்றும், இவற்றின் கோடுகளிலே மலர் மாலைகள் கட்டப்பட்டிருந்தன வென்றும், இவை சித்திரமெழுதிய அழகிய உறையினுள் வைக்கப்பட்டிருந்தன வென்றும் சிலப்பதிகாரம் கானல்வரிப் பாடல் கூறுகின்றது.

பழந்தமிழர் வாணிகஞ் செய்துவந்த இஸ்ராயெல், சால்டியா, பாபிலோனியா, பாரசீகம், யவனம் முதலிய நாடுகளிலும், கடல்கொண்ட குமரி நாட்டுத் தமிழர் கடல் கடந்து குடியேறிய மிசிரம் என வழங்கிய எகிப்து நாட்டிலும், சுமேரியாவென வழங்கிய மெசப்பத்தோமியாவிலும் வில்யாழ்களும், யாழினத்தைச்சேர்ந்த ஹார்ப் (Harp), லயர் (Lyre) என்னும் கருவிகளும் வழங்கின என்று அந்நாடுகளின் வரலாற்றிலிருந்தும் புதை பொருளாராய்ச்சியிலிருந்தும் தெரிய வருகின்றது. இவை தமிழ் நாட்டிலிருந்தே சென்றிருக்க வேண்டுமென அறிஞர் ஊகிக்கின்றனர். மேலே சொன்ன நாடுகளிலிருந்தே ஹார்ப், லயர் என்னும் யாழ் வகைகள் ஐரோப்பாவுக்குச் சென்றன வென்று ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகின்றனர். ஐரோப்பாவில் இன்றுங்கூட மிகப் பழைய கருவிகளில் ஒன்ருகிய ஹார்ப் வழங்கிவருகின்றது. இந்தியக் கலைகளும் நாகரிகமும் செழித்தோங்கிய கீழ்கடலிலுள்ள சம்பாவில் (இது இப்போது பிரஞ்சு இந்தோ-சீனுவிலுள்ள அன்னும் பிரதேசம் ஆகும்.) கிடைத்த சிலையுருவங்கள் சிலவற்றில் தமிழர் கையாண்ட யாழ் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. வடநாட்டுச் சக்கரவர்த்தியாகிய சமுத்திரகுப்தனின் நாணயங்கள் சிலவற்றில் வில்யாழ் பொறிக்கப்பட்டுள்ளது. சற்றேறக்குறைய, சிலப்பதிகாரக் காலத்தைச் சார்ந்த அமராவதி சிற்பங்களில் சகோடயாழின் உருவம் காணப்படுகின்றது. பண்டை யாழ்களை யொட்டி இரண்டு இசைக் கருவிகள் காஞ்சிபுரத்துக் கைலாசநாதர் கோயில் சிற்பங்களில் காணப்படுகின்றன. இக்கோயில் எட்டாவது நூற்ருண்டில் கட்டப்பட்டதாகையால், இந்த யாழ்கள் அக்காலத்தில் பழக்கத்திலிருந்தவை எனலாம்.

இந்த யாழ்கள் சற்றேறக்குறைய ஒன்பதாம் நூற்ருண்டு அளவில் வழக்கொழிந்து பாரத நாடெங்கும் பரவி வந்ததும் சீறியாழைப் போலவே பெரும்பாலும் அமைந்திருந்ததுமான

வீணையாக உருமாறலாயின. அக்காலத்தில் ஆயிரந் தந்தி களுடைய **நாரதப்பேரியாழ்**, நூறு தந்திகளுடைய **கீசகப் பேரியாழ்**, ஒன்பது தந்திகளுடைய **தும்புருயாழ்**, ஒரே தந்தியுடைய **மருத்துவயாழ்** என நான்கு யாழ்கள் ஏற் பட்டன வெனத் தெரிகிறது. ஆனால், அவை யாழ் என்னும் பெயர் கொண்டனவாயினும், பழைய யாழ்களைப் போலல் லாமல் மிக மாறுபட்ட உருவுடையனவாகவே இருந்தன. அவை உண்மையில் வீணைகளே. பழைய யாழ்கள் பெரு வழக்கிலிருந்த காலத்திலேயே வடநாட்டு வீணையும் தமிழ் நாட்டில் வழங்கி வந்ததாகப் பழைய நூல்களிலிருந்து தெரிகிறது. பிரமவீணை என்னுமொரு வீணை பரிபாடலில் குறப்பிடப்பட்டுள்ளது. சிலப்பதிகாரம் கடலாடு காதை உரையில், "கலக நாரதன் கைக்கொள் வீணை அலகிலம்பண மாகெனச் சபித்து" என்னும் ஒரு மேற்கொள் காணப்படு கின்றது. மேலும், மணிமேகலையிலும், சீவக சிந்தாமணி யிலும், யாழ், வீணை என்னும் பெயர்கள் வரையறையின்றி வழங்கப்படுகின்றன. உதாரணமாக, மணிமேகலை மகரயாழ் என்றே பலவிடங்களில் கூறுகின்றதாயினும், சிறைக் கோட்டம் அறக்கோட்டமாக்கிய காதையில் 25-ஆவது அடி யில் **மகரவீணை** எனக் கூறுகின்றது. ஆயினும் வீணை வேறு, யாழ் வேறு என்பதில் சிறிதும் ஐயமே கிடையாது. ஏனெனில், யாழில் ஏழிசை அல்லது ஏழு சுரங்களை எழுப்பு வதற்கு ஏழு தனி நரம்புகள் வேண்டும். அதில் மெட்டுக் கிடையாது. ஆனால் மெட்டு இன்றியமையாது வைக்கப் பட்ட வீணையிலோ ஒரு நரம்புக்கு இசை கூட்டினாலும், அதிலமைந்த பல்வேறு மெட்டுக்களிலும் பல்வேறு சுரங்களை உண்டாக்கலாம். சுரத்தின் அசைவுகளையும், நுட்பமான நெளிவுகள் குழைவுகளையும், ஏற்றம் இறக்கங்களையும் வீணையில் காட்டலாமேயொழிய யாழில் காட்ட முடியாது. ஒரே தந்தியுடைய யாழெனக் கல்லாடம் குறிப்பிட்ட மருத்துவ யாழில் ஏழு சுரங்களை எழுப்ப முடியாதாகையால் அது எவ்விதம் யாழாக இருக்க முடியும்? அது வீணையே யாகும். இராகத்தின் அசைவுகளும் நெளிவுகளுமே இசைக்கு அழகும் வசீகரமும் அளிப்பன. கமகங்கள் எனக்

கூறப்படும் இவையே நாளடைவில் பரவிய கருநாடக இசையின் உயிர்நாடி. தமிழ் நாட்டில் வீணை பரவப் பரவப் பழந் தமிழிசை மரபு மறைந்து இப்புதிய இசைமரபே மேன்மேலும் பரவலாயிற்று. நரம்புகளை ஒத்திசைப்பதே யாழிசையின் மரபு. நரம்புகளை நிறுத்திக் கமகங்களை உண்டாக்குவதற்குரிய ஏற்பாடு யாழில் இல்லை. இசையறிஞர் அடுக்கிசையைக் கைக்கொள்ளவே யாழ் மறையலாயிற்று.

நமது பண்டைத் தமிழிசைச் செல்வத்தையும், ஒத்திசைப்பு முறையையும் மீண்டும் வழக்கில் கொண்டுவர வேண்டுமென்னும் பேரவாவினால் **சுவாமி விபுலாநந்தர் அவர்கள்** பல ஆண்டுகளாகத் தமிழிசை யாராய்ச்சியில் இறங்கிப் பழந் தமிழர்களின் இசை மரபுகளையும் யாழ்களைப் பற்றிய பல விவரங்களையும் "தமிழ்ப்பொழில்," "செந்தமிழ்" என்னும் பத்திரிகைகளின் வாயிலாகவும் பல சொற்பொழிவுகளின் வாயிலாகவும் விளக்கினார். அன்னார் யாழிசையோடு ஒத்துழைக்கும் சுருதிவீணை யொன்றை யமைத்து அதில் ஏழ் பெரும் பாலைகளையும் ஐந்து திறங்களையும் இசைக்கச் செய்து ரேடியோவில் விளக்கஞ் செய்தது குறிப்பிடத் தக்கதொரு விஷயமாகும். தமிழிசை இயக்கத்திற்கு அப்பெரியார் செய்த ஊழியங்கள் மிகவும் பாராட்டற்பாலனவாகும்.

பண்டைத் தமிழரின் இசைச் செல்வமாகிய இவ் யாழ்கள் மறைந்து பல நூற்றாண்டுகள் ஆன பின்னரும், இன்றுங்கூடத் தமிழ் நாட்டில் ஒருவித யாழ் இருந்து வருவதாகத் தெரிகிறது. ஸ்ரீமதி மார்க்கரெட் கஸின்ஸ் என்னும் கலா ரசிகர், ஒரு சமயம் தென்னாட்டில் பிரயாணஞ் செய்கையில் தென்னார்க்காட்டில் மலைச் சாதியினரிடையே ஒரு யாழ் வழங்கிவருவதைத் தாம் கண்டதாகவும், மூங்கிற் சட்டத்தில் அமைந்திருந்த அந்த யாழின் நரம்புகளிலிருந்து பலவித இன்னொலிகள் எழும்புகின்றனவென்றும், அச் சாதியினரின் பெண்கள் அதை மீட்டி வாசித்துக்கொண்டே கூத்தாடுகின்றனர் என்றும் கூறுகிறார்.

### அருஞ்சொற்பொருள்

பண் - இராகம். திண்ணம் - உறுதி. பரவப் பரவ - அடுக்குத் தொடர் ; பிரித்தாலும் இச்சொற்கள் தனித்தனியே பொருள் தரும். பட பட, கடகட - இவற்றைப் பிரித்தால் பொருள்தரா ; அதனால் 'படபட' என்பது இரட்டைக் கிளவி. பத்துப்பாட்டு - திருமுருகாற்றுப்படை முதலிய பத்துப் பாட்டுக்களைக் கொண்ட நூல். கல்லாடம் - கல்லாடர் என்ற புலவர் சிவபெருமானைப் பற்றிப் பாடிய நூல்.

### கேள்விகள்

1. வில்யாழ் எவ்வாறு தோன்றியது ?
2. வில் யாழின் வரலாற்றைப் பற்றிக் கூறும் நூல் யாது ?
3. வில் யாழிற்குப் பின் தோன்றியது எது ? அதுபற்றி நீவிர் அறிவன யாவை ?
4. பேரியாழிற்குப் பின்வந்த யாழின் பெயர் யாது ?
5. பத்தர், கோடு, திவவுகள் என்பன யாவை ?
6. யாழ்களைப் பற்றிப் பத்துப்பாட்டிலிருந்து அறியப்படும் செய்திகள் யாவை ?
7. புதைபொருளாராய்ச்சியால் தெரியவரும் செய்தி யாது ?
8. தமிழிசைக்கு விபுலாநந்தர் ஆற்றிய தொண்டுகள் யாவை ?

### பயிற்சி

1. 'சங்ககாலத் தமிழிசை நிலை' என்பது பற்றிச் சில வரிகள் எழுதுக.
2. இன்று விளங்கும் வீணை அன்றைய யாழின் திரிபே என்பதை இப்பாடத்தின் துணையைக் கொண்டு விளக்குக.
3. பத்துப்பாட்டு, புறநானூறு, கல்லாடம், சகோடயாழ்—சிறுகுறிப்பு வரைக.

# 7. செட்டிநாட்டரசர்

## (டாக்டர் சர் அண்ணுமலைச் செட்டியாரவர்கள்*)

[திரு. இளவழகனுர்]

தமிழகம், பெருமக்கள் சிற்சிலராற் காலந்தோறும் செவ்வொளியும் நறுமணமும் பெற்று விளங்கிவருகின்றது. தமிழ் நாடு என்னும் பூங்காவில் இதுகாறும், பற்பல வகையான எத்தனையோ அழகிய பெரும் பூக்கள் மலர்ந்திருக்கின்றன. தக்க அறிஞர்கள், செல்வர்கள், சான்ருேர்கள் எல்லோரும் இங்ஙனம் நாட்டில் அலர்ந்த நன்மலர்களே யாவர்.

அறிவும் வளமும் சான்ருண்மையும் இல்லாதபோது உலகத்தின் நிலப்பரப்புக்கு 'நாடு' என்னும் பெயர் உண்டாவதில்லை. சிறந்த பெருமக்கள் அவ்வப்போது தோன்றி இந்நலன்களை யெல்லாம் தம் தகுதியினுற் பெருக்கிப் பெருவாழ்வு வாழ்ந்து பிறர்க்கும் அளித்து வந்தமையினுலேயே, உலகம் இப்போது பற்பல உயர்ந்த நாடுகளாக விளங்கிக் காட்சி தருகின்றது. இன்றேல், இவ்வுலகம் வெறும் மேடும் பள்ளமும் காடும் கங்குமாகவே காணப்படுவதாயிருக்கும்.

தக்க ஆண்மை யுள்ளவர்கள் வாழு மிடங்களும் அங்ஙனம் காணப்படுமோ? காடு கொன்று நாடாக்கிக் குளந் தொட்டு வளம் பெருக்கிக் கோயிலொடு குடிநிறீஇத் திருநிலைஇய பெருமான் எயிலாகவன்ருே அவை திகழா நிற்கும்! சிதம்பரத்துக்கருகில் இப்போது **அண்ணுமலைநகர்** வானளாவிய அழகுத் தோற்றத்துடன் காட்சி யளித்துக் கொண்டிருக்கும் இடம், சென்ற பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் எப்படி இருந்தது? இப்பொழுது எப்படி விளங்குகின்றது!

---

*இது, அரசர் அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாக் காலத்து எழுதப் பெற்றது. செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 19-இல் வெளி வந்தது.

ஔவை என்னுந் தமிழ்த்தாய் இந்த அழகிய உண்மை யையே,

" நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே "

என்று தமது முதிய உலகியற் பழக்கத்திலிருந்து சிறந்த செந்தமிழ்த் தொடரால் விளங்க எடுத்துக் காட்டினர். 'ஒன்று நாடா யிருக்கட்டும்; ஒன்று காடா யிருக்கட்டும்; அல்லது, ஒன்று பள்ளமா யிருக்கட்டும்; ஒன்று மேடா யிருக்கட்டும்; எந்த இடத்தில், சிறந்த ஆண்மையாளர்கள் திகழ்கின்றார்களோ அந்த இடத்தில், நிலமே! நீயும் சிறந்து விளங்குகின்றாய்,' என்பது இச் சங்கத் தமிழின் கருத்து.

இன்று உலகத்தில் விளங்கும் நாடுகள் எல்லா வற்றுள்ளும் இந்தியா என்னும் நமது நாவலந்தீவே மிகவும் பழமையும் பெருமையும் வாய்ந்த நாடாக இருக்கின்றது. ஆதலால் அறிவும் செல்வமும் சான்றாண்மையும் என்னும் நாகரிகப் பாகுபாடுகள் ஊழி ஊழியாகவே நிரம்பி மணக்கும் இடம், இவ்வுலகில் நமது அருமைத் தமிழகமாகவே இருந்து வருகின்றதென்று தெரிகின்றது. அங்ஙனமாயின், ஆ! எத்தனை அழகிய நாகரிகச் செழுமலர்கள் இதுகாறும் நமது செந்தமிழ்ப் பூங்காவில் அரும்பி மலர்ந்து விளங்கி நறுமணம் பரப்பியிருக்க வேண்டும்! தெய்வத் தொல்காப்பியர் போன்ற பேரறிஞர்களும், கரிகாற் பெருவளவன் போன்ற பெருஞ் செல்வர்களும், திருவள்ளுவப் பெருந்தகையார் போன்ற பெருஞ் சான்றோர்களும் நமது தமிழகம் என்னும் பூம் பொழிலில் அவ்வப்போது சிறக்க மலர்ந்து செவ்விதிற் செய் தருளிய கைவண்ணங்களாலன்றோ, நமது தமிழ் நாகரிகம் இவ்வளவுக்குப் பெருமணம் பெற்றிருக்கின்றது!

தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கு அவ்வப்போது உறு தொண்டு புரிந்துவந்த பெருமக்கள் இவர் போன்றார் பற்பல ராவர். இத்தகைய தக்கோரை யெல்லாம் நாட்டின் நன் மலர்களாகவே கருதிப் போற்றி மகிழ்வதிலும் நமக்குப் பேருரிமை உண்டு. ஏனென்றால், 'பூந்தோட்டம்' என்னும்

பொருளில் வரும் 'பொழில்' என்னும் ஓர் இனிய தூய தமிழ்ச்சொல்லை, 'நாடு' என்னுங் கருத்திலும் வழங்கி மகிழும் அழகு நமது தெய்வத் தமிழ் மொழியில் உள்ள தன்றோ !

இவ் விருபதாம் நூற்றாண்டில் அங்ஙனம் நமது தமிழகப் பூம்பொழிலில் அழகுற மலர்ந்து விளங்கி மணங் கமழ்கின்ற சிறந்த செழு மலர்களுள், நம் **செட்டிநாட்டரசர் சர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள்** ஓர் உயர்ந்த பெரு மலராகத் திகழ்ந்து விளங்குகிறார்கள் என்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியதாக இருக்கின்றது.

இப் பெருந் திருவாளரவர்கள் மிகவும் வியக்கத்தக்க பெருந்தகையாராகக் காணப்பெறுகின்றார்கள் ; கருவிலே திரு உடையவர்களாய், அதற்கேற்ப உருவும் அறிவும் திறனும் ஒருங்கு வாய்ந்து திகழ்கின்றார்கள். இவர்கள் வரலாறே, பழைய தமிழ் வள்ளல்களின் அருள் வரலாறுகளைப் போல், உலகப் பெருமக்களின் அறிவுள்ளங்களுக்குப் பெரு விருந்தாக அமைந்திருக்கின்றது.

அறிவுச் செல்வம் பொருட் செல்வம் சான்றாண்மைச் செல்வம் என்னும் முச்செல்வமும் ஒருங்கு தவழப் பெற்றுப் பெருந்தவக் கவின்மலராய் முன் விளங்கிய அருட் பெரியா ரான திருவெண்காடர் என்னும் பட்டினத்துப் பிள்ளையாரது அருமரபில், பரம்பரையே சிவத் தொண்டு பொதுத் தொண்டு கள் புரிந்துவரும் பேரறவோரான மூதாதையரது பெருங் குடியில், 1881-ஆம் ஆண்டில் **அரசர் அண்ணாமலையா ரவர்கள்** தோன்றினார்கள். அறிவுற வளமுற ஆண்மையுறப் பெருவாழ்வு வாழ்ந்து 1941-இல் அறுபது ஆண்டுகள் இவர்கட்கு இனிது நிரம்பினமையின், சென்ற 28-9-41-இலே தான் இப்பேரருள் வாழ்வின் நிறைவு விழா அனைவருள்ளங் களின் ஆராப் பெருமகிழ்வோடு கானாடுகாத்தான் என்னும் நகரில் இவர்கள் அழகிய அரண்மனையிற் சிறக்க நிகழ்ந்து, நாடெங்கும் பெரிய புகழ்மணம் பரப்பியது.

வாழ்வுக் கென்ன ? உலகிற் பலருந்தாம் பிறந்து மண்மேற் பெரு மன்னர்களாகக்கூட வாழ்ந்துவிடுகிறார்கள் ; அல்லது அறுபதாம் நிறைவு விழாவுக்குத்தான் நாட்டில்

என்ன குறைச்சல் ? எல்லாருக்குந்தாம் நடைபெறுகின்றது. வாழ்வில், எவையேனும் கருதத் தகுந்த நிகழ்ச்சி வீறுகள் கதிர்விடுகின்றனவா என்பதொன்றே சான்ருேர்களுக்கு உவப்பளிப்பதா யிருக்கும். சான்ருேர்கள் மகிழாத உயிர் வாழ்க்கைக்கு 'வாழ்வு' என்னும் பெயரே இல்லே. இளமையி லிருந்தே நம் செட்டிநாட்டரசரவர்களின் பெருவாழ்வு, இருகரையும் பெருக நிரம்பிய வளமிக்க நல்லாறு போல அருஞ்செயல் வீறுகளாகிய அளவிறந்த வான் மணிகளே ஆண்டாண்டுங் கொழித்து, நாட்டுக்குப் பல்லாற்ருனும் பல்வகை வளனுந் தந்து, பேராற்றலோடும் பேரினிமை யோடும் உலகு வளேத்து ஒழுகா நிற்கின்றது.

இவர்கள், தமக்குப் பதினுரும் ஆண்டு நிறைவெய்திய காலத்தில் தம்மை மணந்த தம் அருமை இல்லக்கிழத்தியா ரான திருவளர்செல்வியார் சீதையாச்சியார் அவர்களுடன், தமது இருபதாம் ஆண்டளவில் (1901) தமது குடும்பத்திற் கிடைத்த சில நூருயிர ரூபா பாகத்தோடு தம் அரிய நல் வாழ்க்கையைத் தொடங்கியிருக்கிருர்கள்.

இவர்கள் வாழ்வு இளமையிலிருந்தே சிறந்த குறிக்கோள் களுடனும் திட்டங்களுடனுமே நடைபெற்று வருவதாகத் தெரிகின்றது. அதற்கு, அவ் இளமையிலேயே கலக்க மில்லாத உள்ளத் தெளிவு கட்டாயம் இருந்திருக்கவேண்டும்.

தமது நல்வாழ்க்கையைத் தொடங்கியபின் ஏறக்குறையப் பத்தாண்டுகள் (1910) வரையில், தமது அருங்குலத் தொழி லான வாணிக முயற்சியிலேயே இவர்கள் தமது கருத்தைச் சீருஞ் சிறப்புமாகச் செலுத்தி வந்திருக்கின்றனர். அவ் வகையில், ஏனேப் பலரும் இவர்கள் தொழில் திறன் நினேந்து அண்ணுந்து அண்ணுந்து அடிமுடி காணுது வியந் துருகும்படி, இவர்கள் ஓர் **அண்ணுமலே**யாகவே என்றும் ஒளி மிகுந்து வருகின்ருர்கள்.

இன்று இவர்கள் பல கோடிக்கணக்கான செல்வங் களுக்குப் பெருநிதிக் கிழமை பூண்டு திகழ்வதொன்றே அதற்குப் போதுமான சான்ருகும். இவ்வாண்டு அறுபதாம் நிறைவுவிழா நிகழும்போது, இப் பெரு வளங்க ளெல்லாம் ஒருங்கு தலேமயங்கிப் பெருங் காட்சி பயந்த சிறப்பும் ஒரு

வாறு அதனை எடுத்துக்காட்டும். விழா நிகழ்ச்சிக்குரிய வேலைக்காரர்கள் மட்டும் ஆறுயிரவர்க்குமேல் இருக்குமென்ப. ஏறக்குறையப் பதினையாயிரம் பேருக்குமேல் அமர்ந்திருந்து நிகழ்ச்சிகளைக் கண்டு களித்தற்குரிய அணிசெய் பந்தர்; எங்கும் உண்டாட்டு; எங்கும் இசை விருந்து; எங்கும் அன்பர் திரள்; எங்கும் வாழ்த் தொலிகள்; வாழ்த்தொலி தோறும் வாரி வழங்கிய நம் வள்ளலின் கை வண்மை. சில நூறுயிரக் கணக்கான தொகைகள் இவ் விழாவிற் சிந்தின. பூவின் கிழத்தி இப் பெருமகன்பால் தாராளமாய் விளையாடி வருகின்றனள்.

இனி, மேற்கூறிய அவ் இளம்பருவத்திலேயே போதிய மக்கட் செல்வங்களும் வாய்ப்பக் கிடைத்திருக்கின்றன. இஞ்ஞான்று அரசியல் வானிற் சிறந்த செவ்விளங் கதிரோ னுகப் பேரொளி கான்று ஒளிரும் **இளவரசர் முத்தைய செட்டியாரவர்கள்** இவர்கட்கு இருபத்து நான்காம் ஆண் டளவிற் (1905) பிறந்த அருந் தோன்றலாராவர். "அறு நான்கிற் பெற்ற பிள்ளை" என்பதற் கேற்பப், பெறுதற்குரிய பேறுக ளெல்லாம் இவர்கட்கு, உரிய பருவங்களிலேயே கிடைத்துவருகின்றன. 'பதினுரும் ஆண்டில் திருமணம்' என்பதும் அத்தகைய காலத்துப் பேறுகளுள் ஒன்றன்றோ! இங்ஙனம், இனிப் பெறும் பேறென்றின்றி, அனைத்துங் காலத்திற் பெற்றுக் கவினத்துய்த்து வாழ்ந்து வந்த பேரழகு, அனைவருள்ளத்தையும் அப்போதே கவர்ந்துவந்தது.

'முப்பதாம் ஆண்டளவில் மூன்றற் றொருபொருளைத் தப்பாமே தன்னுட் பெறுனுயின், ஒருவனது மூப்புப் பயனில் மூப்பாய்க் கழியும்' என்பது ஒளவைத் தாயின் ஆணை. அவ்வாறே நம் **அண்ணுமலை வள்ளல்**, தமது முப்பதாம் ஆண்டளவிலிருந்தே (1910) அதுகாறுந் தொழில் துறை யோடு மட்டுஞ் சென்றிருந்த தமது கருத்தை மாற்றிப் பொது நலத் துறையிற் செலுத்திவரத் தொடங்கினர். இம் முப்பதாம் ஆண்டே இவர்கள் நல்வாழ்க்கையின் திருப்புமையமாகும்.

இவ்வாண்டுதான் இவர்கள் காரைக்குடி நகரக் கழகத் தலைவராயிருந்து பொதுப்பணி ஆற்ற முன்வந்த காலம்; பசுமலையிலுள்ள அமெரிக்கன் பள்ளிக்கு ஓர் உணவு விடுதி

கட்டிக் கொடுத்த காலமும் இதுதான். முதன் முதலாக நகரத்தார் மரபில் இங்கிலாந்து சென்று பல திங்கள்கள் வதிந் திருந்த காலமும் இதுவேயாகும். இங்ஙன மெல்லாம் அன்று திரும்பிய இவர்கள் வாழ்க்கைப் பேரொளி, சென்ற முப்பது ஆண்டுகளாகத் தமிழகத்துக்கு விளைத்துவரும் நலங்கள் மிகவும் வியத்தற் குரியனவா யிருக்கின்றன.

இவர்கள் இதுவரையில் அறத்துறையில் வாரி வழங்கி யிருக்குந் தொகை, ஏறக்குறைய ஒன்றரைக்கோடி ரூபாவுக்கு மேல் இருக்குமென்று தெரிகின்றது.

தமிழ் நாட்டிற் கொடுப்பதிற் பேர்போன வேள்பாரியைப் பாராட்ட விரும்பிய அந்தணப் புலவராஞ் செந்தமிழ்க் கபிலர், 'பாரி பாரி என்று பல ஏத்தி ஒருவனைப் புகழ்வர் செந்நாப் புலவர் ; பாரி ஒருவனும் அல்லன், மாரியும் உண்டு ஈண்டு உலகு புரப்பது' என்று மிகவுஞ் சுவையாக அருளிச் செய்திருக்கிருர். இனி, '**அண்ணுமலையும் உண்டு ஈண்டு உலகு புரப்பது**' எனவுங் கூறலாமெனத் தோற்றுகின்றது.

திருக்கோயில் திருப்பணிகள், உணவு விடுதிகள், மருத்துவச் சாலைகள், திருமுறைப் பாடசாலைகள், தொழிற் கழகங்கள், கலைக் கல்லூரிகள், பசு மடங்கள், சாலைகள், குளங்கள், பூங்காக்கள் முதலிய பல வகையான அற நிலையங்களை இவர்கள் அமைத்து உலகுக்கு உதவி யிருக்கிருர்கள்.

தமிழ் நாட்டிலேயே செட்டிநாடு இனைய நல்லறங்கள் புரிவதில் ஆர்வம் மிகவுடையது. சைவமே அன்றித் 'தமிழ் இலக்கம்' முதலியவற்றை விடாமற் போற்றித் தமிழை ஓம்பி வரும் அருஞ் செயலும் செட்டிநாட்டவர்பால் உண்டு. இவ் வளவுக்குங் காரணம் அந் நாடு முன் பாரிவள்ளல் திகழ்ந்த நாடானமையின் (இராமநாதபுரக் கோட்டம்) போலும் ! ஆத லின், இஞ்ஞான்று செட்டிநாட்டரசர், நீர் நிறைந்த ஊரு ணியே போல உலகவாம் பேரறிவாளராக இயல்பாகவே வள்ளன்மை வாய்ந்து திகழா நிற்கின்றனர். செட்டி நாட்டைத் 'தென்னிந்தியாவின் வளத்தோட்டம்' என்றுங் கூறுவதுண்டு. **அண்ணுமலை வள்ளல் செட்டிநாட்டரச ராக** விளங்குகிருர்கள். இவர்கள் திருவுடைமைக்கு இவ்

அரிய பெயர் ஒன்றுமே போதும். இவர்களுக்கு இது முன்னோரால் எய்திய பட்டமன்று. தமது அறிவாற்றலால், விடாமுயற்சியால், அழகிய உலகியல் திறனால், தமது சிறந்த பொதுத் தொண்டுகளால் தாமே தேடித் தம் வழிவழி வருவார்க்கும் வழங்கும், தம் தனிமை உரிமைப் பட்டமாகும். ஈதன்றோ ஆண்மையாவது! இளமையிலிருந்தே இவர்கள் அரசினராலும் பிறராலும் பாராட்டப் பெற்று முறையே ராவ்பகதூர், திவான்பகதூர், சர், ராசா, டாக்டர் என்னும் அரும் பெரும் பட்டங்களை யெல்லாம் பெற்று விளங்கி வருகிறார்கள்.

பொருளைக் கருத்தாக ஈட்டுதல், அதனைப் பல வகையாலும் காத்தல், நெறி யறிந்து அறச் செலவு செய்தல், இவை தமக்கேற்ற சுறுசுறுப்பு, விடாமுயற்சி, எளிமை, இனிமை, ஒன்னலரையுந்தம் வயமாக்குங் கவர்ச்சியான பேச்சுத்திறன், வியக்கத் தக்க நினைவு வன்மை, உலகப் பெருமக்களின் நட்பு, விருந்தோம்பல், செயல்திறன், சூழ்ச்சித்திறன், முன்னெச்சரிக்கையோ டொழுகுதல், அடக்கி ஆளும் வன்மை, துணிவு, நாட்டுப் பணி, பழமையோடு கூடிய சீர்திருத்தம் முதலிய இவர்களுக் கமைந்துள்ள அரும்பெருங் குணங்களை உற்றுநோக்கினால், மேல் காட்டிய எல்லாப் பட்டங்களோடும், "எவ்வழி நல்லவர் ஆடவர்" என்று ஔவைப் பிராட்டியார் திருவாய்மலர்ந்தருளிய "நல்ல ஆடவர்" என்னும் உயர் பட்டத்துக்கும் இவர்கள் உரியவர்களென்பது புலனாகாமற் போகாது.

இவர்கள் செய்திருக்கும் கல்வி யறங்களுள் முதன்மை யானது, இவர்கள் பெயரோடு இணைந்து திகழும் சிதம்பரம் **அண்ணாமலைப் பல்கலைக் கழகமாகும்.** இது காலத்துக் கேற்ற அறிவார்ந்த அறச்செயல். இதற்கு மட்டும் இவர்கள் ஏறக்குறைய அரைக் கோடி ரூபாவுக்குச் செலவு செய் திருக்கக் கூடும். பல்கலைக் கழகங்கள் உலகத்திற் பல உள்ளன. தமிழகத்தின் நடுவில் உள்ள நம் **அண்ணாமலைப் பல்கலைக் கழகமானது,** ஒரு சிறந்த தமிழ்ப் பல்கலைக் கழக மாகத் தமிழ் மொழிக்கும் தமிழ் மக்கட்கும் உரிய தனி உரிமையோடு மேலோங்கி மிளிர வேண்டுமென்று அனை

வரும் விரும்பி நிற்கின்றனர். வரலாற்றில், இவர்கட்கு அழி யாத இடமளிப்பது இது.

இனி, இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழுள், இசை நாடகத் தமிழ்கள் பெரும்பாலும் நிகழ்ச்சியில் இல்லை. பழைய தமிழ் நூல்களிற் சிற்சில குறிப்புக்கள் மட்டும் உண்டு. தமிழிசையைத் தமது பல்கலைக் கழகத்தில் ஒரு தனிப்பட்ட முறையில் இணைத்திருப்பதுடன், பல பரிசுத் திட்டங்களும் வகுத்து இசைத்தமிழ் மலர்ச்சிக்குப் பேருக்கம் காட்டிவரும் நம் செட்டிநாட்டரசரவர்களின் பெயர், இவ் வகையில் ஊழி ஊழியும் நிலைபெறுமென்பதிற் சிறிதும் ஐய மில்லை.

நாடகத் தமிழ் பற்றியும் இவர்கள் ஊக்கம் கொண்டிருக் கிருர்கள் என்று அறிய, மேலும் மகிழ்ச்சி மீதூர்கின்றது.

இனித் தமிழ்நாட்டின் தலைநகரான சென்னை மாநகரில் தமிழ்க்கென்று தனியாகப் பொதுமண்டபம் ஒன்று இல்லாக் குறை, நம் செட்டிநாட்டரசரவர்களாலேயே விரைந்து நிறைவேறுதற்குரியது. இம்மண்டபம் சென்னையில் அமையு மாயின், தமிழ் வளர்ச்சிக்குத் தக்க கிளர்ச்சியும் முயற்சியும் தாமே கிளைத்தெழும். தமிழ் இலக்கியங்கட்குப் புத்துயிர் உண்டாகும்.

நம் அன்பார்ந்த **அரசர் அண்ணுமலை வள்ளலவர்** களும் அவர்கள் அருமைக் குடும்பத்தவர்கள் அனைவரும், இங்ஙனம் நல்லறங்கள் பலவும் என்றுஞ் செய்துகொண்டு மேலும் மேலும் பெருவளஞ் சிறந்து இனிதூழி வாழ்வு பெறப் பொன்னர் தில்லையம்பலவன் தன் எல்லையில் அருளைப் பெய்தருளுவானுக !

**அருஞ்சொற்பொருள்**

அலர்ந்த - மலர்ந்த. சான்ருண்மை - பெருந்தன்மை. நிறீஇ - நிறுத்தி. அவல் - பள்ளம். மிசை - மேடு. ஆடவர் - ஆண்மையாளர். ஊழிஊழி - அடுக்குத்தொடர். செழுமலர் - செழுமை + மலர். தொல்காப் பியர் - தொல்காப்பியம் என்னும் பேரிலக்கணம் செய்த பெரும்புலவர். செவ்விதில் - செம்மையாக. உறு - பொருந்திய, தேவையான. பொழில் - சோலை. ஓம்பி - பாதுகாத்து.

### கேள்விகள்

1. உலகத்தின் நிலப்பரப்புக்கு 'நாடு' என்னும் பெயர் எப்போது உண்டாகும்?

2. 'நாடா கொன்றோ' என ஔவையார் பாடிய செய்யுளின் கருத்து யாது?

3. தமிழ் நாகரிகம் மிக்க பெருமை பெற்றிருப்பதற்குரிய காரணங்கள் யாவை?

4. ஔவைத் தாயின் ஆணை யாது?

5. அண்ணாமலை அரசரின் குணநலன்கள் யாவை?

6. 'இது காலத்துக் கேற்ற அறிவார்ந்த அறச்செயல்'—எது?

### பயிற்சி

1. அண்ணாமலை அரசரின் அறச்செயல்கள் என்பது பற்றிச் சிறு கட்டுரை வரைக.

2. அண்ணாமலை அரசர் ஆற்றிய தமிழ்த்தொண்டுகளை விவரித்து உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக.

3. இவர்போலக் கல்விக்குழைத்த வள்ளல்களுள் நீங்கள் அறிந்த ஒருவரைப் பற்றியோ, சிலரைப் பற்றியோ விளக்கம் தருக.

# 8. காவிரியின் பெருமைகள்

[திருவாளர்கள் எம். எஸ். வேங்கடாச்சாரியார், கோ. வில்வபதி, டி. ஆர். ஸ்ரீநிவாஸாசாரியார்]

காவிரியாறு, என்று உற்பத்தியானது எனக் கூற முடியாத பழமையும் பெருமையும் உடையது. உலகத் தாயாக விளங்கும் உமையம்மையார் தோற்றமும் முடிவுமில்லாத அருட் பேருருவாய் விளங்குவது போலவே, அவருடைய அருட் பெருக்கின் வடிவாய் வழிந்தோடும் காவிரியாறும் ஆதியந்தமில்லாத அருள் தன்மையை உடையதாகவே விளங்குகின்றது.

**சோழர்தம் குலக்கொடி :** காவிரியாறு பிறந்தது குடகு நாட்டில்; குதித்தும் தவழ்ந்தும் ஓடி விளையாடி மகிழ்ந்தது மைசூர் நாட்டிலும் கொங்கு நாட்டிலும்; தன் வளமெல்லாம் வழங்கி, மக்களை வாழ்வித்துக் குரைகடலில் குளிப்பது சோழ நாட்டில். காவிரியன்னை இத்துணை நாடுகள் வழியாகப் பாய்ந்து, ஹேமாவதி போன்ற தன் தோழியர்கள் கொடுத்த வளங்களையும் வாரிக்கொண்டு வருகிறாள். எனினும், சோழ நாட்டுக்குள் புகும்போதுதான் எண்ணற்ற தன் அன்புக் கரங்களாம் கிளைநதிகளை உண்டாக்கி, எங்கு நோக்கினும் ஆறுகள், வாய்க்கால்கள், நீர் நிலைகள் என்று கூறுமாறு அந்நாட்டையே நீர் நாடாக்கியுள்ளாள். இக் காரணத்தாலேயே காவிரியாறு, பல நாடுகளின் வழியே பாய்ந்து வந்தாலும், சோழநாட்டுக்கே தனி உரிமையுடைய தாய்ப் புலவர் பலராலும் போற்றப்பட்டு வருகிறது. மணிமேகலை ஆசிரியராகிய சீத்தலைச் சாத்தனார், 'பாடல்சால் சிறப்பில் பரதத்து ஓங்கிய, கோடாச் செங்கோல் **சோழர்தம் குலக்கொடி**' என்றும், சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோ வடிகள், 'சோழர்தம் தெய்வக் காவிரி' என்றும் இதனைச் சோழர்களுக்குரிய ஆறெனவே கூறியிருத்தல் அறியத்தக்கது.

**காவிரியும் சோழநாட்டு மக்களும் :** காவிரிக்கும் சோழநாட்டு மக்களுக்கும் உள்ள தொடர்பு தாய்க்கும் சேய்க்

கும் உள்ள தொடர்பு போன்றதாம். அறிவும் திருவும் அழகும் ஆற்றலும் ஒருங்கமைந்த நங்கையே யெனினும் பெற்றவர்களுக்கு அவளிடம் உள்ள உரிமையைவிட அவள் பெற்று வளர்த்த மக்களுக்கு அவளிடம் உரிமை அதிகமன்றோ! காவிரி நங்கைக்குக் குடகு தாய் வீடு. சோழநாட்டுக் கடலில் கலப்பதால் இதுவே சொந்த வீடு. அவளுடைய வயிற்றில் தோன்றி, அவள் அன்போடு வழங்கிய அமுதினை உண்டு, அவள் மடியில் தவழ்ந்து விளையாடி வளர்ந்த அருமைக் குழந்தைகளாகிய சோழநாட்டு மக்களுக்கே அவள் உரியவளாவாள் என்பதில் ஐயமும் உண்டோ ?

**தாயின் அன்பு :** பெரும்பாலும் பெண் தாய் வீட்டில் தன் விருப்பம்போல் மிடுக்குடனேயே வாழ்வாள் ; பெற்றோர்களும் அவளை அழகுபடுத்திக் கண்டு மகிழ்வதிலேயே அகம் குளிர்வர். ஆனால் தான் புகுந்த வீட்டிலோ அரும் பாடுகள் பட்டேனும் தன் அருமைக் குழந்தைகளைக் காக்கவேண்டிய பொறுப்பு அவளைச் சார்ந்ததாம். தன் மக்கள் மேலுள்ள பேரன்பால் தன் உடலும் மெலியப் பற்பல துறைகளில் வருந்தி உழைத்து, தன் அன்புக் குழந்தைகளைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்து, அவர்கள் இன்முகம் கண்டு மகிழ்வதே அவளுக்குப் பேரின்பமாம். தன் தாய் வீட்டிலுள்ள பொருள்களையும் பிறர் தனக்கு அன்புடன் அளிக்கும் பொருள்களையும் சேர்த்துவைத்துக் குழந்தைகள் பசிவேளை அறிந்து அவர்களை ஊட்டி வளர்ப்பதிலேயே அவள் கண்ணும் கருத்துமாக இருப்பாள்.

**காவிரித்தாய் சேய்களைப் புரத்தல் :** இங்ஙனமே காவிரித் தாயும் குடகு நாட்டிலும் மைசூர் நாட்டிலும் அருவியாய்க் குதித்தும், ஆறாய் ஓடியும், ஆடியும் பாடியும் அழகு கனிந்த பருவமங்கையாய்த் தன் விருப்பம்போல் ஓடித் திரிகிறாள். குடகு நாட்டு மக்கள் காவிரி நங்கையின் பேரழகைக் கண்களால் பருகுவதுடன் அமைதி கொள்கிறார்கள். மைசூர் நாட்டு மக்கள் காவிரி அன்னையால் அடையும் பயனும் மிகச் சிறிதேயாம். மேட்டூர் அணையாலும் கொங்கு நாட்டு மக்களுக்கு விளையும் பயனைவிடச் சோழ நாட்டு மக்களுக்கே பயன் அதிகம். ஆனால், சோழ நாட்டில் பாயும்போது காவிரி

தன்னிடமிருந்து தானே பல கிளை நதிகளை உண்டாக்கிக் கொண்டு பாய்கின்றாள்; தன் உருமெலிந்து, வடிவிழந்து, பற்பல இடங்களிலும் பரவிச் சென்று பாடுபட்டுத் தன் அருமை மக்களை ஊட்டி வளர்க்கின்றாள்; வேளை அறிந்து தாய் அமுதூட்டி மக்களை மகிழ்விப்பதுபோலக் காவிரித் தாயும் பயிர் விளையும் காலம் அறிந்து, தன் வளம் சுரந்து காக்கின்றாளன்றோ! ஹேமாவதி, லக்ஷ்மண தீர்த்தம், பவானி, அமராவதி முதலிய தன் தோழிகள் மகிழ்வுடன் நல்கிய வளங்களையும் தன் மக்களுக்கன்றோ தந்து மகிழ்கின்றாள். முடிவில் கடலோடு கலக்குமிடத்தில், 'காவிரியா இவள்!' என்று ஐயுறுமாறு மெலிந்து தேய்ந்து தன் வளஞ் சுருங்கிய முதியவளைப் போலல்லவா சென்றடைகின்றாள்!

**அன்னை காவிரியைப் புலவர் போற்றியமை :** காவிரி இவ்விதம் சோழ நாட்டு மக்களைத் தாய்போல் காக்கும் காரணத்தால்தான் சிலப்பதிகார ஆசிரியர்,

'வாழி அவன்தன் வளநாடு மகவாய் வளர்க்கும் தாயாகி
ஊழி உய்க்கும் பேருதவி ஒழியாய் வாழி காவேரி!'

என்று ஊழிக்காலம் வரை காவிரியாறு சோழ நாட்டிற்குத் தன் வற்றாத வளஞ்சுரக்கும் ஈகையினைக் கற்பவர் மனம் களிதுளும்ப அழகுற எடுத்து மொழிந்துள்ளார். சேக்கிழார் நாயனாரும், 'காவிரியாறு குடகு நாட்டில் சைய மலையில் உதிக்கிறது; அஃது உலகிலுள்ள பல உயிர்களும் இன்புற்று வாழத் தன் இனிய வளத்தை அளிப்பதால் நிலமகளுக்குச் செவிலித் தாய்போல இருக்கிறது,' என்று இக்கருத்தையே வேறொரு வகையாக அழகுபடக் கூறி யுள்ளார். இங்ஙனம் காவிரியாறு சோழநாட்டுக்கு உரிய ஆறாக விளங்குகின்ற காரணத்தால் காவிரியின் பெருமை சோழ நாட்டின் பெருமையோடும், சோழ மன்னர்களின் பெருமையோடும் இரண்டறக் கலந்து திகழ்கிறது. சோழ நாட்டையும் சோழ மன்னரையும் பாராட்டும் புலவர்கள் **'காவிரி நாடு'** என்றும் **'காவிரிநாடன்'** என்றும் புகழ்ந்து கூறியுள்ளமை இதனை வலியுறுத்தும்.

**வான் பொய்ப்பினும் தான் பொய்யாத் தகைமை :** கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்ற புலவர் பெருமான்,

சோழன் கரிகாலனைப் புகழ்ந்து பாடிய பட்டினப்பாலை என்ற நூலில், 'வெள்ளி என்ற விண்மீன் தான் நிற்றற் குரிய வடதிசையினின்றும் மாறித் தென்திசைக் கேகினும், மழைத்துளியை உணவாகக்கொண்டு வானைப் பாடி வாழும் வானம்பாடி உணவின்றி வருந்துமாறு வானம் வளம் சுரக்க மறுத்தாலும் தான் நீர்வளம் சுரத்தலில் தப்பாத காவிரி' என்று காவிரி இடையருது வளங்கொழிக்கும் இயல்பைப் புகழ்ந்து கூறியுள்ளார். மணிமேகலை ஆசிரியர் சாத்தனு ரும், மேகங்கள் நிலைமாறியமையால் மழை பொழியாது கோடைக்காலம் மக்களை மிகுதியாக வருத்தும்போதும் காவிரி தன் நிலை மாருமல் பெருக்கெடுத்து ஓடி வளங் கொழிக்கும் வள்ளன்மையை,

'கோள்நிலை திரிந்து கோடை நீடினும்
தான்நிலை திரியாத் தண்டமிழ்ப் பாவை'

என்று புகழ்ந்துள்ளார். அவர் காவிரியைத் '**தண்டமிழ்ப் பாவை**' என்று குறித்தமை நினைவில் கொள்ளத்தக்கது. தமிழ் நாட்டின் வளத்துக்கும், பெருமைக்கும், நாகரிகத்துக் கும் காரணமாக இருத்தலினுலேயே அவர் காவிரியை அப்பெயரால் குறித்தனர். காவிரியாறு சோழ நாட்டில் பாய்ந்து வளஞ் செய்தாலும் அவ்வளம் தமிழ்நாடு முழுவதற்கும் சொந்தமானது என்பதும் அதனுல் விளங்கு கின்றதன்றே!

**வற்கடத்தும் வளம் குன்ருமை:** பொருநராற்றுப் படை என்ற மற்ருெரு நூல் காவிரியின் வற்ருத வளத்தினைப் பின்வருமாறு பாராட்டுகிறது: 'கோடை வெம்மையால் மரம், செடி, கொடிகள் யாவும் கருகினுலும், மேகம் கடலில் நீரை முகக்க மறந்தாலும், மழைவளம் சுருங்கிப் பெரிய பஞ் சமே ஏற்பட்டாலும் காவிரி தன் வளம் சுரத்தலில் தவருது. அவ்வாறு காவிரி வளம் சுரத்தலால் சோழ நாட்டில் வயல் வளம் சிறந்து திகழ்கிறது. உழவர்கள் பயிர்விளேவேற்றி அறுவடை செய்து நெல்லை மலையெனக் குவிக்கின்றனர். அவர்களுடைய வீடுகளில் உள்ள நெற்குதிர்களில் எல்லாம் இடமே இல்லாதபடி நெல் நிரம்பிக் கிடக்கிறது. இங்ஙனம்

சோழ நாட்டில் காவிரித் தாயின் கருணையால் ஒரு வேலி ஆயிரம் கலமாக விளைகிறது. அத்தகைய வளம் மிகுந்த காவிரி சூழ்நாடு,' என்று காவிரியின் செல்வச் சிறப்பை உள்ளது உள்ளவாறே சித்திரித்துக் காட்டுகிறது அந்நூல்.

**சிலப்பதிகாரச் சித்திரம் :** இனி, காவிரித்தாய் அளிக்கும் வளங்களைக் காண்போம் : 'காவிரியில் புதுப்புனல் பெருக்கெடுத்து ஓடுவதால் உழவர்கள் ஆரவாரத்துடன் பற்பல தொழில்களில் ஈடுபடுகின்றனர். மதகுகளின் வழியே நீர் சலசல எனப் பண் இசைத்துப் பாய்ந்தோடுகிறது. நீர்ப் பெருக்கைத் தாங்காமல் கரைகள் உடைந்தமையால் காவிரி நீர் பேரிரைச்சலோடு பெருகியோடுகிறது ஒரு புறம். ஆடவரும் மகளிரும் புதுப் புனலாடிப் பொங்கும் இன்ப வெள்ளத்தில் மூழ்கி ஆரவாரிக்கின்றனர் மற்றொருபுறம். இங்ஙனம் பல்வேறுபட்ட ஒலிகளும் ஒருங்கு கலந்தார்ப்பக் காவிரித்தாய் கைவீசி நடந்து வருகிறாள்,' என்று காவிரி தரும் வளத்தைச் சித்திரித்துக் காட்டுகிறார் இளங்கோவடிகள்.

> " உழவர் ஓதை மதகு ஓதை ;
> உடைநீர் ஓதை ; தண்பதங்கொள்
> விழவர் ஓதை ; சிறந்தார்ப்ப
> நடந்தாய் வாழி காவேரி "

என்பது அவர் காட்டும் அழகிய ஓவியமாம்.

**மணியும் முத்தும் மாண்புறக் கொழித்தல் :** நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தர் காவிரிக் கரையில் உள்ள திருவையாறு என்னும் திருப்பதியைப் புகழ்ந்து கூறும் வாயிலாகக் காவிரியை அழகாகப் பாராட்டுகிறார். காவிரியாறு சங்கமுகத் துறையில் கடலில் விரைந்து சென்று கலக்கிறது. அவ்விரைவினால் கடலில் உள்ள சங்குகள் காவிரியாற்றில் கலந்து எதிரேறி வந்து ஐயாற்றை அடைகின்றன. இரவு முழுதும் அச்சங்குகள் ஒரு மணல் திட்டில் இன்பமாகத் தங்கி விலையுயர்ந்த முத்தினை ஈனுகின்றன. அங்ஙனம் ஈன்ற முத்துக்களைக் காவிரி அன்னையின் அலைகளாகிய கருணைக் கரங்கள் வாரிக் கொண்டுவந்து கரையில் கொழிக்கின்றன. இங்ஙனம் மதிப்புயர்ந்த முத்துக்களைக் கொழித்து

ஓடுகிறதாம் காவிரி. பெரியாழ்வாரும், திருமங்கை மன்னனும், 'காவிரி சந்தனத்தையும் மணிகளையும் அரித்துக் கொண்டு வந்து கருமுகில் வண்ணனுடைய அடிவருடி வழிபடுகிறது,' என்று ஸ்ரீரங்கத்தைப்பற்றி வருணிக்கின்றனர்.

**காவிரி நாட்டின் நெல் வளம்:** கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பர், 'காவிரி நாடு செந்நெல், கரும்பு, கமுகு முதலியன விளைந்து கடத்தற்கரிய வழியினை உடையதாக விளங்குகிறது,' என்று கூறும் முகத்தால் அவற்றிற்குக் காரணமான காவிரியின் சிறப்பைக் குறிப்பாகப் பாராட்டுகிறார். 'காய்த்த செந்நெல்லின் காடு சூழ்காவிரி நாடு' எனப் போற்றுகிறார் சேக்கிழார். 'காவேரியால் விளை சோழ மண்டலம்' என்று சிறப்பிக்கிறார் அருணகிரியார். மற்றும் 'சோழ வளநாடு சோறுடைத்து' என்று ஔவையார் கூறிய அழகிய வாக்கும், 'சோற்றால் மடையடைக்கும் சோணாடு' என்ற தொடரும் சோழ நாட்டின் சோற்றுப் பெருமையை விளக்குகின்றன. அவை சோற்றுப் பெருமையை மட்டுமா விளக்குகின்றன? அச்சோற்றுக்குக் காரணமான காவிரியின் கருணைப் பெருக்கினை யன்றோ விளக்குகின்றன அத்தொடர்கள்! 'ஒரு பெண் யானை படுத்திருக்கக் கூடிய நிலத்தில் ஏழு களிறுகளைக் காத்தற்குரிய நெல் விளையும் வளமான நிலங்களைக் கொண்டது சோழ நாடு,' என்று சோழநாட்டின் நெல் வளத்தைப் புகழ்கிறார் பண்டைப் புலவரொருவர்.

**பொன் கொழிக்கும் பொன்னி:** காவிரி அளிக்கும் இத்தகைய வளத்தினைப் பாராட்டி இதற்குப் 'பொன்னி' என்ற பொருட் சிறப்பினையுடைய அழகிய பெயரைச் சூட்டி மகிழ்ந்தனர் நம் பண்டைச் சான்றோர். காவிரியின் நீரில் பொன் அணுக்கள் கலந்திருப்பதால் அப்பெயர் வழங்கியது என்றும், காவிரி நீர் பொன்னைக் கொழிப்பதால் அப்பெயர் பெற்றதென்றும் அறிஞர் கூறுகின்றனர். 'மாடு பொன் கொழி காவிரி' என்று சேக்கிழாரும் இந்நீர்மையைப் புகழ்ந்துள்ளார். காவிரி பொன்னைக் கொழிக்கின்றதோ, இல்லையோ, அதன் நீர்வளத்தால் அது தோன்றும் இடத்திலிருந்து கட

லுடன் கலக்கும் இடம் வரையிலும் சிறப்பாகச் சோழ நாட்டிலும் செல்வம்கொழிப்பது உண்மையே யன்றோ! செல்வத்தைப் பொன் னென்பது மரபு. அவ்வாறு பொன்னைக் கொழிக்கும் காரணத்தால் காவிரிக்குப் 'பொன்னி,' எனப் பெயர் அமைந்தது என்பதும் சாலப் பொருத்தமானது அன்றோ ?

**தண்ணீரும் காவிரியே!**: இங்ஙனம் வளஞ் செய்யும் காரணத்தால் 'ஆறு' என்ற பெயர் காவிரியையே குறிக்கும் சிறப்புப் பெயராக அமைந்தது. அது மட்டுமா! அக்காவிரி பாய்ந்து செல்வம் செழிக்கும் சோழ நாடுதான் 'நாடு' என்ற சிறப்பைப் பெற்றது. அத்தகைய காவிரி நாட்டை ஆள்கின்ற அரசனாகிய சோழன்தான் 'வேந்தன்' என்ற சிறப்பைப் பெற்றான்.

> 'தண்ணீரும் காவிரியே; தார்வேந்தன் சோழனே;
> மண்ணாவதும் சோழ மண்டலமே'

என்ற தனிப்பாடல் செய்யுள் இக்கருத்தை நன்கு விளக்குகின்றது. இத்தகைய சிறப்பு வேறெந்த நதிக்கும் கிடைத்ததில்லை.

**புண்ணிய நன்னீர்**: காவிரி உற்பத்தியாகும் தலைக் காவிரியும் அது கடலோடு கலக்கும் காவிரிப்பூம்பட்டினத்துச் சங்கமுகத் துறையும் பண்டு முதல் இன்றளவும் புண்ணியத் துறைகளாகக் கருதப்பட்டு வருகின்றன. 'தண்ணறுங் காவிரித் தாதுமலி பெருந்துறைப் புண்ணிய நன்னீர்' என்று இளங்கோவடிகள் காவிரிப்பூம் பட்டினத்துச் சங்க முகத் துறையைப் புண்ணிய தீர்த்தமாகப் போற்றியுள்ளார். நாவுக்கரசர், 'காவிரி நதி முழுவதும் புண்ணியத் தீர்த்தமேயாம்,' என்ற கருத்தில் இதனைப் 'பொன்னித் தீர்த்தம்,' என்று புகழ்ந்துள்ளார். 'கங்கையிற் புனிதமாய காவிரி' என்று கம்பர் இதன் புனிதத் தன்மையைப் போற்றுகிறார். காவிரி தன் புனிதத்தன்மையால், 'தென்னாட்டுக் கங்கை,' என்று இன்றும் மதிக்கப்பெற்று வருகிறது. அளப்பரும் தீவினை செய்து பெரிய பாவத்தை அடைந்தவர்கள் பாவத்தைப் போக்கிக் கொள்ளக் கன்னியா குமரித்துறையில் நீராடிப் பின்னர்க் காவிரியின் சங்கமுகத் துறையிலும் நீராடுதல்

பண்டைய வழக்கமாக இருந்தது என்பது மணிமேகலையில் வரும் வரலாறு ஒன்றால் விளங்குகிறது. ஐப்பசித் திங்களில் ‘ துலாமுழுக்கு ’ என்னும் புண்ணிய நீராட்டிற்காக நாட்டின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் இச்சங்கமுகத் துறைக்கு வருவது இன்றும் வழக்கமாயுள்ளது. ஆடி மாதம் பதினெட்டாம் நாளன்று காவிரியில் இரு கரையும் நிரம்பப் புதுப்புனல் பெருகி ஓடும். மக்கள் அந்நாளை நன்னாளாகக் கருதிப் பற்பல மங்கலப் பொருள்களையும் காவிரித் தாய்க்குக் காணிக்கையாக வழங்கி வழிபாடு செய்து மகிழ்கின்றனர். இங்ஙனம் பல ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகப் புனிதத் திருநதியாகக் காவிரி போற்றப்பெற்று வருகின்றது.

**வாழச் செய்யும் காவிரி வாழ்த்தவும் பயன்படுதல் :** காவிரியின் இத்தகைய வளத்தையும் பெருமையையும் நினைவிற்கொண்டே பண்டைக்காலத்தில் வாழ்ந்த புலவர் பெருமக்களும் பெரியோர்களும் அரசர்களையும் மக்களையும் வாழ்த்தும்போது, ‘ காவிரி மணலினும் பலவாக வாழிய ’ என்றும், ‘ கல்லும் காவிரியும் உள்ளவரையிலும் வாழிய ’ என்றும் வாழ்த்துவதை மரபாகக் கொண்டிருந்தனர். சோழன் மாவளத்தான் என்ற அரசனைத் தாமப்பல் கண்ணனார் என்ற புலவர், ‘ காவிரியின் எக்கரிட்ட மணலினும் சிறக்க நின் ஆயுள்,’ என்று வாழ்த்தியுள்ளார். இங்ஙனமாகக் காவிரியின் நீர் சோழரை வளவராக்கவும், சோழ நாட்டை வளநாடாக்கவும் பயன்பட்டதோடமையாது, அதன் மணல் அவரையும் அவர் நாட்டு மக்களையும் வாழ்த்தவும் பயன்பட்டது என்றால், காவிரியின் பெருமையை என்னென்று எடுத்தியம்புவது !

### அருஞ்சொற்பொருள்

குடகுநாடு - மைசூர்ச் சீமைக்கு மேலேயுள்ள மலைநாடு. கோடா - வளையாத. நங்கை - பெண்களிற் சிறந்தவள். ஊழி - நெடுங்காலம். உய்க்கும் - பிழைக்கச் செய்யும். களி - மகிழ்ச்சி. துளும்ப - தோன்ற. செவிலி - வளர்ப்புத்தாய். கோள் - செவ்வாய், புதன் முதலிய கிரகங்கள். பாவை - பதுமை ; பதுமைபோன்ற பெண்ணுக்கு உவமையாகு பெயர். ஓதை - ஓசை. பொன்னி - பொன்னைத் தன் அலைகளால் கொழித்து வருதல் பற்றிக் காவிரிக்கு வந்த பெயர்.

### கேள்விகள்

1. சோழர் தம் குலக்கொடியாய்க் காவிரி எவ்வாறு விளங்குகிறது ?
2. தாயன்பு எத்தன்மையானது ?
3. காவிரித்தாய் தன் சேய்களை எவ்வாறு புரக்கின்றாள் ?
4. காவிரியைத் தமிழ்ப் புலவர்கள் எவ்வாறு போற்றியுள்ளனர் ?
5. வாழச் செய்யும் காவிரி வாழ்த்தவும் பயன்படுவது எவ்வாறு ?

### பயிற்சி

1. காவிரியின் பெருமைகளைச் சுருக்கிப் பதினைந்து வரிகள் எழுதுக.

2. காவிரியைப் புலவர்கள் போற்றிய முறையைத் தொகுத்து வரைக.

3. உங்கள் ஊரில் அல்லது மாவட்டத்திற் பாயும் ஆற்றைப் பற்றி (இப்பாடத்தின் துணையைக் கொண்டு) நீவிர் அறிந்த வரை ஒரு கட்டுரை எழுதுக.

148652
TB
031(10)
N52

RGR
699

# TAMIZH ILAKKIYA MALAI

**BOOK II FOR FORM V**

**(SPECIAL COURSE)**

BY

**Panditha Vidwan L. P. KR. RAMANATHAN CHETTIAR**
*Associate Professor, Annamalai University*

★

***Price As. 10/-***